# இராஜ்ஜியத்தின் ஜீவியம்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

© Harvestime International Institute

# பொருளடக்கம்


இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு? . . . . . . . . 03

குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள் . . . . . . . 04

அறிமுகம் . . . . . . . . . . . . . 05

பாடத்தின் நோக்கங்கள் . . . . . . . . . . 07

1. கண்ணுக்கு புலப்படாத இராஜ்ஜியம் . . . . . . 08

2. இராஜாதி இராஜா . . . . . . . . . . 18

3. கடந்தகால, நிகழ்கால, எதிர்கால இராஜ்ஜியம் . . . . . . 36

4. இராஜ்ஜியத்தின் திறவுகோல் . . . . . . . 57

5. இராஜ்ஜியத்திலிருந்து தள்ளப்பட்டவன் . . . . . . 72

6. மாதிரிகளும் கொள்கைகளும்: அறிமுகம் . . . . . . . 87

7. இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்: இராஜ்ஜியத்தின் கொள்கைகள் - பகுதி 1 . 99

8. இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்: இராஜ்ஜியத்தின் கொள்கைகள் - பகுதி 2 . 112

9. இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்: இராஜ்ஜியத்தின் கொள்கைகள் - பகுதி 3 . 129

10. இராஜ்ஜியத்தின் உவமைகள் . . . . . . . 137

11. இராஜ்ஜியத்தின் பிரதிநிதிகள் (தூதர்கள்) . . . . . . . 146

சுய பரீட்சைக்கான விடைகள் . . . . . . . . 160

# இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு?

### கையேட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

**குறிக்கோள்கள்:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னா் அவைகளை வாசியுங்கள்.

**திறவுகோல் வசனம்:** அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.

**அதிகாரத்தின் பொருளடக்கம்:** ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

**சுயபரீட்சை:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**மேலதிக படிப்பினைக்கு:** தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்.

**இறுதி பரீட்சை:** நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னா் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

மேலதிகமாக தேவைப்படுபவை

King James வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

### முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும், அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக் கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

### இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின் சகல பகுதிகளையும் கலந்து ரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்.)

**மேலதிக படிப்பினைக்கு:** இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத் திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

**தொகுதி: பிரதிநிதி**

**பாடம்: இராஜ்ஜியத்தின் ஜீவியம் : மாதிரியும் கொள்கைகளும்**

# அறிமுகம்

அனைத்து மனிதரும் இந்த உலகில் ஒரு இயற்கை இராஜ்ஜியத்தில் வாழுகின்றனர். அவர்கள் தேசத்தின் ஒரு பகுதியான நகரம் அல்லது கிராமத்தில் வாழலாம். அந்த தேசம் உலகின் ஒரு இராஜ்ஜியத்தில் உள்ளது.

ஏராளமான பேரரசுகள் இருக்கின்ற இவ்வுலகில் இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்களும் இருக்கின்றன. உயிருடன் இருக்கின்ற ஒவ்வொருவரும் இவ்விரு இராஜ்ஜியத்தினகும் குடியிருப்பாளர்களாவர். அந்த இராஜ்ஜியங்களாவன: சாத்தானின் இராஜ்ஜியம் அல்லது தேவனது இராஜ்ஜியம்.

இப்பாடத்திட்டம் தேவனுடைய இராஜ்ஜியம் பற்றி அவதானம் செலுத்தும். இந்த இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்கள் பற்றியும், அதன் ஆட்சியானர்கள், மற்றும் குடியிருப்பாளர்கள் பற்றியும் அறிமுகப்படுத்தும். இது தேவ இராஜ்ஜியத்தை பெறுவதற்கான அனுமதியையும், ஆவிக்குரிய திறவுகோலைகளையும் அளிப்பதோடு, தேவ இராஜ்ஜியதத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கான காரியங்களைக் குறித்ததான எச்சரிப்புகளையும் கொடுக்கின்றது. கடந்தகால, எதிர்கால, வருங்காலத்தின் இராஜ்ஜியம் பற்றியும் ஆராயப்படுவதோடு. இராஜ்ஜியம்பற்றி விளக்கும் உவமைகள், அதன் மாதிரியும் கொள்கைகளும் வலியுறுத்தப்படும்.

தேவ இராஜ்ஜியத்தைக் குறித்ததான இப்படிப்பு ஏன் முக்கியமானது?

இயேசு அவரை பின்பற்றியோருக்கு கூறினார்:

> **ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)**

இயேசு தமது இறுதி வடிவத்துடன் அவரது இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முதல், உலக நாடுகளுக்கெல்லாம் தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தி பரவ வேண்டும் என விரும்பினார்.

தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தியை போதிக்கும் பொருட்டு அந்த தேவ இராஜ்ஜியத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். முதலாவதாக நீங்கள் இராஜ்ஜியத்தை திறவுகோலை பாதுகாப்பவராக மாற வேண்டும், அதாவது முதலில் நீங்கள் தேவ இராஜ்ஜியத்தை அனுபவிக்க வேண்டும்.

கடந்த காலத்தை பொறுத்தளவில் தேவ இராஜ்ஜியத்தின் இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் ஊழியம் சரியாகவே முக்கிய இடத்தை பெறுகின்றது. ஆனால் தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்திக்கு போதுமான அழுத்தம் அவ்வேளையில் கொடுக்கப்படவில்லை. இயேசு அவரது காலத்தில் வாழ்ந்த மதத்தலைவர்களுக்கு கூறினார்:

மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை. (மத்தேயு 23:13)

கிறிஸ்துவின் வாழ்க்கையின் மைய நோக்கமாக தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தியே இருந்தது. அவர் பரலோக இராஜ்ஜியத்தின் வருகையையை அறிவித்தே தனது பூலோக ஊழியத்தை ஆரம்பித்தார். (மத்தேயு 4:17) அவர் தனது மண்ணுலக ஊழியத்தை முடிக்கின்றபோதும் தேவஇராஜ்ஜியம் சார்ந்த விடயங்களை பேசியே முடித்தார். (அப்போஸ்தலர் 1:3) அவரது மண்ணுலக ஊழியத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் தேவஇராஜ்ஜியமே முக்கியத்துவம் பெற்றதாயிருந்தது.

**அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடையராஜ்யத்தைக் குறித்துப்பிரசங்கிக்க வேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார். (லூக்கா 4:43)**

தேவஇராஜ்ஜியத்தைக் குறித்து இயேசு மிகப்பெரிதான அக்கறையைக் கொண்டிருந்தார். அவரது போதனைகள் மற்றும் உவமைகள் யாவும் தேவஇராஜ்ஜியத்தைக் குறித்தே கவனம் செலுத்தியது. அவரது அற்புதங்கள் தேவஇராஜ்ஜியத்தின் ஆளுகையை நடைமுறைப்படுத்துவதாக அமைந்தது.

'தேவஇராஜ்ஜியம்' மற்றும் 'பரலோக இராஜ்ஜியம்' என்ற சொற்றொடர்கள், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புத்தகங்களில் நூறு தடவைகளுக்கு மேல் பாவிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக அதை தேடும்படியாகவும், அதற்காக ஜெபிக்கும்படியாகவும், அதை பிரசங்கிக்கும் படியாகவும் கேட்கப்பட்டுள்ளோம்.

நாம் இந்த இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கும், அங்கு வசிப்பதற்கும், கட்டளையை நிறைவேற்றுவதற்காக நற்செய்தியை பிரசங்கிப்பதற்கும், தேவஇராஜ்ஜியத்தின் கொள்கைகளையும் மாதிரியையும் விளங்கிக் கொள்வது அவசியமாயிருக்கின்றது. இப்பாடத்தின் நோக்கமும் இதுவேயாகும்.

தேவஇராஜ்ஜியத்தின் கொள்கைகளை விளங்கிக் கொள்வதற்கு பெரிதான நோக்கமுண்டு. தேவ இராஜ்ஜியத்தின் அறிவை பெறுவதும், அதை அனுபவமாக்கிக் கொள்வதும், உங்கள் வாழ்வின் மைய நோக்கமாக இருக்க வேண்டும்.

மக்கள் வாழ்க்கையில் அர்த்தத்தை தேடுகின்றனர். வாழுவதற்கும் இறப்பதற்குமான காரணத்தை அறிய விரும்புகின்றனர். உங்கள் வாழ்விலும் ஊழியத்திலும் தேவஇராஜ்ஜியத்தை மைய நோக்கமாக கொள்ளுங்கள். எதிராளிகளால் தேவஇராஜ்ஜியத்தை அசைக்க முடியாது. நீங்கள் உங்களது முழு விசுவாசத்தையும் கொடுக்க வேண்டியதும் ஓர் நித்திய காரணமாக இருக்கின்றது.

# பாடத்தின் நோக்கங்கள்

இப்பாடத்திட்டத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ கண்ணுக்கு புலப்படாத ஆவிக்குரிய அரசாட்சியை அடையாளம் காணவும்,
- ☐ கண்ணுக்கு புலப்படாத ஆவிக்குரிய அரசாட்சியின் ஆட்சியாளர்களை அடையாளம் காணவும்,
- ☐ கண்ணுக்கு புலப்படாத ஆவிக்குரிய அரசாட்சியின் குடிகளை அடையாளம் காணவும்,
- ☐ தேவராஜ்ஜியத்திற்குள் எவ்வாறு நுழையலாம் என்பதை விளக்கவும்,
- ☐ கடந்தகால, தற்கால, எதிர்கால தேவ ராஜ்ஜியங்களைக் குறித்து சுருக்க குறிப்புகளை கொடுக்கவும்,
- ☐ தேவராஜ்ஜியத்திற்குள் நுழைவதை தடுக்கும் பாவங்களை பட்டியலிடவும்,
- ☐ முக்கியமான ஆவிக்குரிய மாதிரிகளையும் கொள்கைகளையும் அடையாளம் காணவும்,
- ☐ தேவராஜ்ஜியத்தின் மெய்யான அடிப்படைக் கொள்கைகளை புரிந்து கொள்ளவும்,
- ☐ தேவராஜ்ஜியத்தின் உவமைகளை புரிந்து கொள்ளவும்,
- ☐ தேவராஜ்ஜியத்தின் நற்செய்தியை பரப்பும் தேவராஜ்ஜியத்திற்குரிய ஸ்தானாபதிகளாகுதல்,
- ☐ தேவராஜ்ஜியம் பற்றி சுயாதீனமாக ஆய்வுகளை தொடரவும்,
- ☐ இயேசு கிறிஸ்துவையும் அவரது படிப்புகளையும் சுயாதீனமாக ஆய்வுகளை தொடரவும் முடியும்.

## அதிகாரம் ஒன்று

# கண்ணுக்கு புலப்படாத இராஜ்ஜியம்

**நோக்கங்கள்:**

இந்த அத்தியாயத்தை முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ கண்ணுக்கு புலப்படாத இயற்றை மற்றும் ஆவிக்குரிய உலகங்களை அடையாளம் காணவும்,
- ☐ ‘இராஜ்ஜியம்’ என்ற வார்த்தையை விளங்கப்படுத்தவும்,
- ☐ இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்களையும் அடையாளம் காணவும்,
- ☐ ஆவிக்குரிய அரசாட்சியின் ஆட்சியாளர்களை அடையாளம் காணவும்,
- ☐ ஆவிக்குரிய அரசாட்சியின் குடிகளை அடையாளம் காணவும்,
- ☐ ‘சாத்தானின் இராஜ்ஜியம்’ என்பதை விளங்கப்படுத்தவும்,
- ☐ ‘தேவ இராஜ்ஜியம்’ என்பதை விளங்கப்படுத்தவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

> **ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)**

## அறிமுகம்

இந்த அதிகாரம் பௌதீக மற்றும் ஆவிக்குரிய உலகங்ளையும் இணைத்து அவதானிக்கும். பௌதீக உலகத்தில் நீங்கள் காண்கிறீர்கள், கேட்கிறீர்கள், தொடுகிறீர்கள், அல்லது ருசிபார்க்கிறீர்கள். இது உங்களைச் சுற்றிலுமிருக்கின்ற கண்ணுக்கு புலப்படும் உலகம்.

ஆனால் உங்களைச் சூழவும் மற்றொரு உலகமும் உண்டு. இது கண்ணுக்கு புலப்படாத உலக மாயிருக்கின்றது. எனவே இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்களுண்டு. இந்த அதிகாரத்தில் நீங்கள் இந்த ஆவிக்குரிய இராஜ்ஜியங்களையும், அவைகளின் ஆட்சியாளர்கள், மற்றும் குடியிருப்பாளர்கள் பற்றி அறிந்து கொள்வீர்கள். நீங்கள் தேவராஜ்ஜியம் பற்றியும், சாத்தானின் இராஜ்ஜியம் பற்றியும் கற்பீர்கள்.

## பௌதீக மற்றும் ஆவிக்குரிய உலகம்

மனிதன் இரு உலகிலும் வாழ்கின்றான். அது பௌதீக மற்றும் ஆவிக்குரிய உலகமாயிருக்கிறது. பௌதீக உலகத்தில் நீங்கள் காண்கிறீர்கள், கேட்கிறீர்கள், தொடுகிறீர்கள், அல்லது ருசிபார்க்கிறீர்கள். இது கண்களுக்கு புலப்படுவதாகவும், தொட்டு உணரக்கூடியதாகவும் இருக்கின்றது. இந்த பௌதீக உலகிலுள்ள நாடு, தேசம், நகரம் அல்லது கிராமத்தில் நீங்கள் வாழுவீர்கள். உலகத்தில் கண்ணுக்கு புலப்படும் ஓர் கண்டத்திலுள்ள ஓர் அரசாங்கத்தின் கீழ் உங்களது குடியிருப்பு இருக்கும். உங்களது சூழலில் வசிக்கின்ற மக்களை உங்களால் காண முடியும். உங்களால் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும். உங்களைச் சுற்றிலுமுள்ள காட்சிகளையும், ஒலிகளையும், வாசனைகளையும் அனுபவிக்க முடியும்.

ஆனால் நீங்கள் வாழும் உலகில் மற்றொரு உலகமும் இருக்கின்றது. அது ஆவிக்குரிய உலகமாகும். உங்களது சரீர கண்களால் அதனை உங்களால் காண முடியாது, எனினும் பௌதீக உலகில் அது இருப்பது உண்மையே. பவுல் இந்த பௌதீக மற்றும் ஆவிக்குரிய உலகின் பிரிவைப்பற்றி பேசுகின்றார்:

**வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு. (1 கொரிந்தியர் 15:40)**

பௌதீக உலகில் வாழும் அனைவருக்கும் சரீரம் இருக்கின்றது. ஆனாலும் மனிதன் ஆவிக்குரியவ-னாக இருப்பதோடு, அவனுக்கு நித்தியமாக ஆவியும், ஆத்துமாவும் இருக்கின்றது. மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் கொண்டவன். பௌதீக உலகத்தில், பௌதீக சரீரம் கொண்டவராக இருப்பதைப் போலவே ஆவிக்குரிய உலகத்தில் (ஆவியும் ஆன்மாவும்) ஒரு பகுதியையும் கொண்டவராக இருக் கின்றான்.

## இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்கள்

இந்த பௌதீக உலகில் இரண்டு இராஜ்ஜியங்கள் இருக்கின்றன. பௌதீக உலகின் இராஜ்ஜியத்தை மக்கள் அல்லது அரசன் ஆளுகை செய்கின்றான். வேதாகமமும் உலகத்தின் இராஜ்ஜியங்களைக் குறித்து பேசுகின்றது. உலகத்தின் இராஜ்ஜியங்கள் தற்போது சாத்தானின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

**மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:**

**நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான் (மத்தேயு 4:8-9)**

எதிர்காலத்தில் உலகத்திலுள்ள அனைத்து இராஜ்ஜியங்களும் தேவனுடைய இராஜ்ஜியமாக மாறும், அதை தேவனே ஆட்சி செய்வார்.

**ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்க-ளிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. (வெளிப்படுத்தல் 11:15)**

பௌதீக உலகத்தில் அரசனே ஆட்சி செய்கின்ற அதிகாரம் கொண்டவனாக இருப்பான். சகல பிரதேசங்களும், அதன் குடிகளும் அவனுக்குரியதாக இருக்கும். அவன் ஜீவனுக்கும் மரணத்திற்கும் அவனே உத்தரவாதியாக இருப்பான்.

ஆவிக்குரிய உலகிலும் இரண்டு இராஜ்ஜியங்கள் இருக்கின்றன, ஒன்று தேவனுடைய இராஜ்ஜியம், மற்றது சாத்தானுடைய இராஜ்ஜியம். சாத்தானுடைய இராஜ்ஜியத்தை சாத்தானே ஆளுகை செய்வான், பிசாசுகள் என அழைக்கப்படும் ஆவிகளும், தேவனுடைய வார்த்தைக்கு எதிராக கிளர்ச்சியும் பாவமும் செய்யும் மனிதர்களும் அவனுக்கு கீழ்ப்பட்டிருப்பார்கள். தேவனுடைய இராஜ்ஜியம் பிதாவாகிய தேவ னாலும், குமாரனாகிய கிறிஸ்து இயேசுவினாலும் பரிசுத்த ஆவியினாலும் ஆளப்படுவதோடு, ஆவிக்குரிய சிருஷ்டிகளாகிய தேவதூதர்களும் தேவனுடைய வார்த்தைக்கு நீதியுடன் கீழ்ப்படிகின்ற சகல மனிதர்களையும் கொண்டிருக்கும்.

# தேவனுடைய இராஜ்ஜியம்

ஒரேயொரு தேவனுடைய இராஜ்ஜியம் இருக்கின்றபோதும், அது பல்வேறு விதங்களில் விவரிக்கப் படுகின்றது. தேவனுடைய இராஜ்ஜியமானது 'பரலோக இராஜ்ஜியம்' என்ற பெயரிலும் அழைக்கப் படுகின்றது.

இந்த இராஜ்ஜியம் பிதாவினதும் (மத்தேயு 26:29), இயேசுவினதும் (வெளிப்படுத்தல் 1:9), கிறிஸ்து இயேசுவினதும் (2 தீமோத்தேயு 4:1), தேவன் மற்றும் கிறிஸ்துவினதும் (எபேசியர் 5:5), 'நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்கும்' (வெளிப்படுத்தல் 11:15), நமது தேவனுடைய இராஜ்ஜியமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் (வெளிப்படுத்தல் 12:10), மற்றும் 'அன்பின் குமாரனுடைய' இராஜ்ஜியமாகவும் (கொலோசெயர் 1:13), வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த பெயர்கள் அனைத்தும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு கூறப்படுகின்றது. எனவே இப்பாடத்தில் எளிமையான நோக்கத்திற்காக 'தேவனுடைய இராஜ்ஜியம்' என்ற தலைப்பே பாவிக்கப்படுகின்றது.

தேவனுடைய இராஜ்ஜியம் என்பது ஒரு பட்டமல்ல. மதப்பிரிவுகள் மனிதரால் அல்லது சபைக் குழுக்களால் ஏற்படுத்தப்பட்ட நிறுவனமாகும். அவர்கள் நடைமுறைக்காரணங்களுக்காகவே நிர்வாக அமைப்பு முறைமையை நிறுவியுள்ளனர். பெப்டிஸ்ட் சபை, மக்கள் தேவ சபை, மெதடிஸ் சபை, லூத்தரன் சபை என்பன பெரிய, முக்கிய சபை நிறுவனங்களாக காணப்படுகின்றன.

வேதாகமம் கூறும் மெய்யான சபை மத அமைப்போ அல்லது நிறுவனமோ அல்ல. அந்த மெய்யான இராஜ்ஜியம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குரியவர்களாக மாறும் அனைவரினாலுமே உருவாகின்றது. உலக ஜாதிகளில் தேவனால் சுவிசேஷத்திற்கூடாக ஸ்தாபிக்கப்பட்ட இராஜ்ஜியமானது, உண்மையான சபையாக ஆவிக்குரிய சரீரத்தில் ஐக்கியமாக இருக்கும். தேவ இராஜ்ஜியத்திற்குரிய சகல ஆண் களாலும் பெண்களாலும் இத்திருச்சபை உருவாகின்றது.

சபையானது தேவ இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்து கற்பிப்பது மாத்திரமல்ல, அது தேவ இராஜ்ஜியத்தின் வாழ்க்கையின் மாதிரியையும் வழங்குகின்றது. சபையானது இராஜ்ஜியத்தின் மாதிரிகளினாலும் கொள்கைகளினாலும் நடத்தப்படுவதோடு அதன் இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவின் போதனையினாலும் முன்மாதிரியினாலும் ஆளுகை செய்யப்படுகின்றது.

தேவ இராஜ்ஜியம் கடந்த காலத்திலும் இருந்தது, நிகழ்காலத்திலும் இருக்கின்றது, வருங்காலத்திலும் இருக்கும், எனவே சகல காலங்களிலும் வெவ்வேறு வடிவங்களில் இருக்கும். தற்கால பௌதீக உலகில், தங்களுடைய தனிப்பட்ட வாழ்வில் இயேசுவை இராஜாவாக கொண்டுள்ள சகல ஆண்களுடனும், பெண்களுடனும், சிறுவர்களுடனும், சிறுமிகளுடனும் தேவ இராஜ்ஜியம் இருக்கின்றது. எதிர்காலத்திலும் கண்ணுக்கு புலப்படும் தேவ இராஜ்ஜியம் இருக்கும். இப்பாடத்திட்டத்தில் கடந்தகால, நிகழ் கால, எதிர்கால தேவஇராஜ்ஜியம் குறித்து மேலதிகமாக பின்னர் கற்றுக் கொள்வீர்கள்.

தேவனுடைய இராஜ்ஜியமானது இவ்வலகத்திற்குரிய இராஜ்ஜியமாக இராமல் ஆவிக்குரிய இராஜ்ஜியமாக இருக்கின்றது. அதை ஆவிக்குரிய சிந்தையோடே விளங்கிக் கொள்ள வேண்டும்:

> **ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக் கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1 கொரிந்தியர் 2:14)**

## இராஜ்ஜியத்தின் ஆட்சியாளர்கள்

சாத்தானின் இராஜாஜ்ஜியம் சாத்தானால் ஆளப்படுகின்றது. அவனையும், அவனது இராஜ்ஜியம் பற்றியும் இப்பகுதியின் 'மேலதிக படிப்பினைக்கு' என்ற பகுதியில் மேலதிகமாக கற்றுக் கொள்வீர்கள். தேவனுடைய இராஜ்ஜியத்திலே, சாத்தான் முதலில் அழகிய தேவதூதனாக உருவாக்கப்பட்டவன், ஆனால் அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தை கைப்பற்ற முயற்சித்தான். அவனது இந்த புரட்சியைப்பற்றி நீங்கள் ஏசாயா 14:12-17 மற்றும் எசேக்கியேல் 28:12-19 வரையும் வாசிக்கலாம். இன்னும் சில தூதர்களும் இவனது புரட்சியில் சேர்ந்துக்கொண்டபடியால் தேவனால் அவர்கள் துரத்தப்பட்டார்கள். இதனால் அவர்கள் தங்களுக்கான இராஜ்ஜியத்தை அமைத்துக் கொண்டார்கள், அது சாத்தானின் இராஜ்ஜியம் என அழைக்கப்படுகின்றது.

தேவனுடைய இராஜ்ஜியம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற திரித்துவ தேவனால் ஆளுகை செய்யப்படுகின்றது. இந்த இராஜ்ஜியத்தின் ஆட்சியாளர்களைப்பற்றி மேலதிகமாக இரண்டாம் அதிகாரத்தில் கற்றுக் கொள்வீர்கள்.

## இராஜ்ஜியங்களின் மக்கள்

ஆட்சியாளர்களுக்கு மேலதிகமாக இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்களும் மக்களும் இருக்கின்றார்கள். அசுத்த அவிகள் என்றழைக்கப்படுகின்றவர்கள் சாத்தானின் இராஜ்ஜியத்தில் வசிக்கின்றார்கள். இந்த ஆவிகளால் சாத்தானின் இராஜ்ஜியத்திற்குரியவர்களிடம் உள்ளிடவும், கட்டுப்படுத்தவும், அவர்களை தமக்காக பயன்படுத்தவும் முடியும். அவைகளின் நோக்கம் ஆண்களையும் பெண்களையும் தீய செயல்களை செய்ய ஊக்குவிப்பதாகும்.

உலக இறுதிக்குள் சாத்தான் தனது இராஜ்ஜியத்திற்காக, அந்திக்கிறிஸ்து மற்றும் கள்ள தீர்க்கதரிசி என அழைக்கப்படும் இரண்டு பேரை உபயோகிப்பான். தேவ இராஜ்ஜியத்தை அகற்றிப்போடும் சாத்தானின் இறுதி ஏமாற்று வேலைதிட்டத்தின் பங்காளராக இவர்கள் இருப்பார்கள். தேவனுடைய இராஜ்ஜியத்திலும் மக்கள் இருக்கின்றார்கள். தேவ இராஜ்ஜியத்தின் ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஊழியம் செய்கின்ற ஆவிக்குரிய தூதர்களும் அங்கிருப்பார்கள். உலகத்தில் சாத்தானின் கட்டுப்பாட்டுக்குள் பிசாசுகள் கிரியை செய்யும், ஆனால் தேவதூதர்கள் தேவ சித்தத்தை செய்வார்கள்.

தேவதூதர்களும், பிசாசுகளும் ஆவிக்குரியவர்களாக இருக்கின்றபோதும், பௌதீக உலகில் அவர்கள் தங்களை புலப்படுகின்றவர்களாகவும், பேசுகின்றவர்களாகவும் வெளிப்படுவார்கள். பிசாசினால் பீடிக்கப்பட்ட மக்களை பலவிததங்களில் தீய வழிகளில் நடக்கவும், பேசவும் அவைகள் வைக்கின்ற வேளையில், தேவதூதர்கள் சிலவேளைகளில் புலப்படும் வடிவத்திலும் தோன்றுவார்கள்.

தேவஇராஜ்ஜியத்திலும், சாத்தானின் இராஜ்ஜியத்திலும் வசிக்கின்ற சகல மக்களும் உயிரோடு எழும்புவார்கள்.

## இராஜ்ஜியங்களுக்கான நுழைவு

இயேசு கூறிய உவமைகளில் ஒன்றில் சகல மனிதர்களும் சாத்தானின் இராஜ்ஜியத்திற்கு அல்லது தேவ இராஜ்ஜியத்திற்கு உரியவர்களாக இருப்பார்கள் என்று வெளிப்படுத்தினார். இயேசு உலகத்தை

வயலுடன் ஒப்பிட்டார். வயலில் இருந்த நல்ல விதைகள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பிள்ளைகள். கெட்ட விதைகள் அதாவது களைகளை பிறப்பித்த விதைகள் துன்மார்க்கமான பிள்ளைகளாக இருக்கின்றனர்:

**நிலம் உலகம். நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர். களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர். (மத்தேயு 13:38)**

மக்கள் இயற்கையான பிறப்பின் மூலம் சாத்தானின் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கின்றனர். சகலரும் பாவத்தில் பிறந்துள்ளதாக வேதாகமம் எமக்கு கற்றுத் தருகின்றது. அவர்கள் அடிப்படையில் பாவத்தன்மையுடனேயே அல்லது 'விதை'யுடனேயே பிறந்துள்ளார்கள் என்பதே இதன் அர்த்தம்.

**இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். (சங்கீதம் 51:5)**

**இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. (ரோமர் 5:12)**

**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, (ரோமர் 3:23)**

ஏனென்றால் நாம் அடிப்படையிலேயே பாவ சுபாவத்துடன் பிறந்தவர்கள், நாம் சாத்தானின் இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியினராக ஒரு நேரத்தில் இருந்தவர்கள். பரிசுத்த வேதாகமமாகிய தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையின் முழு செய்தியும், சாத்தானின் தீய இராஜ்ஜியத்திலிருந்து நீதியான தேவஇராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டுகின்றது.

மனிதர்கள் இயற்கையாக பிறப்பின்போது சாத்தானின் இராஜ்ஜியத்திலேயே பிறக்கின்றனர். ஆவிக்குரிய மறுபிறப்பின்மூலம் தேவ இராஜ்ஜியத்திற்குள் பிறக்க வேண்டும். 'இராஜ்ஜியத்தின் திறவுகோல்' என்ற நான்காம் பாடத்தில் இதைக் குறித்து கற்றுக் கொள்வீர்கள்

மீண்டுமாக பிறக்கின்றபோது எமது வதிவிடம் சாத்தானின் இராஜ்ஜியத்திலிருந்து தேவ இராஜ்ஜியத் திற்குள் மாற்றமடைகின்றது. அவர்கள் சாத்தானிலிருந்த தமது விசுவாசத்தை தேவனிடத்திற்கு மாற்றிக்கொள்கின்றனர். அவர்கள் தேவஇராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கின்றபோது, வாழ்வை ஆளுகை செய்கின்ற இந்த இராஜ்ஜியத்தின் கொள்கைகளை கற்றுக் கொள்ள வேண்டும். அது நீங்கள் புலம் பெயர்ந்துள்ள நாட்டின் புதிய வாழ்க்கை முறையை கற்றுக் கொள்வதற்கு ஒப்பானது. இப்பாடத் திட்டத்தில் இந்த முக்கிய கொள்கைகளைப்பற்றி அதிகமாக கற்றுக் கொள்வீர்கள்.

## இராஜ்ஜியங்களுக்கிடையிலான உறவுகள்

சாத்தானின் கிளர்ச்சியின்போதிருந்து, சாத்தானின் இராஜ்ஜியத்திற்கும் தேவ இராஜ்ஜியத்திற்குமிடையே ஆவிக்குரிய யுத்தம் ஆரம்பமாயிற்று. இவ்விரண்டு இராஜ்ஜியங்களுக்கிடையிலான யுத்தம் பற்றி வேதாகமத்தில் பதிவுகள் காணப்படுகின்றன.

உலகம் முழுவதும் முன்னெடுத்து நடத்தப்பட்ட இந்த ஆவிக்குரிய போராட்டம் மனம், ஆவி மற்றும் மனித ஆன்மாவில் பிரவேசித்துவிட்டது. சாத்தான் மனிதர்களை அவனது இராஜ்ஜியத்திற்குள் சிறைவைக்க முயற்சிக்கின்றான். இந்த ஏமாற்று முறைகளின் மூலம் ஆண்களையும் பெண்களையும் தற்காலிக பாவ வாழ்க்கையை மேற்கொள்ள வைக்கின்றான். தேவனுக்கு சொந்தமான ஆவியையும் ஆன்மாவையும் அவன் விரும்புகின்றான்.

> **திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

ஆவிக்குரிய போராட்டம் உலகின் முடியுபரியந்தமும் இருக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். 'ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு' என்ற தலைப்பில் சர்வ தேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடத்திட்டம் இதை ஆழமாக கற்றுக்கொள்ள உதவும். இப்பாடம் சாத்தானின் இராஜ்ஜியம், அவனது உத்திகள், அவனது ஆவிக்குரிய தந்திரோபாயம், தீய சக்திகளை தோற்கடிப்பது பற்றிய சத்தியங்களில் கவனம் செலுத்தும்.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

2. 1 கொரிந்தியர் 15:44-49லுள்ள இரண்டு பிரிவுகள் எவை?

..........................................................................................................................................................................

3. இன்று உலகிலுள்ள கண்ணுக்கு புலப்படாத இராஜ்ஜியங்கள் இரண்டும் எவை?

..........................................................................................................................................................................

4. இன்று உலகிலுள்ள கண்ணுக்கு புலப்படாத ஆட்சியாளர்கள் இருவரும் யார்?

..........................................................................................................................................................................

5. சாத்தானின் இராஜ்ஜியத்தில் வசிப்போர் யார்?

..........................................................................................................................................................................

6. தேவனுடைய இராஜ்ஜியத்தில் வசிப்போர் யார்?

..........................................................................................................................................................................

7. 'தேவனுடைய இராஜ்ஜியம்' மற்றும் 'பரலோக ராஜ்ஜியம்' என்ற இரண்டு சொற்தொடர்-களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

..........................................................................................................................................................................

8. 'இராஜ்ஜியம்' என்ற சொல்லின் வரைவிலக்கணம் என்ன?

..........................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

இப்பாடம் தேவனுடைய இராஜ்ஜியம் பற்றி படிக்க ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த அதிகாரத்தில் எமது கண்களுக்குப் புலப்படாத சாத்தானின் ஆவிக்குரிய இராஜ்ஜியம் பற்றியும் கற்போம். இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்களைப்பற்றியும் நீங்கள் புரிந்து கொள்வது அவசியம்.

'ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு' என்ற தலைப்பில் சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடத்திட்டம் இந்த இராஜ்ஜியத்தை பற்றியும், சாத்தானை மேற்கொள்ளும் உத்திகள் பற்றியும் மேலதிகமான தகவல்களை கொண்டுள்ளது. 'இராஜ்ஜிய வாழ்க்கை' என்ற இந்த கையேடு உங்களுக்கு மேலதிகமாக உதவும். பின்வரும் உருவரைகளுக்கூடாக சாத்தான் மற்றும் அவனது இராஜ்ஜியம் பற்றிய தகவல்களை தருவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

சாத்தானின் இராஜ்ஜியம்

1. சாத்தானின் இராஜ்ஜியத்தின் ஆட்சியாளன்: சாத்தான்.

அ. அவனது தோற்றம்: சகல ஜீவராசிகளும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது: யோவான் 1:3 கொலோசெயர் 1:16-17

ஆ. அவனது முந்தைய மகிமை: ஏசாயா 14:12-15, எசேக்கியேல் 28:12-17

இ. அவனது முந்தைய நிலை: எசேக்கியேல் 28:14

ஈ. அவனது வீழ்ச்சி: எசேக்கியேல் 28:12-19

உ. அவனது பெயர்கள்:

1. பிரபஞ்சத்தின் தேவன்: 2 கொரிந்தியர் 4:4
2. ஒளியின் தூதன்: 2 கொரிந்தியர் 11:14
3. பிசாசு: 1 பேதுரு 5:8, மத்தேயு 4:1
4. சாத்தான்: யோவான் 13:27
5. லூசிபர்: ஏசாயா 14:12
6. வலு சர்ப்பம்: வெளிப்படுத்தல் 12:3
7. பாம்பு: வெளிப்படுத்தல் 12:9, 20:2, 2 கொரிந்தியர் 11:3, ஆதியாகமம் 3:4,14
8. விரோதி: 1 பேதுரு 5:8
9. பேலியாள்: 2 கொரிந்தியர் 6:15
10. பெல்சபூல்: மத்தேயு 12:24, லூக்கா 11:15, மாற்கு 3:22
11. கொலைக்காரன்: யோவான் 8:44
12. சோதனைக்காரன்: மத்தேயு 4:3, 1 தெசலோனிக்கேயர் 3:5
13. அபிஷேகம் செய்யப்பட்ட கேரூப்: எசேக்கியேல் 28:14
14. அழிக்கின்றவன்: வெளிப்படுத்தல் 9:11
15. ஏமாற்றுகின்றவன்: வெளிப்படுத்தல் 12:9, 20:3
16. அப்பொல்லியோன் (கிரேக்கத்தில் அழிப்பவன்): வெளிப்படுத்தல் 9:11
17. அபத்தோன் (எபிரெயத்தில் அழிக்கும் தேவதூதன்): வெளிப்படுத்தல் 9:11
18. அந்தகாரலோகாதிபதி: எபேசியர் 6:12
19. பாதாளத்தின் தூதன்: வெளிப்படுத்தல் 9:11

20. எதிராளி: மத்தேயு 13:39
21. பிசாசுகளின் தலைவன்: மத்தேயு 12:24
22. பொய்யன்: பொய்க்கு பிதா யோவான் 8:44
23. தீருவின் ராஜா: எசேக்கியேல் 28:12-15
24. உலகத்தின் அதிபதி: யோவான் 12:31, 14:30, 16:11
25. ஆகாயத்து அதிகாரப்பிரபு: எபேசியர் 2:2
26. கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் கிரியை செய்கின்ற ஆவி: எபேசியர் 2:2
27. தீயவன்: 1 யோவான் 5:9
28. கர்ச்சிக்கின்ற சிங்கம்: 1 பேதுரு 5:8
29. சகோதரரை குற்றஞ்சாட்டுகின்றவன்: வெளிப்படுத்தல் 12:10

ஊ. அவனது பண்புகள்.

1. அறிவு மற்றும் நுண்ணறிவுள்ளவன்: 2 கொரிந்தியர் 11:3
2. உணர்வுள்ளவன்: வெளிப்படுத்தல் 12:17
3. சுயசித்தமுள்ளவன்: 2 தீமோத்தேயு 2:26
4. பெருமையுள்ளவன்: 1 தீமோத்தேயு 3:6
5. வல்லமையுள்ளவன்: எபேசியர் 2:2
6. ஏமாற்றுகிறவன்: எபேசியர் 6:11
7. பயங்கரமும் கொடூரமுமானவன்: 1 பேதுர 5:8
8. வஞ்சிக்கிறவன்: 2 கொரிந்தியர் 11:14

எ. பதிவு செய்யப்பட்டுள்ள சாத்தானின் வார்த்தைகள்:

1. ஆதியாகமம் 3:1,4,.5.
2. யோபு 1:7-12
3. யோபு 2:1-6
4. மத்தேயு 4:1-11
5. லூக்கா 4:1-13

2. சாத்தானின் இராஜ்ஜியத்தில் குடியிருப்போர்: பிசாசின் ஆவிகள்.

அ. பிசாசுகளின் சேனைக்கு சாத்தானே ஆட்சியாளன்: மத்தேயு 12:22-28

ஆ. அவைகளின் ஆரம்பம்: வெளிப்படுத்தல் 12:7-9, யூதா 6

இ. அவைகளின் பண்புகள்:

1. ஆவிகள்: மத்தேயு 8:16, லூக்கா 10:17,22.
2. பேசும்: மாற்கு 5:9,12, லூக்கா 8:28, மத்தேயு 8:31
3. விசுவாசிக்கும்: யாக்கோபு 2:19
4. தமது சித்தத்தை அப்பியாசிக்கும்: லூக்கா 8:32, 11:24
5. சாதுரியமாக செயல்படும்: மாற்கு 1:24
6. உணர்வுண்டு: லூக்கா 8:28, யாக்கோபு 2:19
7. அடையாளம் காணும்: அப்போஸ்தலர் 19:15
8. இயற்கைக்கு அப்பாற்றபட்ட பலம்: அப்போஸ்தலர் 19:16, மாற்கு 5:2,3
9. இயற்கைக்கு அப்பாற்றபட்ட இருப்பு: தானியேல் 9:21-23, 10:10-14

ஈ. அவைகளின் அமைப்பு:

1. ஐக்கியமாயிருக்கும்: மத்தேயு 12:26,45, லூக்கா 8:30, 1 தீமோத்தேயு 4:1
2. சேனைகளாக இருக்கும்: லூக்கா 8:30

3. துன்மார்க்கம் எல்லைக்குட்பட்டது: மத்தேயு 12:43-45
4. கட்டமைப்பைக் கொண்டது: எபேசியர் 1:21, 3:10, 6:12, ரோமர் 8:38
5. பலவிதமான பிசாசுகள் உண்டு: மத்தேயு 10:1, 1 தீமோத்தேயு 4:1,

3. சாத்தானின் இராஜ்ஜியத்தில் வசிப்போர்: தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு உரித்துடையோர் அல்லாதோர் அனைவரும் வெளிப்படுத்தல் 20:15, 21:8

4. சாத்தான் மற்றும் பிசாசுகளின் நடவடிக்கை

அ. தேவனுடைய பிரசன்னத்தை அணுகுதல். யோபு 1:6-7

ஆ. முழு பூமியையும் அணுகுதல் வெளிப்படுத்தல் 12:10

5 சாத்தான் மற்றும் பிசாசுகளின் கிரியைகள்:

'ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு' என்ற தலைப்பில் சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடத்திட்டம் சாத்தான் மற்றும் பிசாசுகளின் கிரியைகள் பற்றிய தகவல்களை விரிவாக தரும். சுருக்கமாக கூறுவதாயின் அவைகளின் கிரியைகள் எப்போதும் தேவனுக்கும், அவரது நோக்கத்திற்கும், அவரது மக்களுக்கும் எதிரானவைகளாக இருக்கும்.

6. விசுவாசிகளுக்கு சாத்தான் மற்றும் பிசாசுகளைவிட பெரிதான வல்லமை இருக்கின்றது. அ. மத்தேயு 10:1, மாற்கு 6:7, 9:38, 16:17, லூக்கா 10:17, அப்போஸ்தலர் 5:16, 8:7, 16:16-18, 19:12

ஆ. 'ஆவிக்குரிய போர்வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு' என்ற தலைப்பில் சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் பாடத்திட்டம் ஆவிக்குரிய போராட்டத்தின் முறைகளை கையாளுதல் பற்றிய தகவல்களை தரும். இவைகள் வல்லமையான ஆவிக்குரிய வழிகாட்டல்களை தருவதால், சாத்தானை இராஜ்ஜியத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை அப்பியாசப்படுத்திக் கொள்ளுங்கள்.

7. சாத்தானின் இராஜ்ஜியத்தின் எதிர்கால நிலை:

மத்தேயு 8:29, 25:41. 2 பேதுரு 2:4, யூதா 6: வெளிப்படுத்தல் 12:7-9, 20:10, 1 யோவான் 3:8, லூக்கா 8:28, மத்தேயு 25:41

**அதிகாரம் இரண்டு**

# இராஜாதி இராஜா

## நோக்கங்கள்:

இவ்வதிகாரத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ ‘இராஜா’ என்ற சொல்லை விளக்கவும்,
- ☐ தேவனுடைய இராஜ்ஜியத்தில் இயேசுவே இராஜா என்பதை அடையாளம் காணவும்,
- ☐ இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் ஊழியம்பற்றி மேலதிகமாக ஆராயவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். (லூக்கா 1:33)**

## அறிமுகம்:

இராஜா இல்லாமல் இராஜ்ஜியம் இராது. இந்த அதிகாரத்தில் இதுவரை அரசாண்ட அரசர்கள் யாவரைப் பார்க்கிலும் மிகப்பெரிய இராஜாதி இராஜாவாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றி அறிந்து கொள்வீர்கள்.

## இராஜா என்றால் யார்?

ஒரு இராஜா என்பவர் ஒரு தேசத்தை, பழங்குடியினரை, ஒரு ஜாதியை ஆளுகை செய்பவராவார். ‘ஆளுகின்றவர்’ என்னும்போது, அவருக்கு உச்சக்கட்ட அதிகாரம், அதிக அதிகாரம் என்பன இருப்பதோடு வெளியாரின் கட்டுப்பாடு இருக்காது.

பௌதீக உலகில் கடந்த காலங்களில் பல அரசர்களும், பேரரசுகளும் இருந்துள்ளன. மண்ணுலக பேரரசில் அனைத்து பிரதேசமும் அரசனுக்கு சொந்தமானதாகவும், பேரரரசிலுள்ள சகலவற்றின் மீதும் மக்கள் உட்பட சகலஅதிகாரமும் அவனுக்குரியதாகவும் இருந்தது.

அரசன் இராஜ்ஜித்திற்கான சட்டதிட்டங்களை தீட்டுவது மட்டுமல்ல, குடியிருப்பாளர்கள் அதை கடைப் பிடிக்க வேண்டும் எனவும் எதிர்பார்ப்பான். வாழ்வானாலும் சரி, மரணமானாலும் சரி, சகலரின் மீதும் அரசனுக்கு அதிகாரம் இருந்தது.

## இராஜாதி இராஜா

அனைத்து அரசர்களிலும் பார்க்க பெரியவர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகும். பவுல் இராஜாதி இராஜாவாகிய இயேசுவைப்பற்றி :

**அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகசக்கராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும்.... (1 தீமோத்தேயு 6:15) என்கின்றார்.**

வெளிப்படுத்தின விஷேசத்தின் புத்தகம் அவரை இராஜாதி இராஜா என அழைக்கின்றது:

**ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால்... (வெளிப்படுத்தல் 17:14)**

**ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் அவருடைய வஸ்திரத்தின்மேலும் அவருடைய தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது. (வெளிப்படுத்தல் 19:16)**

இயேசு இராஜாதி இராஜாவாக இருக்கின்றார், ஏனென்றால் அவர் சதாகாலமும் சகல இராஜ்ஜியங்களையும் ஆளுகை செய்கின்றவராக இருக்கின்றார். தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு முடிவிராது. இதை புரட்சியின் மூலம் ஒருபோதும் தூக்கியெறிய முடியாது. இன்னுமொரு அரசனாலும் வெற்றிக் கொள்ளப்பட்டு இராஜாதி இராஜாவாக முடியாது.

## இராஜாதி இராஜாவின் முந்தைய இருப்பு

வேதாகமம் இராஜாதி இராஜாவின் கதையை கூறுகின்றது. அவரது பூவுலக வாழ்வும் ஊழியமும் அதன் ஒரு பகுதியாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்து பூவுலக ஊழியத்திற்கு முன்பே இருந்தவர். அவர் முன்பிருந்த நிலையைக் குறித்து யோவான் 1:1-18 வரையும் நீங்கள் வாசித்தறியலாம். (இப்பகுதியில் இயேசு 'வார்த்தை' என அழைக்கப்படுகின்றார்)

## இராஜாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்

பழைய ஏற்பாடு இராஜாதி இராஜாவைக் குறித்த ஏராளமான தீர்க்கதரிசனங்களைக் கொண்டுள்ளது. தீர்க்கதரிசனம் என்பது திடீரென தேவனிடமிருந்து வருகின்ற வார்த்தையாக இருக்கின்றது, தேவன் எதிர்காலத்தில் சம்பவிக்கின்றவைகளை வெளிப்படுத்துவார், அதை இயற்கையான ஞானத்தினால் விளங்கிக்கொள்ள முடியாது.

இந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் எப்படி, எப்போது, எங்கே இராஜா பிறப்பார் எனவும், அவரது வாழ்க்கை, ஊழியம், மரணம், உயிர்த்தெழுதல் பற்றியும் வெளிப்படுத்தியுள்ளன. இயேசு எவ்வாறு இந்த தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார் என்பதை புதிய ஏற்பாடு காண்பிக்கின்றது.

(சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் இன்னுமோரு பாடத்திட்டமான 'வேதாகம ஆய்வு முறைகள்' என்ற பாடத்தில் இத்தீர்க்கதரிசனத்தின் விபரங்கள் தரப்படும்)

## இராஜாவின் வம்ச வரலாறு

இயேசு இராஜாதி இராஜாவின் வம்ச வரலாற்றை மத்தேயு 1:1-17 மற்றும் லூக்கா 3:23-38 நீங்கள் வாசிக்கலாம். இயேசுவின் வம்ச வரலாற்றில் அவரது தாய் தகப்பன் மற்றும் முன்னோர்களும்

உள்ளடக்கப்படுகின்றனர். ஆனால் அவர் தேவனுடைய குமாரன், கன்னியினிடத்தில் பிறந்தவர் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்

## இராஜாவின் பிறப்பு

இயேசு இராஜாவின் மண்ணுலக பிறப்பைக் குறித்து மத்தேயு 1,2, லூக்கா 1,2 ஆம் அதிகாரங்களில் நீங்கள் வாசிக்கலாம்.

## இராஜாவின் பெயர்கள்

இயேசு பல வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படுகின்றார், சில பெயர்கள் அவரது ஊழியம் மற்றும் அவரது நோக்கத்தை பிரதிபலிக்கின்றன. பின்வரும் சகல பெயர்களும் அவர் இராஜாதி இராஜா என காண்பிக்கின்றது.

| | |
|---|---|
| இரண்டாம் ஆதாம் : | 1 கொரிந்தியர் 15:45-47 |
| பரிந்து பேசுகிறவர் : | 1 யோவான் 2:1 |
| சர்வ வல்லமையுள்ள கர்த்தர்: | வெளிப்படுத்தல் 1:8 |
| அல்பாவும் ஒமேகாவும்: | வெளிப்படுத்தல் 21:6 |
| ஆமென்: | வெளிப்படுத்தல் 3:14 |
| நீண்ட ஆயுசுள்ளவர்: | தானியேல் 7:9 |
| அவருடைய சமுகத்தின் தூதனானவர்: | ஏசாயா 63:9 |
| ஆனந்த தைலத்தால் அபிஷேகிக்கிறவர்: | சங்கீதம் 45:7 |
| எமது அப்போஸ்தலர்: | எபிரெயர் 3:1 |
| தேவனுடைய கரம்: | ஏசாயா 51:9-10 |
| விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும்: | எபிரெயர் 12:2 |
| நித்திய இரட்சிப்பின் காரணர்: | எபிரெயர் 5:9 |
| தேவனுடைய ஒரே பேறானவர்: | 1 யோவான் 5:18 |
| பிரியமானவர்: | எபேசியர் 1:6 |
| ஆத்துமாக்களுக்கு கண்காணி : | 1 பேதுரு 2:25 |
| ஏகசக்கராதிபதி | 1 தீமோத்தேயு: 6:15 |
| கிளை: | சகரியா 3:8 |
| நீதியுள்ள கிளை: | எரேமியா 23:5 |
| நீதியின் கிளை: | எரேமியா 33:15 |
| ஈசாயென்னும் அடிமரத்தின் துளிர்: | ஏசாயா 1:1 |
| ஜீவ அப்பம்: | யோவான் 6:35 |
| பிரகாசமான விடவெள்ளி நட்சத்திரம்: | வெளிப்படுத்தல் 22:16 |
| கர்த்தருடைய சேனைகளின் அதிபதி: | யோசுவா 5:15 |
| தச்சனின் மகன்: | மத்தேயு 13:55 |
| மூலைக்கல்: | 1 பேதுரு 2:6 |
| பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்: | உன்னதப்பாட்டு 5:10 |
| கிறிஸ்து: | யோவான் 1:41 |
| கர்த்தராகிய கிறிஸ்து: | லூக்கா 2:11 |

| | |
|---|---|
| நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து: | ரோமர் 8:39 |
| கிறிஸ்து தேவபெலன்: | 1 கொரிந்தியர் 1:24 |
| ஆலோசகர்: | ஏசாயா 9:6 |
| ஜனத்தின் உடன்படிக்கை: | ஏசாயா 42:6 |
| அருணோதயம்: | லூக்கா 1:78 |
| விடிவெள்ளி: | 2 பேதுரு 1:19 |
| மீட்பர்: | ரோமர் 11:26 |
| வாசல்: | யோவான் 10:9 |
| தெரிந்து கொண்டவர்: | ஏசாயா 42:1 |
| இம்மானுவேல்: | மத்தேயு 1:23 |
| நித்திய ஜீவன்: | 1 யோவான் 5:20 |
| நித்திய பிதா: | ஏசாயா 9:6 |
| உண்மையும் சத்தியமுமுள்ளவர் : | வெளிப்படுத்தல் 19:11 |
| உண்மையுள்ள சாட்சி : | வெளிப்படுத்தல் 1:5 |
| முதற்பேறானவர் : | எபிரெயர் 1:6 |
| முதற்பேறானவர்: | சங்கீதம் 89:27 |
| சகோதரருக்குள்ளே முதற்பேறானவர்: | ரோமர் 8:29 |
| முதற்பலனானனவர்: | 1 கொரிந்தியர் 15:23 |
| ஆதியும் அந்தமும் | வெளிப்படுத்தல் 22:13 |
| சீயோனில் வைக்கப்பட்ட அத்திபாரக்கல் | ஏசாயா 28:16 |
| மகிமையின் கர்த்தர் | ஏசாயா 33:21 |
| இஸ்ரவேலின் தேவன்: | ஏசாயா 45:15 |
| தேவன் எம்முடன் இருக்கிறார்: | மத்தேயு 1:23 |
| நல்ல மேய்ப்பன்: | யோவான் 10:11 |
| மகாதேவன் | தீத்து 2:13 |
| மகா பிரதான ஆசாரியன்: | எபிரெயர் 4:14 |
| சரீரத்திற்கு தலை: | கொலோசெயர் 1:18 |
| எல்லாவற்றிற்கும் மேலான தலை | எபேசியர் 1:22 |
| மூலைக்கல்: | சங்கீதம் 118:22 |
| சர்வத்துக்கும் சுதந்திரவாளி: | எபிரெயர் 1:2 |
| அபிஷேகிக்கப்பட்டவர்: | சங்கீதம் 2:2 |
| இஸ்ரவேலின் பரிசுத்தர்: | ஏசாயா 41:14 |
| மகிமையின் நம்பிக்கை: | கொலோசெயர் 1:27 |
| நான் இருக்கிறேன். | யோவான் 8:58 |
| அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம்: | கொலோசெயர் 1:15 |
| இம்மானுவேல்: | ஏசாயா 7:14 |
| இயேசு கிறிஸ்து எமது கர்த்தர்: | ரோமர் 1:3 |
| இஸ்ரவேலின் நீதிபரர்: | மீகா 5:1 |
| மகிமையின் ராஜா: | சங்கீதம் 24:7 |
| இராஜா: | சகரியா 9:9 |
| பூமியனைத்தினதும் இராஜா: | சகரியா 14:9 |
| தேவாட்டுக்குட்டி: | யோவான் 1:29 |

| | |
|---|---|
| உலகின் ஒளி: | யோவான் 8:12 |
| பள்ளத்தாக்கின் லீலி: | உன்னதபாட்டு 2:1 |
| ஜீவ அப்பம் | யோவான் 6:51 |
| சர்வவல்லமையுள்ள தேவன்: | வெளிப்படுத்தல் 4:8 |
| கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து: | 2 பேதுரு 2:20 |
| சகலத்தினதும் தேவன்: | அப்போஸ்தலர் 10:36 |
| தேவன் நமது நீதி: | எரேமியா 23:6 |
| தேவன் உங்கள் மீட்பர்: | ஏசாயா 43:14 |
| அன்பானவர்: | 1 யோவான் 4:8 |
| துக்கம நிறைந்தவர்: | ஏசாயா 53:3 |
| எஜமான்: | மத்தேயு 23:10 |
| மேசியா: | தானியேல் 9:25 |
| வல்லமையுள்ள தேவன்: | ஏசாயா 9:6 |
| யாக்கோபின் வல்லவர்: | ஏசாயா 60:16 |
| என்னுடைய தூதன்: | யாத்திராகமம் 23:20-23 |
| மகா பரிசுத்தமுள்ளவர்: | தானியேல் 9:24 |
| மகா மேன்மையுள்ளவர்: | சங்கீதம் 45:3 |
| நசரேயன்: | மத்தேயு 2:23 |
| ஞானமுள்ள ஒரே தேவன்: | 1 தீமோத்தேயு 1:17 |
| எமது பஸ்கா: | 1 கொரிந்தியர் 5:7 |
| பரிகாரி: | லூக்கா 4:23 |
| சமாதானப்பிரபு: | ஏசாயா 9:6 |
| பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி: | வெளிப்படுத்தல் 1:5 |
| தீர்க்கதரிசி: | உபாகமம் 18:15-18 |
| கிருபாதார பலி: | ரோமர் 3:25 |
| ரபி: | யோவான் 1:49 |
| மீட்பர்: | ஏசாயா 59:20 |
| உயிர்த்தெழுந்தவர்: | யோவான் 11:25 |
| தாசனாகிய நீதிபரர்: | ஏசாயா 53:11 |
| கன்மலை: | 1 கொரிந்தியர் 10:4 |
| ஈசாயின் வேர்: | ஏசாயா 11:10 |
| சாரோனின் ரோஜா: | உன்னதபாட்டு 2:1 |
| உலகின் இரட்சகர், | 1 யோவான் 4:14 |
| தாவீதின் சந்ததி: | யோவான் 7:42 |
| ஸ்திரியின் வித்து: | ஆதியாகமம் 3:15 |
| தேவ குமாரன், | ரோமர் 1:4 |
| மனுஷகுமாரன்: | அப்போஸ்தலர் 7:56 |
| மரியாளின் மகன்: | மாற்கு 6:3 |
| உன்னதமானவரின் குமாரன்: | லூக்கா 1:32 |
| யாக்கோபின் நட்சத்திரம்: | எண்ணாகமம் 24:17 |
| கல்: | மத்தேயு 21:42 |
| நீதியின் சூரியன்: | மல்கியா 4:2 |

| | |
|---|---|
| அஸ்திபாரமான கல்: | ஏசாயா 28:16 |
| போதகர்: | யோவான் 3:2 |
| சுத்தியம்: | யோவான் 14:6 |
| சொல்லி முடியாத ஈவு: | 2 கொரிந்தியர் 9:15 |
| திராட்சை கொடி: | யோவான் 15:1 |
| வழி: | யோவான் 14:6 |
| அற்புதமானவர்: | ஏசாயா 9:6 |
| வார்த்தை: | யோவான் 1:14 |
| தேவனுடைய வார்த்தை: | வெளிப்படுத்தல் 19:13 |

## இராஜாவின் வாழ்க்கை

மத்தேயு, மாற்கு, லூக்கா, மற்றும் யோவான் புத்தகங்கள் இராஜாவாகிய இயேசுவின் வாழ்க்கை யைபற்றி கூறுகின்றன. இந்த நான்கு சுவிசேஷ புத்தகங்களும் இயேசுவின் உலக ஊழியத்தின்போது அவரோடிருந்த சீஷர்களால் எழுதப்பட்டன.

## இராஜாவின் ஊழியம்

இயேசு கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் போதனைகள் யாவும் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புத்தகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் இன்னுமொரு பாடமான 'போதனையின் உத்திகள்' என்ற பாடத்தின் பட்டியலில் இயேசு கிறிஸ்துவின் போதனைகள் வழங்கப்படுகின்றது.

இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகள் நான்கு சுவிஷேசங்களிலும் அதிகமாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றபோதும் யோவான் பின்வரும் தகவல்களையும் தருகின்றார்.

> **இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன். ஆமென். (யோவான் 21:25)**

## நிராகரிக்கப்பட்ட இராஜா

இயேசு ஒரு யூத பரம்பரையில் பிறந்தார். அவர் இராஜாவாக வந்தபோதும் அவரது சொந்த மக்களான யூதர்கள் அவரை முதலாவதாக நிராகரித்தனர். எதிர்பார்க்கப்படும் இராஜா அவரா என்ற கேள்வியும் அவர்களிடத்தில் வந்தது. (மத்தேயு 27:11, மாற்கு 15:2) அவர் தேவனாயிராமல் சாத்தானால் ஆளப்படு கின்றார் என குற்றஞ்சாட்டப்பட்டார். (மத்தேயு 12:25-28, மாற்கு 11: 17-20) ஒரு சந்தர்ப்பத்தில் அவர்கள் எதிர்பார்த்த அரசை அவர் ஸ்தாபிக்காதபடியால் இயேசுவை இராஜாவாக்க முயற்சி செய்தார்கள். (யோவான் 6:15)

ஒரே ஒருமுறை மாத்திரம் இயேவை இராஜாவாக மக்கள் பிரகடனப்படுத்தினார்கள். இது கடைசி தட வையாக அவர் எருசலேமிற்கு வரும்போது நடைபெற்றது. (மத்தேயு 21:1-9) ஆனால் இராஜாவாக அவரை கௌரவித்த மக்கள் விரைவிலேயே அவருக்கு எதிராக திரும்பினார்கள். 'ஓசன்னா' என்று

சத்தமிட்ட மக்கள் சில நாட்களின் பின்னர் இயேசு எருசலேமிற்கு வரும்போது 'அவரை சிலுவை யில் அறையும்' என ஆர்ப்பரித்தனர். இயேசு கிறிஸ்து ரோம அரசை அகற்றிவிட்டு உலகில் பெரிய பேரரசை நிறுவாதபடியால் அவரில் நம்பிக்கை அற்றவர்களானார்கள். அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை செய்து பேரரசை நிறுவாதபடியால் அவரில் கோபப்பட்டனர்.

யூதர்கள் எதிர்பார்த்த அரசனாக இயேசு இருக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்தபடி ரோம பேரரசை அழிக்கவில்லை. மண்ணுலக பேரரசையும் நிறுவவில்லை. அவர்கள் எண்ணியபடி அவர் ஒரு அரச னாகவும் செயல்படவில்லை. வெளிப்புறமாக அவர் கர்த்தத்துவத்தை ஊர்ஜிதப்படுத்தும் முன்னர் அவர் அவர்களின் இருதயங்களில் முதலாவதாக கோட்டையமைக்க முற்படுவதை அவர்கள் உணரத்தவறி விட்டனர்.

ரோமர்களிடமிருந்து சுதந்திரத்தை பெற்றுக் கொள்வது யூதர்களது பெருந்தேவையாக இராமல், பாவச் சங்கிலியிலிருந்து விடுதலை பெறுவதே அவர்களின் தேவையாக இருந்தது. இயேசுவின் இராஜ்ஜி யத்தின் திறவுகோலாக இருந்தது புரட்சி செய்வதல்ல, மாறாக மனந்திரும்புவதாக இருந்தது. (கடைசி அதிகாரத்தில் இதைக் குறித்து அதிகமாக கற்றுக் கொள்வீர்கள்.)

மண்ணுலக இராஜ்ஜியம் அமைப்பதைக் குறித்து சாத்தான் இயேசுவை சோதித்தான். (மத்தேயு 4:8, லூக்கா 4:5) இயேசுவின் மண்ணுலக ஊழியத்தின் ஆரம்ப முதல் கடைசிவரை சீடர்கள் ஒரு மண்ணுலக இராஜ்ஜியத்திற்காகவே ஏங்கினர். (அப்போஸ்தலர் 1:6) ஆனால் இவ்வேளையில் தேவ இராஜ்ஜியம் புலப்படும் விதத்தில் அமைக்கப்படவில்லை. இயேசு கூறினார்:

> **இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். (யோவான் 18:36)**

இராஜாதி இராஜன் அவரது சொந்த மக்களாலேயே நிராகரிக்கப்பட்டார்.

> **அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. (யோவான் 1:11)**

ஒரு சில மக்கள் அவர் இராஜா என அங்கீகரித்தனர். இதில் நாத்தான்வேல் என்ற ஒரு சீடனும் அடங்குகின்றான்.

> **அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான். (யோவான் 1:49)**

இயேசுவை சிலர் இராஜாவாக ஏற்றுக் கொண்டபோது, ஒரு விஷேசித்த உறவு நீடிக்கப்பட்டது:

> **அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (யோவான் 1:12)**

வாழ்வின் சகல காரியங்களும் உறவை அடிப்படையாகக் கொண்டவை. மிக முக்கியமானது எவை என்றும், முக்கியமற்றவை எவை என்றும் நீங்கள் அறிவீர்கள். வேதாகமத்தைபற்றியும் அல்லது கிறிஸ்தவத்தைபற்றியும் அறிந்திருப்பது தேவ இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கான உறுதியை தருவதில்லை. அது எங்களுக்கு தெரியும். நீங்களாய் இராஜாதி இராஜாவை அறிந்திருக்க வேண்டும். 'இராஜ்ஜியத்தின் திறவுகோல்' என்கின்ற நான்காம் அதிகாரத்தில் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதையும், காத்துக் கொள்வதைப்பற்றியும் கற்போம்.

## இராஜாவின் மரணம்

பாவமுள்ள மனிதனால் தேவ இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியாது. மற்ற இராஜ்ஜியங்களைப் பார்க்கிலும் தேவ இராஜ்ஜியம் வித்தியாசமானது. அது நீதியான இராஜ்ஜியம். இயேசு கிறிஸ்துவின் மரணத்திற்கூடாக தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்கான வழி வழங்கப்படுகின்றது. மரணத்திற்கு ஏதுவானதொன்றையும் இயேசு செய்யவில்லை. அவர் ஒரு போதும் பாவம் செய்யவில்லை, ஆனால் அவர் பாவம் செய்தவர்களுக்காக மரித்தார். அவர்களுடைய பாவத்திற்கான கிரயத்தை அவர் செலுத்தினார்.

> **பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன். (ரோமர் 6:23)**

மத்தேயு 26-27, மாற்கு 14-15, லூக்கா 22-23 மற்றும் யோவான் 18-19 ஆகிய பகுதிகளில் இராஜாவாகிய இயேசுவின் மரணம் பற்றி படிக்க முடியும்.

## இராஜாவின் உயிர்த்தெழுதல்

சிலுவை மரணத்தின் பின்னர் அவர் அடக்கம்பண்ணப்பட்டார், ஆனாலும் கல்லறைக்குள்ளேயே இருக்க வில்லை. அவரது அற்புதமான மரணத்திலிருந்து உயிர்தெழுதலைக் குறித்து நீங்கள் மத்தேயு 28, மாற்கு 16, லூக்கா 24, மற்றும் யோவான் 20 ஆகிய அதிகாரங்களில் வாசிக்கலாம்.

அவர் மரணத்திலிருந்து உயிர்த்தெழுதலின் மூலம் சரீர மரணத்திலிருந்து வெற்றி பெற்றார். தேவனுடைய இராஜ்ஜியத்தின் பங்குதாரர்களும் இயேசுவைப்போன்றே சரீர மரணத்திலிருந்து உயிர்த் தெழும் அனுபவத்தை பெறுவார்கள். ஏனென்றால் எமது இராஜா நித்தியர், அவ்வாறே எமக்கும் நித்திய இராஜ்ஜியமும், நித்திய வாழ்வும் இருக்கின்றது.

## இராஜா காட்சியளித்தல்

அவர் மரணத்திலிருந்து உயிர்தெழுந்த பின்னர், இராஜாவாகிய இயேசு அநேகருக்கு தரிசனமானார். அவர் காட்சியளித்ததைக் குறித்து நீங்கள் மத்தேயு 28, மாற்கு 16, லூக்கா 24, யோவான் 20-21, அப்போஸ்தவர் 1 போன்ற அதிகாரங்களில் வாசிக்கலாம்.

## இராஜா பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல்

நாற்பது நாற்களாக அநேகருக்கு இயேசு தரிசனமான பின்னர், அவர் பரலோகத்திற்கு எடுத்துக்

கொள்ளப்பட்டார். இறுதியாக நேரம் வருகின்றபோது திரும்பவும் உலகிற்கு வந்து கண்ணுக்கு புலப்படும் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதாக கூறியுள்ளார். கடந்தகால, நிகழ்கால, எதிர்கால தேவ-னுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து அடுத்த அதிகாரத்தில் கற்றுக் கொள்வீர்கள். பரலோகத்திலிருந்து இயேசு திரும்ப வருவதைக் குறித்து மத்தேயு 28:16-20, மாற்கு 16:19-20, லூக்கா 24:50-53, அப் 1:1-11 ஆம் அதிகாரங்களில் நீங்கள் வாசிக்கலாம்.

## இராஜாவின் கட்டளை

இயேசு பரலோகத்திற்கு திரும்பு முன்னர், முழு உலகத்திற்கும் ஸ்தாபதிகளாக இருக்கும்படிக்கு, தன்னை பின்பற்றியோருக்கு மிக முக்கியமான கட்டளையை கொடுத்தார். இக்கட்டளையைக் குறித்து பின்னர் கற்றுக் கொள்வீர்கள்.

## வரவிருக்கும் இராஜா

மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் திரும்பவும் இயேசு பூமிக்கு வருவார் என்றும், கண்ணுக்கு புலப்படும் இராஜ்ஜியத்தை அமைப்பார் என்றும் வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. இத்திரும்ப வருதலைக் குறித்து 1 தெசலோனிக்கேயர் 4:13-18 ல் நீங்கள் வாசிக்கலாம். தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதைப்பற்றிய நிகழ்ச்சிகளை வெளிப்படுத்தல் புத்தகத்தில் வாசிக்கலாம். இயேசுவின் இராஜ்ஜியம் நித்தியமானது என வேதாகமம் வெளிப்படுத்துகின்றது.

> **அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது.... (லூக்கா 1:33)**

உலகத்தின் இராஜ்ஜியத்தையும், சாத்தானின் இராஜ்ஜியத்தையும் இராஜாதி இராஜா தோற்கடிப்பார். முடிவின் அறிவிப்பு கீழ்க்கண்டவாறு அமையும்.....

> **உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. (வெளிப்படுத்தல் 11:15)**

உங்கள் ஆய்வை தொடரவும்.

இராஜாதி இராஜாவின் மாபெரும் நீளமான கதை குறுகிய ஓர் அதிகாரத்தில் தரப்படுகின்றது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை படிக்கும் ஓர் சந்தர்ப்பத்தை இவ்வதிகாரத்திலுள்ள 'மேலதிக படிப்பினைக்கு' என்ற பகுதியிலுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகங்களின் மேற்பார்வை தரும்.

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

2. 'இராஜா' என்ற சொல்லை விளக்கவும்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

3. தேவனுடைய இராஜ்ஜியத்தில் இராஜா யார்?

.................................................................................................................................................

4. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, போதனைகள், மற்றும் ஊழியம் பற்றிய கதையை கூறும் புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் நான்கும் எவை?

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு :

பின்வரும் குறிப்புகளை பயன்படுத்தி இராஜாவின் வாழ்க்கையைப்பற்றியும், அவரது இராஜ்ஜியத்தைப் பற்றியும் கற்றுக் கொள்ளவும். பின்வரும் குறிப்புகள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிஷேச புத்தகங்களில் உள்ள பதிவுகளாகும்.

### இராஜாவும், அவரது இராஜ்ஜியமும்

1. இராஜாவின் முன்னைய நிலமை: யோவான் 1:1-18

2. இராஜாவின் அறிமுகம்
    - அ. இராஜாவின் வருகை
        1. இராஜாவின் வம்சாவளி. மத்தேயு 1:1-17, லூக்கா 3:23-38
        2. இராஜாவின் வருகை:
            - அ. யோவானின் பிறப்பை அறிவித்தல்: லூக்கா 1:5-25
            - ஆ. இயேசுவின் பிறப்பை குறித்து மரியாளுக்கு அறிவித்தல்: லூக்கா 1:26-38
            - இ. மரியாள் யூதேயாவுக்கு வருதல்: லூக்கா 1:39-45
            - ஈ. மரியாளின் வாழ்த்துதல்: லூக்கா 1:46-56
            - உ. யோவானின் பிறப்பு: லூக்கா 1:57-80
            - ஊ. இயேசுவின் பிறப்பை குறித்து யோசேப்புக்கு அறிவித்தல்: மத்தேயு 1:18-25
            - எ. இராஜாவாகிய இயேசுவின் பிறப்பு: லூக்கா 2:1-7
            - ஏ. இயேசுவின் பிறப்பு மேய்ப்பர்களுக்கு அறிவிக்கப்படல்: லூக்கா 2:8-20
        3. இராஜாவின் குழந்தை மற்றும் சிறுபராயம்.
            - அ. இராஜாவின் விருத்தசேதனம்: லூக்கா 2:21
            - ஆ. இராஜாவின் அறிமுகம்: லூக்கா 2:22-38
            - இ. இராஜாவின் குழந்தைப்பருவம்:
                1. பெத்லகேமில்: மத்தேயு 2:1-12
                2. எகிப்தில்: மத்தேயு 2:13-18
                3. நாசரேத்தில்: மத்தேயு 2:19-23, லூக்கா 2:39
            - ஈ. இராஜாவின் சிறுபராயம்
                1. இராஜாவின் வளர்ச்சி: லூக்கா 2:40
                2. இராஜா எருசலேமிற்கு செல்லல்: லூக்கா 2:41-50
                3. இராஜாவின் விருத்தி: லூக்கா 2:51-52
    - ஆ. இராஜாவின் முன்னோடி: யோவான் ஸ்நானகன்
        1. யோவானுக்கான செய்தி: மாற்கு 1:1, லூக்கா 3:1-2
        2. யோவானின் செய்தி: மத்தேயு 3:1-6, மாற்கு 1:2-6, லூக்கா 3:3-6
        3. யோவானின் விளக்கம்: மத்தேயு 3:7-10, லூக்கா 3:7-14
        4. யோவானின் வாக்குறுதி: மத்தேயு 3:11-12, மாற்கு 7-8, லூக்கா 3:15-18

3. இராஜாவாக அங்கீகரிக்கப்படுதல்
    - அ. இராஜாவாக அங்கீகரிக்கப்படுதல்

1. அவரது ஞானஸ்நானம்: மத்தேயு 3:13-17, மாற்கு 1:9-11, லூக்கா 3:21-23
2. அவரது சோதனை: மத்தேயு 4:1-11, மாற்கு 1:12-13, லூக்கா 4:1-13
3. அவரது முன்னோடியான யோவான்:
    அ. தலைவர்களுக்கு யோவானின் சாட்சி: யோவான் 1:19-28
    ஆ. இயேசுவுக்கு யோவானின் சாட்சி: யோவான் 1:29-34

ஆ. இராஜாவாக ஏற்றுக் கொள்ளப்படுதல்
1. முதலாவது சீடர்களால் விசுவாசிக்கப்படுதல்: யோவான் 1:35-51
2. முதலாவது அற்புதத்தின் மூலம் நம்பப்படுதல்: யோவான் 2:1-12
3. தேவாலயத்தின் நிலமை: யோவான் 2:13-22
4. யூதேயாவில் ஏற்றுக் கொள்ளப்படுதல்: யோவான் 2:23-3:21
5. யோவானின் சாட்சி: யோவான் 3:22-36
6. செபுலோன் / நப்தலி: மத்தேயு 4:12, மாற்கு 1:14, லூக் 3:19-20, 4:14, யோவான் 4:1-4
7. சமாரியாவில் ஏற்றுக் கொள்ளப்படுதல்: யோவான் 4:5-42.
8. கலிலேயாவில் ஏற்றுக் கொள்ளப்படுதல்: யோவான் 4:43-45

இ. இராஜாவின் அதிகாரம்
1. பிரசங்கிக்கும் அதிகாரம்: மத்தேயு 4:17, மாற்கு 1:15, லூக் 4:14-15
2. வியாதியின் மேல் அதிகாரம்: யோவான் 4:46-54
3. நாசரேத்தில் அவரது அதிகாரம் நிராகரிக்கப்படல்: லூக்கா 4:16-30
4. கப்பர்நகூமில் குடியிருத்தல்: மத்தேயு 4:13-16
5. இயற்கையின் மேல் அவரது அதிகாரம்: மத் 4:18-22, மாற்கு 1:16-20, லூக்கா 5:1-11
6. பிசாசுகளின் மேல் அவரது அதிகாரம்: மாற்கு 1:21-28, லூக்கா 4:31-37
7. வியாதிகளின் மேல் அவரது அதிகாரம்: மத் 8:14-17, மாற் 1:29-34, லூக்கா 4:38-41
8. போதிக்கும் அதிகாரம்: மத்தேயு 4:23-25, மாற்கு 1:35-39, லூக்கா 4:42-44.
9. களங்கங்களின் மேல் அதிகாரம்: மத்தேயு 8:1-4, மாற்கு 1:40-45, லூக்கா 5:12-16
10. பாவங்களை மன்னிப்பதில் அவரது அதிகாரம்: மத் 9:1-8, மாற் 2:1-12, லூக் 5:17-26
11. மனிதர்கள் மேல் அவரது அதிகாரம்: மத் 9:9-13, மாற்கு 2:13-17, லூக்கா 5:27-32
12. பாரம்பரியம் மீது அதிகாரம்: மத்தேயு 9:14-17, மாற்கு 2:18-22, லூக்கா 5:33-39
13. ஓய்வு நாளின் மீது அவரது அதிகாரம்:
    அ. திமிர்வாதக்காரனை குணமாக்குவதின் மூலம்: யோவான் 5:1-47
    ஆ. தானியங்களின் மீது விவாதம்: மத்தேயு 12:1-8, மாற்கு 2:23-28, லூக் 6:1-5
    இ. சூம்பின கையுடையவனை குணமாக்கியதின் மூலம்: மத்தேயு 12:9-14, மாற்கு 3:1-6, லூக்கா 6:6-11
14. குணமாக்குவதில் அவரது அதிகாரம்: மத்தேயு 12:15-21, மாற்கு 3:7-12
15. கட்டளையில் அவரது அதிகாரம்: மாற்கு 3:13-19, லூக்கா 6:12-16
16. சட்டத்தை விளக்குவதில் அவரது அதிகாரம்: மத்தேயு 5:1-7:29, லூக்கா 6:17-42,
    அ. அவரே நிறைவானவர்: மத்தேயு 5:17-20
    ஆ. நியாயப்பிரமாணத்தின் பரம்பரிய விளக்கத்தை நிராகரித்தல்:
        1. கொலை: மத்தேயு 5:21-26
        2. விபச்சாரம்: மத்தேயு 5:27-30
        3. விவாகரத்து: மத்தேயு 5:31-32
        4. ஆணை: மத்தேயு 5:33-37

5. பழிவாங்குதல்: மத்தேயு 5:38-42
6. அன்பு: மத்தேயு 5:43-48 லூக்கா 6:27-30, 32-36

இ. பரிசேயரின் நடைமுறைகளை நிராகரித்தல்:

1. கொடுத்தல்: மத்தேயு 6:1-4
2. ஜெபம்: 6:5-15
3. உபவாசம்: மத்தேயு 6:16-18
4. செல்வத்தைக் குறித்த அபிப்பிராயம்: மத்தேயு 6:19-24
5. விசுவாசக் குறைவு: மத்தேயு 6:25-34
6. நியாயந்தீர்த்தல்: மத்தேயு 7:1-6, லூக்கா 6:37-42

ஈ. இராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்தலுக்கான அறிமுகம்:

1. ஜெபம்: மத்தேயு 7:7-11
2. நீதி: மத்தேயு 7:12, லூக்கா 6:31, 43-45
3. பிரவேசிக்கும் வழி: மத்தேயு 7:13-14
4. கள்ள போதகர்களுக்கான எச்சரிக்கை: மத்தேயு 7:15-23
5. இரண்டு அத்திபாரங்கள்: மத்தேயு 7:24-8:1, லூக்கா 6:46-49

17. கப்பர்நகூமில் இராஜாவுடைய அதிகாரத்தை அடையாளங்காணல்: மத்தேயு 8:5-13 லூக்கா 7:10
18. நாயீனனில் இராஜாவுடைய அதிகாரத்தை அடையாளங்காணல்: லூக்கா 7:11-17
19. இராஜ்ஜியத்திற்கான பன்னிருவரின் சாட்சி: மத் 9:35-11:1, மாற்கு 6:6-13, லூக் 9:1-6

4. இராஜாவை பற்றிய சர்ச்சை

அ. யோவான் நிராகரித்தல்: மத்தேயு 11:2-19, லூக்கா 7:18-35

1. யோவானின் மரணம்: மத்தேயு 14:1-12, மாற்கு 6:14-29, லூக்கா 9:7-9

ஆ. கலிலேயாவின் நகரங்களை சபித்தல்: மத்தேயு 11:20-30

1. அவர்களது அவநம்பிக்கைக்கு கண்டனம்: மத்தேயு 11:20-24
2. அவர்களது அவநம்பிக்கைக்கு விளக்கம்: மத்தேயு 11:25-27
3. விசுவாசிப்பதற்கான அழைப்பு: மத்தேயு 11:28-30

இ. பாவியின் மீது சர்ச்சை: லூக்கா 7:36-50

ஈ. இராஜாவுக்கு சாட்சியிடல்: லூக்கா 8:1-3

உ. இராஜா தலைவர்களால் நிராகரிக்கப்படல்: மத்தேயு 12:22-37, மாற்கு 3:19-30

ஊ. தலைவர்கள் இரரஜாவிடத்தில் அடையாளம் கேட்டல்: மத்தேயு 12:38-45

எ. தேசத்தவர்களால் நிராகரிக்கப்படல்: மத்தேயு 12:46-50, மாற்கு 3:31-35, லூக்கா 8:19-21

ஏ. நிராகரிக்கப்பட்ட இராஜாவின் வெளிப்பாடுகள்:

1. தற்போதுள்ள இராஜ்ஜியம்: மத்தேயு 13:1-53, மாற்கு 4:1-34, லூக்கா 8:4-18
2. இயற்கையின் மேல் அதிகாரம்: மத்தேயு 8:18, 23-27, மாற்கு 4:35-41, லூக்கா 8:22-25
3. பிசாசுகளின் மேல் அதிகாரம்: மத்தேயு 8:28-34, மாற்கு 5:1-20, லூக்கா 8:26-39
4. வியாதிகள் மற்றும் மரணத்தின் மேல் வல்லமை: மத்தேயு 9:18-26, மாற்கு 5:21-43, லூக்கா 8:40-56
5. குருட்டாட்டத்தின் மேல் வல்லமை: மத்தேயு 9:27-34

ஐ. நாசரேத்தில் நிராகரிக்கப்படல்: மத்தேயு 13:54-58, மாற்கு 6:1-6

5. இராஜாவினால் சீடர்களுக்கான வழிகாட்டல்

அ. 5.000 பேர் போஷிக்கப்படல்: மத்தேயு 14:13-21, மாற்கு 6:30-44, லூக்கா 9:10-17 யோவான் 6:1-13

ஆ. இராஜாவாக இருக்கும் வாய்பை நிராகரித்தல்: மத்தேயு 14:22-23, மாற்கு 6:45-46, யோவான் 6:14-15

இ. கெனேசரோத்தில் உவமைகள் மூலம் வழிகாட்டல்: மத்தேயு 14:34-36, மாற்கு 6:53-56

ஈ. ஜீவ அப்பத்தைக் குறித்த வழிகாட்டல்: யோவான் 6:22-71

உ. குற்றஞ்சாட்டுதலைக் குறித்த வழிமுறை: மத்தேயு 15:1-20, மாற்கு 7:1-23, யோவான் 7:1

ஊ. வழிமுறைகள்:

1. தீரு சீதோன்: மத்தேயு 15:21-28, மாற்கு 7:24-30
2. தெக்கபோலி: மத்தேயு 15:29-38, மாற்கு 7:31-8:9
3. மக்தலா: மத்தேயு 15:39-16:4, மாற்கு 8:10-12
4. நிராகரிப்புக்கு எதிரான எச்சரிக்கை: மத்தேயு 16:5-12, மாற் 8:13-26

எ. பேதுருவின் அறிக்கை: மத்தேயு 16:13-20 மாற்கு 8:27-30, லூக்கா 9:18-21

ஏ. இராஜாவின் மரணத்தைக் குறித்த அறிவுறுத்தல்: மத்தேயு 16:21, 17:22-23, மாற்கு 8:31-33, 9:30-32, லூக்கா 9:22, 43-45

ஐ. சீஷத்துவம் பற்றிய அவதானம்: மத்தேயு 16:22-28, மாற்கு 8:34-9:1, லூக்கா 9:23-27.

ஒ. இராஜ்ஜியத்தைப்பற்றிய வெளிப்பாடு: மத்தேயு 17:1-8, மாற்கு 9:2-8, லூக்கா 9:28-36

ஔ. எலியாவைக் குறித்த அறிவுறுத்தல்: மத்தேயு 17:9-13, மாற்கு 9:9-13

க. தன் சார்பான அவதானம்: மத்தேயு 17:14-21, மாற்கு 9:14-29, லூக்கா 9:37-43

கா. புத்திரசுவிகாரம் பற்றிய அறிவுறுத்தல்: மத்தேயு 17:24-27

கி. தாழ்மை: மத்தேயு 18:1-5, மாற்கு 9:33-37. லூக்கா 9:46-48

கீ. பெருமை: மத்தேயு 18:6-14, மாற்கு 9:38-50, லூக்கா 9:49-50

கு. மன்னிப்பு: மத்தேயு 18:15-35

கூ. சீஷத்துவம்: மத்தேயு 8:19-22, லூக்கா 9:57-62

கே. இராஜாவின் சகோதரரால் விடுக்கப்பட்ட சவால்: யோவான் 7:2-9

கை. எருசலேமிற்கான பயணம்: லூக்கா 9:51-56, யோவான் 7:10

6. இராஜாவுக்கான எதிர்ப்பு

அ. கூடாரப்பண்டிகையில் ஏற்பட்ட பிரச்சனை

1. இராஜாவின் அதிகாரத்தைக் குறித்த கேள்வி: யோவான் 7:11-15
2. இராஜாவின் விளக்கம்: யோவான் 7:16-24
3. இராஜாவின் நபரின் கேள்வி: யோவான் 7:25-27
4. இராஜாவின் விளக்கம்: யோவான் 7:28-30
5. பதில்: யோவான் 7:31-36
6. இராஜாவிடத்திலிருந்து அழைப்பு: யோவான் 7:37-52

ஆ. நியாப்பிரமாணம் மீதான பிரச்சனை: யோவான் 7:53-8:11

இ. வெளிச்சம் மீதான பிரச்சனை: யோவான் 8:12-20

ஈ. இராஜாவின் மனிதனுடன் பிரச்சனை: யோவான் 8:21-59

உ. குருடனை குணமாக்கியமையால் பிரச்சனை: யோவான் 9:1-41

ஊ. மேய்ப்பர்களின் மேல் பிரச்சனை: யோவான் 10:1-21

எ. ஏழு பேரின் சாட்சி: லூக்கா 10:1-24
ஏ. நித்திய ஜீவனைப்பற்றியதான கேள்வி: லூக்கா 10:25-37
ஐ. பிரதிஷ்டை பண்டிகை மீதான பிரச்சனை: யோவான் 10:22-39
ஒ. ஊமையன் குணமானதைப்பற்றிய பிரச்சனை: லூக்கா 11:14-36
ஔ. சடங்காச்சாரத்தை பற்றியிருத்தல் பற்றிய பிரச்சனை: லூக்கா 11:37-54

7. இராஜாவால் சீடர்களுக்கான அறிவுறுத்தல்.
   அ. ஐக்கியத்திற்கான உதாரணம்: லூக்கா 10:38-42
   ஆ. ஜெபத்திற்கான அறிவுறுத்தல்: லூக்கா 11:1-13
   இ. இராஜ்ஜியத்தைக் குறித்த கொள்கைகள்:
      1. மாய்மாலம்: லூக்கா 12:1-12
      2. பேராசை: லூக்கா 12:13-34
      3. விழித்திருத்தல் (அவதானமாயிருத்தல்): லூக்கா 12:35-41
      4. விசுவாசமாயிருத்தல்: லூக்கா 12:42-48
      5. இராஜாவின் வருகையால் ஏற்படும் விளைவு: லூக்கா 12:49-53
      6. அடையாளங்கள்: லூக்கா 12:54-59
      7. மனந்திரும்புதல்: லூக்கா 13:1-9
      8. இஜ்ரவேலருடைய தேவை: லூக்கா 13:10-17
      9. இராஜ்ஜியத்தை ஒபிபிடுதல்: லூக்கா 13:18-21
   ஈ. யூதேயாவிலிருந்து விலகிச் செல்லல்: யோவான் 10:40-42
   உ. பரலோக இராஜ்ஜியத்திற்குள் நுழைவதற்கான வழிகாட்டல்: லூக்கா 13:22-35
   ஊ. மத அனுஷ்டானங்களை கடைபிடிக்கும் பரிசேயனின் வீடு: லூக்கா 14:1-24
   எ. இராஜ்ஜியத்தின் கொள்கைகளைக் குறித்த வழிகாட்டல்:
      1. சீஷத்துவம்: லூக்கா 14:25-35
      2. பாவிகளைப்பற்றி தேவனுடைய அணுகுமுறை: லூக்கா 15:1-32
      3. செல்வம்: லூக்கா 16:1-31
      4. மன்னிப்பு: லூக்கா 17:1-6
      5. ஊழியம்: லூக்கா 17:7-10
   ஏ. லாசரு உயிரோடு எழும்புதல்:
      1. அற்புதம்: யோவான் 11:1-44
      2. அற்புதத்தின் மேலுள்ள பிரச்சனை: யோவான் 11:45-54
   ஐ. இராஜ்ஜியத்தின் கொள்கைகளைக் குறித்த வழிகாட்டல்:
      1. நன்றி: லூக்கா 17:11-19
      2. வரப்போகும் இராஜா: லூக்கா 17:20-37
      3. ஜெபம்: லூக்கா 18:1-14
      4. விவாகரத்து: மத்தேயு 19:1-12, மாற்கு 10:1-12
      5. இராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்தல்: மத்தேயு 19:13-15, மாற்கு 10:17-31, லூக்கா 18:31-34
      6. இஸ்ரவேல்: மத்தேயு 20:29-34 மாற்கு 10:46-53, லூக்கா 18:35-43
      7. தனிப்பட்ட விசுவாசம்: லூக்கா 19:1-10
      8. ஒத்தி வைக்கப்பட்டுள்ள இராஜ்ஜியம்: லூக்கா 19:11-18

8.இராஜாவின் பிரசன்னம்

அ. இராஜா பெத்தானியாவிற்கு வருகை தரல்: யோவான் 11:55-12:1, 9-11

ஆ. எருசலேமிற்குள் பிரவேசித்தல்: மத்தேயு 21:1-11, 14-17, மாற்கு 11:1-11, லூக்கா 19:29-44, யோவான் 12:12-19

இ. இராஜாவின் அதிகாரம்: மத்தேயு 21:12-13, 18-19, மாற்கு 11:12-18, லூக்கா 19:45-48

ஈ. இராஜாவின் அழைப்புகள்: யோவான் 12:20-50

உ. அதிகாரத்திற்கான ஆதாரம்: மத்தேயு 21:20-22, மாற்கு 11:19-25, லூக்கா 21:37-38

ஊ. இராஜாவின் அதிகாரத்திற்கான சவால்:

1. ஆசாரியர்களாலும் மூப்பர்களாலும் இராஜா நிராகரிக்கப்படுதல்: மத்தேயு 21:23-22:14, மாற்கு 11:27-12:12, லூக்கா 20:1-19
2. இராஜ்ஜியத்தின் கொள்கைகள் சம்பந்தமான பரிசேயரினதும் ஏரோதியரினதும் கருத்து: மத்தேயு 22:15-22, மாற்கு 12:13-17 லூக்கா 20:20-26
3. உயிர்த்தெழுதலைப்பற்றி இராஜ்ஜியத்தின் கொள்கைகள் சம்பந்தமான சதுசேயரின் கருத்து: மத்தேயு 22:23-33, மாற்கு 12:18-27, லூக்கா 20:27-40
4. இராஜ்ஜியத்தின் மாபெரும் கட்டளை சம்பந்தமாக பரிசேயரின் கருத்து: மத்தேயு 22:34-40, மாற்கு 12:28-34

எ. இராஜாவின் சவால்: மத்தேயு 22:41-46, மாற்கு 12:35-37, லூக்கா 20:41-44

ஏ. நியாயத்தீர்ப்பின் கொள்கைகள்: மத்தேயு 23:1-39, மாற்கு 12:38-40, லூக்கா 20:45-47

ஐ. கொடுத்தலைப்பற்றிய இராஜ்ஜியத்தின் கொள்கை: மாற்கு 12:41-44, லூக்கா 21:1-4

9. இராஜா மரணத்திற்கு ஆயத்தமாகுதல்

அ. இராஜாவின் முன்னறிவிப்பு

1. கேள்வி: மத்தேயு 24:1-3
2. இடுக்கண்: மத்தேயு 24:27-30
3. இரண்டாம் வருகை: மத்தேயு 4:27-30
4. இஸ்ரவேலர் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்படல்: மத்தேயு 24:31
5. கடைசி காலத்தைக் குறித்த உவமைகள்:
   - அ. அத்திமரம்: மத்தேயு 24:32-44
   - ஆ. உண்மையுள்ள வேலைக்காரன்: மத்தேயு 24:45-51
   - இ. பத்து கன்னிகள்: மத்தேயு 25:1-13
   - ஈ. பத்து தாலந்து: மத்தேயு 25:14-30
6. புறஜாதிகளின் நியாயத்தீர்ப்பு: மத்தேயு 25:31-46

ஆ. இராஜா மரணத்திற்கு ஆயத்தம்

1. முன்னறிவிக்கப்பட்ட அவரது மரணம்: மத்தேயு 26:1-2, மாற்கு 14:1, லூக்கா 22:1
2. ஆட்சியாளர்களின் திட்டம்: மத்தேயு 26:3-5 மாற்கு 14:1-2 லூக்கா 22:2
3. எண்ணெய் ஊற்றுதல்: மாற்கு 14:3-9 மத்தேயு 26:6-13 யோவான் 12:2-8
4. காட்டிக் கொடுக்க உறுதியளித்தல்: மத்தேயு 26:14-16 மாற்கு 14:10-11, லூக்கா 22:3-6
5. பஸ்கா பண்டிகைக்கான ஆயத்தம்: மாற்கு 14:12-16 மத்தேயு 26:17-19, லூக்கா 22:7-13
6. பஸ்கா பண்டிகை: மத்தேயு 26:20 மாற்கு 14:17 லூக்கா 22:14-16, 24-30
7. எடுத்துக்காட்டை வழங்குதல்: யோவான் 13:1-20
8. யூதாஸ் காட்டிக் கொடுப்பதை முன்னறிவித்தல்: மத்தேயு 26:21-25

மாற்கு 14:18-21 லூக்கா 22:21-23 யோவான் 13:21-30

9.பேதுருவின் மறுதலிப்பை முன்னறிவித்தல்: மத்தேயு 26:31-35 மாற்கு 14:27-31 லூக்கா 22:31-38 யோவான் 13:37-38

10.ஞாபகார்த்தம்: மத்தேயு 26:26-30, மாற்கு 14:22-26, லூக்கா 22:17-20

இ. இராஜாவின் இறுதி செய்தி:

1. அறிமுகம்: யோவான் 13:31-35
2. பிரச்சனைகள்: யோவான் 13:36-14:24
3. வாக்குத்தத்தம்: யோவான் 14:25-31
4. வழிகாட்டலை குறித்தவை:
   அ. கனி கொடுத்தல்: யோவான் 15:1-17
   ஆ. சீடர்களின் எதிரிகள்: யோவான் 15:18-16:4
   இ. பரிசுத்தாவியானவரின் ஊழியம்: யோவான் 16:5-15
   ஈ. ஊயிர்த்தெழுதலின் பலன்: யோவான் 16:16-28
   உ. முடிவு: யோவான் 16:29-33

ஈ. இராஜாவின் இறுதி ஜெபம்

1. தனக்கான அவரது ஜெபம்: யோவான் 17:1-5
2. அவரது சீடர்களுக்கான ஜெபம்: யோவான் 17:6-19
3. விசுவாசிகளுக்கான அவரது ஜெபம்: யோவான் 17:20-26

உ. தோட்டத்தின் ஜெபம்: மத்தேயு 26:36-46, மாற்கு 14:32-42, லூக்கா 22:39-46, யோவான் 18:1

10. இராஜாவின் மரணம்

அ. கைது: மத்தேயு 26:47-56, மாற்கு 14:43-52, லூக்கா 22:47-53, யோவான் 18:2-12

ஆ. இராஜாவின் மத விசாரணை

1. அன்னாவால் விசாரணை: யோவான் 18:12-14, 19-23
2. காய்ப்பாவால் விசாரணை: மத்தேயு 26:57, 59-68 மாற்கு 14:53, 55-56, லூக்கா 22:54, 63-65 யோவான் 18:24
3. பேதுருவின் மறுதலிப்பு: மத்தேயு 26:58,69-75 மாற்கு 14:54, 66-72 லூக்கா 22:54-62 யோவான் 18:15-18, 25-27
4. சனகரிப் சங்கத்தின் தீர்ப்பு: மத்தேயு 27:1, மாற்கு 15:1, லூக்கா 22:66-71
5. யூதாசின் மரணம்: மத்தேயு 27:3-10

இ. இராஜாவின் உள்ளுர் விசாரணை

1. பிலாத்தின் முன் விசாரணை: மத்தேயு 27:2, 11-14 மாற்கு 15:2-5, லூக்கா 3:1-5, யோவான் 18:28-38
2. ஏரோதுவிற்கு முன் விசாரணை: லூக்கா 23:6-12
3. பிலாத்தின் முன் விசாரணை: மத்தேயு 27: 15-26 மாற்கு 15:6-15 லூக்கா 23:13-25 யோவான் 18:39-19:1, 4-16
4. இராஜா பரிகாசிக்கப்படல்: மத்தேயு 27:27-30 மாற்கு 15:16-19 யோவான்19:2-3

ஈ. கல்வாரி பயணம்: மத்தேயு 27:31-34, மாற்கு 15:20-23, லூக்கா 23:26-33, யோவான் 19:16-17

உ. இராஜா சிலுவையில் அறையப்படல்

1. முதல் மூன்று மணி நேரம்: மத்தேயு 27:35-44, மாற்கு 15:24-32, லூக்கா 23:33-43, யோவான் 19:18-27
2. இரண்டாம் மூன்று மணி நேரம்: மத்தேயு 27:45-50, மாற்கு 15:33-37

லூக்கா 23:44-46, யோவான் 19:28-30

3. இராஜா மரித்ததிறகான அறிகுறிகள்: மத்தேயு 27:51-56, மாற்கு 15:38-41, லூக்கா 23:45,47-49

ஊ. இராஜா அடக்கம்பண்ணப்படல்: மத்தேயு 27:57-60, மாற்கு 15:42-47, லூக்கா 23:50-56, யோவான் 19:31-42

எ. இராஜாவின் கல்லறை முத்திரையிடப்படல்: மத்தேயு 27:62-66

11.இராஜா உயிர்த்தெழுதல்

அ. பெண்கள் ஆயத்தமாகுதல்: மத்தேயு 28:1, மாற்கு 16:1

ஆ. கல்லறை திறக்கப்படல்: மத்தேயு 28:2-4

இ. பெண்களின் வருகை: மத்தேயு 28:5-8, மாற்கு 16:2-8, லூக்கா 24:1-8, யோவான் 20:1

ஈ. சீடர்களின் அறிக்கை: லூக்கா 24:9-12, யோவான் 20:11-18

உ. இராஜா மரியாளுக்கு தரிசனமளித்தல்: மாற்கு 16:9-11, யோவான் 20:11-18

ஊ. இராஜா பெண்களுக்கு தரிசனமளித்தல்: மத்தேயு 28:9-10

எ. காவலர்களின் அறிக்கை: மத்தேயு 28:11-15

ஏ. எம்மாவு வீதியில் இராஜா சீடர்களுக்கு தரிசனமளித்தல்: மாற்கு 16:12-13, லூக்கா 24:13-32

ஐ. இரண்டு சீடர்களின் அறிக்கை: லூக்கா 24:33-35

ஒ. பத்து சீடர்களுக்கு தரிசனமளித்தல்: மாற்கு 16:14, லூக்கா 24:36-43, யோவான் 20:19-25

ஓ. பதினொரு சீடர்களுக்கு இராஜா தரிசனமளித்தல்: யோவான் 20:26-31

ஔ. ஏழு சீடர்களுக்கு இராஜா தரிசனமளித்தல்: யோவான் 21:1-25

12. இராஜாவால் கட்டளையிடப்படல்: மத்தேயு 28:16-20, மாற்கு 16:15-18, லூக்கா 24:44-49

13. இயேசு ராஜா பரலோகம் திரும்புதல்: மாற்கு 16:19-20, லூக்கா 24:50-53

அத்தியாயம் மூன்று

# கடந்தகால, நிகழ்கால, எதிர்கால இராஜ்ஜியம்

## நோக்கங்கள்:

இந்த அதிகாரத்தை கற்று முடித்ததும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ கடந்தகால இராஜ்ஜியத்தின் வடிவத்தை விளங்கிக்கொண்டு நிருபித்துக்காண்பிக்கவும்,
- ☐ நிகழ்கால இராஜ்ஜியத்தின் வடிவத்தை விளங்கிக்கொண்டு நிருபித்துக்காண்பிக்கவும்,
- ☐ எதிர்கால இராஜ்ஜியத்தின் வடிவத்தை விளங்கிக்கொண்டு நிருபித்துக்காண்பிக்கவும்,
- ☐ தேவனுடைய இராஜ்ஜியத்தின் தற்போதைய அடிப்படை சத்தியங்களை முன்வைக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்

**அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (மத்தேயு 25:34)**

## அறிமுகம்

முந்தைய அதிகாரத்தில் தேவனுடைய இராஜ்ஜியம் மற்றும் அதன் ஆட்சியாளர், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே என அறிமுகப்படுத்தப்பட்டார். இந்த அதிகாரம் இராஜ்ஜியத்தின் தற்கால, நிகழ்கால கண்ணோட்டத்தையும், எதிர்கால தேவ இராஜ்ஜியத்தைப்பற்றியும் முன்வைக்கும். தேவனுடைய இராஜ்ஜியத்தின் தற்போதைய அடிப்படை சத்தியங்களையும் வழங்கும்.

வேதாகமத்தின் பழைய, புதிய ஏற்பாடுகள் இரண்டையும் இணைக்கின்ற அடிப்படை நோக்கங்கள் இருக்கின்றன. அந்த நோக்கம் தேவனுடைய இராஜ்ஜியமும் அதன் இராஜாவுமாகும். 'தேவனுடைய இராஜ்ஜியம்' மற்றும் 'பரலோக இராஜ்ஜியம்' என்ற சொற்றொடர்களை பழைய ஏற்பாட்டில் காண முடியாது. இவைகள் புதிய ஏற்பாட்டின் சொற்களாகும். ஆனாலும் நீங்கள் தேவ இராஜ்ஜியத்தின் கடந்தகால வரலாற்றை இந்த பாடத்தில் கண்டறிவதோடு, அதன் அத்திவாரம் பழைய ஏற்பாட்டில் இடப்பட்ட முறையையும் கற்பீர்கள். தேவஇராஜ்ஜியத்தின் கடந்தகால, நிகழ்கால வடிவங்கள் பழைய ஏற்பாட்டின் அத்திபாரத்திலேயே கட்டப்பட்டள்ளது.

## கடந்தகால இராஜ்ஜியம்: பழைய ஏற்பாட்டில்

தேவ இராஜ்ஜியம் நித்தியமானது. இதன் அர்த்தம் அது ஏற்கனவே இருந்தது மற்றும் எப்போதுமே இருக்கும் என்பதாகும்.

**உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. (சங்கீதம் 145:13)**

தேவராஜ்ஜியம் முதலாவதாக பரலோகில் நிறுவப்பட்டது. அவர் உலகத்தை உருவாக்கியபோது தேவ இராஜ்ஜியத்தை அவர் உருவாக்கிய பூமியிலும் நிறுவ வேண்டும் என்பதே அவரது வாஞ்சையாக இருந்தது.

## ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன்:

இந்த விருப்பத்தை நிறைவேற்றவும், தேவ இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்யவும் சரியான ஓர் சூழல் உருவாக்கப்பட்டது. ஏதேன் என்ற இத்தோட்டத்தில் முதலாவது மனிதனையும் மனுஷியையும் அவர்கள் பலுகிப்பெருகி பூமியை நிரப்பும்படி அவர் உருவாக்கினார். இவ்விதமான இனப்பெருக்கத்தின் மூலம் அவர்கள் உலகம் முழுவதிலும் தேவ இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்யும்படி வைக்கப்பட்டார்கள்.

உலக உருவாக்கம், தேவ இராஜ்ஜியத்தின் விரிவாக்கம் மனிதனின் பரம்பரையினால் ஆகவேண்டும் என்றிருந்தது:

> **அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (மத்தேயு 25:34)**

முதல் மனிதன் மற்றும் மனுஷியான ஆதாம், ஏவாளுக்கு பூமியை ஆளுகை செய்து தேவ இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்யும் ஆளுமை வழங்கங்கப்பட்டு இருந்தது.

> **பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்.**
>
> **தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.**
>
> **பின்பு தேவன் அவர்களை நோக்கி: நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 1:26-28**

தேவனது மண்ணுலக இராஜ்ஜியம் அடிமைத்தனத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டுமென தேவன் விரும்பவில்லை. இராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற மனிதன் சுயாதீனமுள்ளவனாக இருக்க வேண்டும் என்றே தேவன் விரும்பினார். அதனால் புதிய இராஜ்ஜியத்தில் அவர் ஓர் கட்டளையை வகுத்தார். அந்த கட்டளை சுதந்திரத்தை அடிப்படையாகவே கொண்டிருந்தது. தேவ இராஜ்ஜியத்திற்குள் தொடர்ந்து மனிதன் ஜீவிப்பானா இல்லையா என்பதை அக்கட்டளையே தீர்மானிக்கும்.

> **தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி: நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின்**

**கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.**

**ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார். (ஆதியாகமம் 2:16-17)**

ஆதியாகமம் 3ஆம் அதிகாரத்தில் ஆதாமும் ஏவாளும் பிழையானதை தெரிந்தெடுத்த கதையை நீங்கள் வாசிக்கலாம். ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தமையால் தேவஇராஜ்ஜியத்தின் உரிமையை இழந்துபோனார்கள். அவர்கள் நித்திய ஜீவனை இழந்துபோனதோடு இராஜ்ஜியத்தின் அழகான சூழலையும் இழந்துபோனார்கள்.

பாவத்தின் காரணமாக சாத்தானின் சில சாபங்கள் பூமியின் மேலும் மனிதனின் மேலும் வந்தது. இச்சாபங்களைப்பற்றி 3ஆம் அதிகாரத்தில் நீங்கள் வாசிக்கலாம். அதனால் பரலோக இராஜ்ஜியத் திற்குரிய பரிபூரணமான சூழல் பூமியிலிருந்து அகன்றுவிட்டது. மனிதனால் அதிககாலம் பூமியை ஆள முடியாது போனதுடன் பாவத்தின் காரணமாக இராஜாவின் பிரசன்னத்திலிருந்தும் பிரிக்கப்பட்டான்.

தேவன் மனிதன் மூலமாக தேவ இராஜ்ஜியத்தை ஸ்தாபித்துக் கொடுத்தார், ஆனால் அந்த இராஜ்ஜியம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. தேவனால் அவனுக்கு ஆயத்தம் செய்யப்பட்டு அத்தபாரம் போடப்பட்ட மரபு ரிமையை அவன் இழந்துபோனதோடு, சாத்தான் பூமியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டான். இந்த இருளான வேளையில் மனிதனுக்கான தேவனின் இராஜ்ஜியத்தின் வாக்குத்தத்தம் புதுப்பிக்கப்பட்டது. தேவன் சாத்தானிடம் கூறினார்:

**உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்கு-வேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். (ஆதியாகமம் 3:15)**

ஒரு நாள் வந்து எதிரியான சாத்தானின் அதிகாரத்தை நசுக்குவேன் என்பதே இராஜாவின் முதலாவது வாக்குத்தத்தமாக இருக்கின்றது. ஸ்திரியின் உடலில் இருந்து இராஜாவாகிய இயேசு கிறிஸ்து வருவார். அவரது மரணத்தினால் மனிதர்களின் பாவம் சுத்திகரிக்கப்பட்டு, தேவ இராஜ்ஜியத்திற்கென்று மறுபிறப்படைந்து நித்திய ஜீவனுக்குரியவர்களாகி மரபுரிமையை மீளவும் பெறுவார்கள்.

## தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்:

மனிதர்கள் தோல்வியடைந்த பின்னர் தேவன் அவரது இராஜ்ஜியத்தை உலகத்தில் ஸ்தாபிக்கும் படியாக ஓர் ஜாதியை தேர்ந்தெடுத்தார். தேவன் ஆபிரகாம் என்ற மனிதனை ஒரு ஜாதியாக்கும்படிக்கு எழப்பண்ணினார். அவர் இஸ்ரவேல் ஜாதியினருக்காக அநேக வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தியதோடு அவர்களுக்கூடாக தேவனுடைய இராஜ்ஜியத்தை உலகத்திற்குள் ஏற்படுத்தினார். ஆபிரகாமின் கதை யையும், அவனுக்கும் இஸ்ரவேலருக்கும் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்ததை ஆதியாகமம் 12 முதல் 25 வரையும் நீங்கள் வாசிக்கலாம்.

இஸ்ரவேல் என்ற ஜாதியினர் ஓர் சலுகைக்காக தேர்ந்தெடுக்கப்படாமல், ஒரு நோக்கத்திற்காகவே தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவர்கள் மற்ற ஜாதியினரைப் பார்க்கிலும் நல்லவர்கள் என்பதற்காக-

வோ அவர்களை அதிகமாய் அவர் நேசித்தோ தேர்ந்தெடுக்கவில்லை. அது ஒரு உத்தரவாதமுள்ள தீர்மானமாகும். தேவனுடைய இராஜ்ஜியத்தை உலகெங்கும் ஸ்தாபிக்க வேண்டும் என்பதே அந்த உத்தரவாதம். இராஜ்ஜியத்தின் சட்டதிட்டங்களையும் தேவன் இஸ்ரவேலருக்கு வழங்கினார். இந்த சட்ட திட்டங்களில் அநேகமானவை யாத்திராகமப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மண்ணுலக அரசர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு உதவும்படியாக பின்னர் நியமிக்கப் பட்டனர். ஆனாலும் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் உத்தரவாத்திலிருந்து இஸ்ரவேலர் தோவ்வியடைந்தனர். அம்மக்கள் பாவம் செய்து திரும்பவும் பொய்யான தேவர்களிடத்தில் திரும்பி னார்கள். நீங்கள் அவர்களின் பாவங்களைக் குறித்த உதாரணங்களை பழைய ஏற்பாட்டிலுள்ள நியாயாதிபதிகளின் புத்தகத்தில் வாசிக்கலாம்.

பௌதீக உலகிலுள்ள திராட்சை கொடிகளோடு தேவன் இஸ்ரவேல் ஜாதியை ஒப்பிட்டார். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கென 'நற்கனியை' கொடுக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். கடைசியாக தேவன் இஸ்ரவேலரை பற்றி கூறினதாவது:

> **இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி, அது தனக்குத்தானே கனிகொடுக்கிறது. அவன் தன் கனியின் திரளுக்குச் சரியாய்ப் பலிபீடங்களைத் திரளாக்குகிறான். தங்கள் தேசத்தின் செழிப்புக்குச் சரியாய்ச் சிறப்பான சிலைகளைச் செய்கிறார்கள்.**
>
> **அவர்கள் இருதயம் பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்போதும் குற்றஞ்சுமத்தப்படுவார்கள். அவர்கள் பலிபீடங்களை இடித்து, அவர்கள் சிலைகளை நாசமாக்குவார்.**
>
> **நாம் கர்த்தருக்குப் பயப்படாமற்போனபடியினால் நமக்கு ராஜா இல்லை. ராஜா இருந்தாலும் நமக்காக என்ன செய்வான் என்று இனிச் சொல்லுவார்கள். (ஓசியா 10:1-3)**
>
> **நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன். நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன? (எரேமியா 2:21)**

அவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை புறக்கணித்து, விரிவாக்கம் செய்யும் உத்தரவாதத்தை நிறைவேற்ற தவறியபடியால். இஸ்ரவேல் இரண்டாக பிரிந்தது. அவர்கள் யூதா எனவும் இஸ்ரவேல் எனவும் பிரிந்தனர். கடைசியாக இவ்விரண்டு தேசமும் புறஜாதியாரின் அடிமைத்தனத்திற்குள் சென்றது.

இஸ்ரவேலர் தோல்வியடைந்தபோதும் தேவனுடைய இராஜ்ஜியம் தேவன் வாக்குப்பண்ணியபடி மீண்டும் கண்ணுக்குப் புலப்படும்படியாக மீண்டும் இஸ்ரவேலிலே ஸ்தாபிக்கப்படும். தீர்க்தரிசிகளுக்கூடாக வரப்போகும் இராஜாவையும் அவரது இராஜ்ஜியம் பற்றியும் தேவன் அநேக வாக்குத்தத்தங்களை கொடுத்துள்ளார்.

தாவீதுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் (2சாமுவேல் 7:16, சங்கீதம் 22:27-28, 72:7-11, 89:1-4, 96 மற்றும் 98) எரேமியாவிற்கு கொடுக்கப்பட்டது (எரேமியா 3:17-18, 23:5-6, 31:31-34) ஏசாயா தீர்க்கத ரிசியால் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் (ஏசாயா 2:2-5, 33:20-22,35 அதிகாரம், 62:1-2, 65:17-25) எசேக்கியேலுக்கும் கூட வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது. (எசேக்கியேல் 26:25-30, 37:22-28) யோவேல்

(யோவேல் 2:28), சகரியா (சகரியா 8:20-23, 12:10, 14:9-17) ஆமோஸ் (ஆமோஸ் 9:15) மற்றும் மீகா (மீகா 4) இராஜ்ஜியத்தைக் குறித்து கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களைவிடவும் அநேக வாக்குத்தத்-தங்கள் பட்டியலிடப்பட்டு இருக்கின்றன.

இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக, வரப்போகின்ற மேசியாவை எதிர்பார்த்து காத்திருக் கின்றனர். மற்ற நாடுகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கின்ற இராஜாவை எதிர்பார்த்து காத்திருக் கின்றனர். அவர்கள் இழந்துபோன இராஜ்ஜியத்தை புலப்படும் வகையில் மீள கட்டப்படுவதற்காக காத்திருக்கின்றனர்.

## கடந்தகால இராஜ்ஜியம் : புதிய ஏற்பாட்டில்

பழைய மற்றும் புதிய ஏற்பாட்டில் ஒன்றாக இணைக்கும் இராஜ்ஜியத்தைப்பற்றிய முக்கிய வசனம் இருக்கின்றது.

> **நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யோவான்வரைக்கும் வழங்கிவந்தது. அதுமுதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது, யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக்கிறார்கள். (லூக்கா 16:16)**

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் வரப்போகின்ற இராஜாவையும் அவரது இராஜ்ஜியத்தைப் பற்றியும் முன்னறிவிக்கின்றன. இந்த முன்னறிவிப்புகள் புதிய ஏற்பாட்டிலே நிறைவேறியுள்ளது. பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணங்கள் புதிய ஏற்பாட்டின் இராஜ்ஜியத்தின் கொள்கைகளுக்கு அத்திபாரமாக இருக்கிறது. இயேசு வந்தபோது நியாப்பிரமாணத்தை விட்டுவிடாமல் அதை நிறைவேற்றி, இராஜ்ஜி யத்தின் கொள்கைகளுக்கு அத்திபாரமிட்டார்.

யோவான் ஸ்நானகன் யூதேயாவின் வனாந்தரத்திற்கு வந்து தனது குரலை உயர்த்தி 'பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கின்றது' என்று அவரது அந்நாட்களின் வழக்கத்தில் பாவிக்கப்பட்ட சொல்லை பாவித்து அறிவித்தார். இச்சொல்லை இஸ்ரவேலர் புரிந்து கொண்டனர், இராஜாவையும் இராஜ்ஜியத் தைப்பற்றிய வாக்குத்தத்தமும் ஒவ்வொரு யூதனது இருதயத்தையும் கொழுந்துவிட்டெரியச்செய்தது.

> **அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது எனறு பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. (மத்தேயு 3:1-3)**

### தெரிந்து கொள்ளப்பட்ட மனிதன்:

பழைய ஏற்பாட்டில் தேவன் ஒரு மனிதனை, தனது இராஜ்ஜியத்தை உலகத்தில் விரிவாக்கம் செய்யும் படியாக தெரிந்தெடுத்தார். ஆதாம் இந்த உத்தரவாதத்தில் தவறிவிட்டான். புதிய ஏற்பாட்டில் தேவன் தனது ஒரே குமாரனான இயேசுவை தனது இராஜ்ஜியத்தை உலகத்தில் விரிவாக்கம் செய்யும்படியாக அனுப்பினார். இயேசு இவ்வுத்தரவாதத்தை நிறைவேற்றுவதை தனது வாழ்க்கையிலும் ஊழியத்திலும் மையமாக கொண்டிருந்தார்.

யோவான் ஸ்நானகன் சிறையிடப்பட்டு மரணமடைந்ததின் பின்னர், இராஜ்ஜியத்தைக் குறித்த செய்தியை பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார்.

**யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:**

**காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற்கு 1:14-15)**

**அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத்தேயு 4:17)**

இயேசு இவ்மண்ணுலக ஊழியத்தின்போது, சீடர்களாயிருக்கும்படி பல முக்கிய நபர்களை தேர்ந் தெடுத்தார். 'பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கின்றது' (மத்தேயு 10:7) என்று பிரசங்கிக்கும்படியும் அறிவுறுத்தல் கொடுத்தார். 'சமீபித்திருக்கின்றது' என்பதின் அர்த்தம் என்ன? இதே சொல்லை பிரிதொரு இடத்தில் இயேசு பாவித்திருப்பதை கவனியுங்கள்.

**என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம் என்றார். (மத்தேயு 26:46)**

இயேசு தன்னை ஒருவன் காட்டிக்கொடுக்கும்படி 'சமீபமாக' வந்துவிட்டான் எனும்போது, அந்நபர் (யூதாஸ்) அங்கே வருகின்றான். துரோகம் கையடியில் வந்துவிட்டது. தேவ இராஜ்ஜியம் வந்து விட்டது எனும்பொழுது இயேசு இராஜ்ஜியம் வந்ததையே குறிப்பிடுகின்றார். இயேசு தமது முழு வாழ்க்கை யிலும் மக்களுக்கு இராஜ்ஜியம் வந்ததையே குறிப்பிட்டதோடு, அதன் கொள்கைகளையும், ஆண்களும் பெண்களும் எவ்வாறு அதற்குள் பிரவேசிக்கலாம் என்பதையும் கற்றுக் கொடுத்தார்.

தேவ இராஜ்ஜியம் சமீபித்துவிட்டது, ஆனால் புலப்படும் வகையில் அது இருக்கவில்லை.

**தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது.**

**இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது. இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார். (லூக்கா 17:20-21)**

இராஜ்ஜியம் பற்றிய இயேசுவின் உவமையில், கடுகு விதை விதைக்கப்பட்டபோது அது பூமியில் மறைந்திருக்கின்றது. மறைந்திருக்கின்ற பொக்கிஷமாகவும், முத்தாகவும் காண்பிக்கப்படுகின்றது. இந்த வடிவங்கள் யாவற்றிலும் கண்ணுக்கு புலப்படாத இராஜ்ஜியம் தற்போதிருக்கிறது.

இஸ்ரவேலர் தேவனுடைய இராஜ்ஜியம் புலப்படும் வடிவத்தில் வரும் என்றும், மிகவும் வல்லமையுள்ள இராஜா அதை ஆளுகை செய்வார் எதிர்பார்த்திருந்தனர்:

**அவர்கள் இவைகளைக் கேட்டுக் கொண்டிருக்கையில், அவர் எருசலேமுக்குச் சமீபித்திருந்தபடியினாலும், தேவனுடைய ராஜ்யம் சீக்கிரமாய் வெளிப்படுமென்று அவர்கள்**

**நினைத்தபடியினாலும், அவர் ஒரு உவமையைச் சொன்னார்: (லூக்கா 19:11)**

தனவந்தனான ஒரு பிரபு தூர தேசத்திற்கு சென்று மீண்டும் தனது இராஜ்ஜியத்தை பெறும்படியாக வந்த உவமையை இயேசு கூறினார். இயேசு எருசலேமிற்கு சமீபமானபோது, தனக்கு வரப்போகின்ற மரணத்திற்கு மக்களை தயார் செய்தார். இவ்வுவமைக்கூடாக தேவ இராஜ்ஜியம் புலப்படும் விதத்தில் வரும் என்பதை வெளிப்படுத்தினார். அவர் திரும்ப வரும்போது அது ஸ்தாபிக்கப்படும்.

இஸ்ரவேல் மக்கள் இராஜா உடனடியாகவே இராஜ்ஜியத்தை சகல மகிமையோடும் தாவீதைப் போன்று நிறுவுவார் என விசுவாசித்தார்கள். தேவன் தாவீது இராஜாவிற்கு வாக்குப் பண்ணியிருந்தார்:

> **அவன் என் நாமத்துக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் ராஜ்ய பாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன். (2 சாமுவெல் 7:13)**

இயேசு கிறிஸ்து எருசலேமிற்கு வருகின்றபோது, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களின்படி அவர் எருசலேமை தலைநகராகக் கொண்டு புலம்படும் இராஜ்ஜியத்தை நிறுவப்போகின்றார் என்று மக்கள் நினைத்தார்கள். அதனாலேயே அவர் பட்டணத்திற்குள் பிரவேசித்தபோது மக்கள் களிகூர்ந்து கௌரவித்தனர். அவர்கள் கூக்குரலிட்டு கூறியதாவது:

> **கர்த்தரின் நாமத்தினாலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராஜ்யம் ஆசீர்வதிக்கப்படுவதாக. உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். (மாற்கு 11:10)**

ஆனால் இராஜ்ஜியம் புலப்படும் வகையில் நிறுவப்படவில்லை, இயேசு ஏற்கனவே புளித்த மாவைக் குறித்த உவமையைக் கூறியிருந்தார். (மத்தேயு 13:33) அது சத்தமில்லாமல் புளித்து உப்பி சீரரான வளர்ச்சியடைந்து அப்பமாகும்.

இயேசு ஏற்கனவே செல்வந்தன் ஒருவன் தூரதேசத்திற்கு சென்று மீண்டும் தனது இராஜ்ஜியத்தை பெறும்படி வருகின்ற உவமையை கூறியிருந்தார். ஆனால் இஸ்ரவேலர் இந்த இராஜ்ஜியத்தின் உவமையை புரிந்து கொள்ளவில்லை. ஏனென்றால் இயேசு உடனடியாகவே புலப்படும் இராஜ்ஜியத்தை நிறுவவில்லை, அதனால் குறுகிய காலத்திற்குள் இராஜாவாக எண்ணிய அவரை அவர்கள் நிராகரித்துவிட்டனர். அவர்கள அவருக்கு எதிராக மாறியதோடு, சிலுவையில் அறைந்து கொல்லும்படியும் கூக்குரலிட்டனர்.

இயேசு பூமிக்கு வந்தபோது பரலோக இராஜ்ஜியம் 'சமீபித்திருந்தது' ஆனால் அவர்கள் எதிர்பார்த்தபடி இல்லாதிருந்தபடியால் இராஜாவையும் அவரது இராஜ்ஜியத்தையும் மக்கள் நிராகரித்தனர்.

> **அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.**
>
> **அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.**

**அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள். (யோவான் 1:11-13)**

இந்த நிராகரிப்பின் பலனாக, தேவனுடைய இராஜ்ஜியம் இஸ்ரவேலிலிருந்து எடுக்கப்பட்டு நீதியின் கனிதரும் மற்ற மக்களிடம் கொடுக்கப்படும் என்றார் இயேசு.

**ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். (மத்தேயு 21:43)**

புறஜாதிகளிடத்தில் தேவ இராஜ்ஜியம் எடுத்துச் செல்லப்படும் என்பதே இதன் அர்த்தம். (இஸ்ரவேலைத் தவிர்ந்த ஏனைய தேசங்கள்)

இயேசு இஸ்ரவேல் தேசத்திற்கும் அதன் தலைநகரான எருசலேமிற்கும், நியாயத்தீர்ப்பு வரும் என்றார்:

**பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப் போவார்கள். புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும். (லூக்கா 21:24)**

புலப்படும் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்படாமல் தள்ளிவைக்கப்பட்டு மீண்டும் ஒரு இராஜா வரும் வரை காத்திருக்க வேண்டி இருந்தமையால், இஸ்ரவேலர் இராஜாவையும் இராஜ்ஜியத்தையும் புறக்கணித்தனர் மீண்டும் வரப்போவது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என அழைக்கப்படுகின்றது.

## தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள்:

மற்ற மக்களோடு இணைந்து உலகத்தில் இராஜ்ஜியத்தை நிறுவுவதற்காகவே, பழைய ஏற்பாட்டில் தேவன் இஸ்ரவேல் ஜாதியை தேர்ந்தெடுத்தார். இஸ்ரவேலர் இந்த உத்தரவாதத்தில் தோல்வியடைந்தனர். சுவிஷேசத்தை ஏற்றுக் கொண்ட மக்களின் மூலம் உலகத்தில் இராஜ்ஜியத்தை நிறுவவும் விரிவாக்கம் செய்யவும், புதிய ஏற்பாட்டிலே தேவன் சபையை தேர்ந்தெடுத்துள்ளார்.

அப்போஸ்தலனாகிய பவுல், சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்ட புறஜாதிகளுக்கு பின்வரும் வசனத்தை எழுதுகின்றார்:

**பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான் கிறிஸ்துவினுடைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.**

**தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே,**

**உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக,**

**இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதி காலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (எபேசியர் 3:8-11)**

இராஜ்ஜியம் தேவனால் மனிதருக்கென ஆயத்தம்பண்ணப்பட்டு பூமியில் அத்திபாரம் பண்ணப்பட்டது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இச்சத்தியத்தை உலகத்திலுள்ள ஜாதிகளுக்கு வெளிப்படுத்தும்படியாகவே சபையை தேவன் தேர்ந்தெடுத்தார். இதன் மூலமாக தேவனது நித்திய நோக்கம் நிறைவேற்றப்படும்:

**காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று,**

**தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1: 9-10)**

உலகத்திற்கு தேவ இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்ய கண்ணுக்குப் புலப்படும்படியாக ஏற்படுத்தப்பட்டதே சபையாகும். பின்வரும் விளக்கப்படத்தை கவனியுங்கள்:

| | | |
|---|---|---|
| பூலோக அமைப்புக்கள் | → | இராஜ்ஜியம் |
| உள்ளூர் அமைப்புக்கள் மூலம் விரிவாக்கப்பட்ட இராஜ்ஜியம் | → | திருச்சபை |
| தனிப்பட்ட நபர்களால் ஒருங்கிணைக்கப்பட்ட ஆலயம் | → | விசுவாசிகள் |

இயேசு சபைக்கு உத்தரவாதத்தை விட்டுச் சென்றுள்ளார்:

**பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15)**

இந்த உத்தரவாதத்தை நிறைவேற்ற அவர் விசுவாசிகளுக்கு அதிகாரம் கொடுத்தார்:

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

கடைசியாக கண்களுக்கு புலப்படும் இராஜ்ஜியத்தை நிறுவும்படியாக இயேசு மீண்டும் வருவார்.

## தற்போதைய இராஜ்ஜியம்

'தேவனுடைய இராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கின்றது' என இயேசு கற்று கொடுத்தார். இராஜா

எங்கிருக்கின்றாரோ, எங்கிருந்து ஆளுகை செய்கின்றாரோ அங்கே தேவனுடைய இராஜ்ஜியம் நிறுவப்பட்டுள்ளது. தேவனுடைய இராஜ்ஜியம் தேவனுடைய சட்டத்திட்டங்களை ஏற்றுக் கொண்டுள்ளது. உலகிலுள்ள இராஜ்ஜியங்களும் அவரது ஆட்சியை ஏற்றுக் கொள்கிறது.

சாத்தான் பரலோகத்தில் கிளர்ச்சி செய்தமையால் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் சாத்தானின் இராஜ்ஜியத்திற்குமிடையே போராட்டம் நடைபெறுகின்றது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். பூமியிலும் இவ்வுலகளாவிய கிளர்ச்சி தேவனின் மீது திரும்பியது. மனிதனின் பாவத்தின் மூலம், பூமிக்கு சாபம் வந்தது, மாத்திரமல்ல சாத்தான் தனது இராஜ்ஜியத்தை பூமியில் நிறுவ முயற்சித்தான். அவனாலேயே அவன் பூவுலக இராஜ்ஜியங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும்படியாக இயேசுவை சோதித்தான்.

> **மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:**
>
> **நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துகொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.**
>
> **அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4:8-10)**

ஆனால் தேவன் தனது இறையாண்மையை துறக்காமல், மனிதனின் கிளர்ச்சியையும் எதிர் கொண்டார். அதை நிறுவுவதற்கான நோக்கத்தையும் அறிவித்தார்.

> **அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார். அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை. ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். (தானியேல் 2:44)**

தேவனுடைய இராஜ்ஜியம் இப்போது இங்கே இருக்கின்றது. உலக இறுதியில் கண்ணுக்கு புலப்படும் வகையில் நிறுவப்படும் என்பதைத்தவிர மேலதிகமாக நாம் ஒன்றையும் அறியோம். ஒவ்வொரு தனிப்பட்ட விசுவாசிகளது இருதயத்திலே இராஜாவின் ஆட்சியைக்குறித்த அறிவை வைத்துள்ளார். இயேசு கிறிஸ்துவின மெய்யான சபையும் இராஜாவின் ஆட்சியைக்குறித்த அறிவை வைத்துள்ளது. தேவனை நேசிக்கின்ற மக்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்களோ, இராஜ்ஜியத்திற்கென பிறந்துள்ளார்களோ, தங்களது வாழ்க்கை முறையாக இராஜ்ஜியத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்களோ அங்கெல்லாம் தேவ இராஜ்ஜியம் இருப்பதோடு, அவர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இராஜாவாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தேவனுடைய இராஜ்ஜியம் இப்போது 'இரகசியமாக' இருக்கின்றது. (மாற்கு 4:11) அதை இயற்கை சக்திகளால் கண்காணிக்க முடியாது:

**தேவனுடைய ராஜ்யம் எப்பொழுது வருமென்று, பரிசேயர் அவரிடத்தில் கேட்டபொழுது, அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: தேவனுடைய ராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது. (லூக்கா 17:20)**

தற்போது இராஜ்ஜியம் ஆவிக்குரிய விதத்தில் பூமியல் காணக்கூடியதாக இருக்கின்றது. அது ஆவிக்குரியதாகவே இருக்கின்றது, இன்னும் புலப்படக்கூடியதாக ஸ்தாபிக்கப்படவில்லை. புலப்படும் படியான தேவ இராஜ்ஜியம் பரலோகத்திலேயே தற்போதிருக்கின்றது. பரலோகம் என்று நாம் கூறுவது எமக்கு மேலாக தோன்றுகிற வானத்தையல்ல. இயேசு பூமிக்கு வருமுன்னர் இருந்த பரலோகத்தைக் குறித்தே நாம் பேசுகின்றோம். (யோவான் 17:5) மரணத்தில் இருந்தும் உயிர்த்தெழுந்த பின்னரும் அவர் பரலோகத்திற்கே சென்றார். (அப்போஸ்தலர் 1:9-11)

தேவனதும், இயேசுவினதும் தற்போதைய வாசஸ்தலமாக பரலோகம் இருக்கின்றது, இங்கே தூதர்களும் பலப்படும்படியாக இருக்கின்றனர். நேரம் வருகின்றபோது, பூமிக்கு வந்து கண்ணுக்கு புலப்படும்படியான நிரந்தரமான இராஜ்ஜியத்தை நிறுவுவதற்காக இயேசு பரலோகத்தில் காத்துக் கொண்டிருக்கின்றார். அவர் பரலோகத்திலிருந்து பரிந்து பேசுகின்றவராக பணியாற்றுகிறார். பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருந்து பூமியிலிருக்கும் விசுவாசிகளுக்காக பரிந்து பேசுகின்றார். (எபிரெயர் 7:25)

## எதிர்கால இராஜ்ஜியம்

இயேசு கிறிஸ்து தமது சீடர்களிடத்தில், அவர்கள் மத்தியிலிருக்கும் இராஜ்ஜியத்தைக் குறித்தும், எதிர்காலத்தில் இருக்கப்போகின்ற விதத்தைக் குறித்தும் பேசினார். 'உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக' என சீடர்களுக்கு ஜெபிக்கச் சொன்னார். (மத்தேயு 6:10)

இந்த 'வரப்போகின்ற' இராஜ்ஜியத்தை அல்லது நிறுவப்போகின்ற இராஜ்ஜியத்தை கல்வாரிக்கு முன்னதாக நிறுவுவார் என சீடர்கள் எதிர்பார்த்தார்கள். இயேசு மரித்தபோது அவர்களது நம்பிக்கை அகன்றுவிட்டது. அவர் உயிர்த்தெழுந்த பின்னர் அவர்களது விசுவாம் புதுப்பிக்கப்பட்டது. அவர் உயிர்த்தெழுந்து பரலோகத்திற்கு போகும் முன்னர் அந்த இடைப்பட்ட காலத்தில் தேவனுடைய இராஜ்ஜி யத்தைக் குறித்து ஏராளமான காரியங்களை இயேசு பேசினார். அவ்வேளையில் சீடர்கள் 'ஆண்டவரே இக்காலத்திலா இராஜ்ஜியத்தை இஸ்ரவேலுக்கு திரும்பக் கொடுப்பீர்?' எனக் கேட்டார்கள். (அப்போஸ்தலர் 1:6) இயேசு பதிலளித்தார்.

**அவர்களை அடிமைப்படுத்தும் ஜனத்தையோ நான் ஆக்கினைக்குட்படுத்துவேன். அதற்குப்பின்பு அவர்கள் புறப்பட்டுவந்து இவ்விடத்திலே எனக்கு ஆராதனை செய்வார்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:7)**

இராஜ்ஜியம் வரும், ஆனால் பிதா தமது ஆதீனத்தில் வைத்திருக்கின்ற காலத்தில் புலப்படும் படியாக வரும். இராஜ்ஜயம் நிறுவப்படுவதற்கு முன்பாக பூமியில் நடைபெறப்போகின்ற அநேக காரியங்களைக் குறித்தும் அவர்களோடு பகிர்ந்து கொண்டார். அவ்வடையாளங்கள் வெளிப்படும்போது காலம் சமீபித்துவிட்டது என்பதை நாம் கண்டு கொள்ளலாம். இவ்வடையாளங்களைக் குறித்து நீங்கள் மத்தேயு 24,25ஆம் அதிகாரங்களிலும், மாற்கு 13 ஆம் அதிகாரத்திலும், லூக்கா 17:20-37, 21:8-36 ஆம் வசனங்களிலும் வாசிக்கலாம். இக்காரியங்கள் நடை பெற ஆரம்பிக்கின்றபோது, தேவனுடைய

இராஜ்ஜியம் புலப்படும்படியாக நிறுவப்படுவது சமீபித்துவிட்டது என்பதை சீடர்களுக்கு இயேசு கூறினார்.

**அப்படியே இவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்போது, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்றென்று அறியுங்கள். (லூக்கா 21:31)**

### உலகத்தின் முடிவிற்கு அடையாளமாக சுவிஷேசம் உலகம் முழுவதிலும் அறிவிக்கப்படும்:

**ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)**

### இயேசு கிறிஸ்து மீண்டும் உலகிற்கு வருவார்:

**கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். (அப்போஸ்தலர் 1:11)**

### இயேசு உலகத்தின் சகல இராஜ்ஜியங்களையும் தோற்கடிப்பார்:

**அதன்பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்.**

**எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. (1 கொரிந்தியர் 15:24-25)**

**ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங் களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. (வெளிப்படுத்தல் 11:15)**

### சாத்தானும் அவனது இராஜ்ஜியத்தின் மக்களும் வெற்றிக் கொள்ளப்படுவர்:

**மேலும் அவர்களை மோசம்போக்கின பிசாசானவன், மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியுமிருக்கிற இடமாகிய அக்கினியும் கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான். அவர்கள் இரவும் பகலும் சதாகாலங்களிலும் வாதிக்கப்படுவார்கள். (வெளிப்படுத்தல் 20:10)**

### அனைத்து நாடுகளும் அவரது இராஜ்ஜியத்திற்குள் வரும்:

**அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். (மத்தேயு 8:11)**

## இயேசுவே இராஜா என சகல மக்களும் அறிந்து கொள்வார்கள்:

**ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,**

**பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:9-11)**

**அப்பொழுது திரளான ஜனங்கள் இடும் ஆரவாரம்போலவும், பெருவெள்ள இரைச்சல் போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார். (வெளிப்படுத்தல் 19:6)**

## உயிரோடிருப்போரும் மரித்தோரும் தேவனால் நியாயந்தீர்க்கப்படுவார்கள்:

**நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடு கிறதாவது... (2 தீமோத்தேயு 4:1)**

**மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்குமுன்பாக நிற்கக்கண்டேன். அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன. ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது. அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.**

**சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது. மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்-தீர்ப்படைந்தார்கள.**

**அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.**

**ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்-கடலிலே தள்ளப்பட்டான். (வெளிப்படுத்தல் 20:12,13,15)**

இயேசு கிறிஸ்து தேவ இராஜ்ஜியத்தை மீன் பிடிக்கின்ற வலைக்கு ஒப்பிட்டு உவமையொன்றை சொன்னார். வலையிலுள்ள நல்ல மீன்களும் கெட்டவையும் பின்னர் பிரித்தறிப்படும். (மத்தேயு 13:47,48)

அவர் ஒரு முறை கோதுமையோடு களையும் ஒன்றாக சேர்ந்து வளருவதையிட்டு, இராஜ்ஜிய தைப்பற்றி பேசும்போது குறிப்பிட்டார். ஆனால் இறுதியில் களையும் கோதுமையும் வேறு பிரிக்கப் படுகின்றது. (மத்தேயு 13:24-30, 36-42) கோதுமையோடு களை இருப்பதை உதாரணமாக இயேசு கூறும்போது இராஜ்ஜியம் வந்துவிட்டதாயினும் தீய மனுஷன் இன்னும் இருப்பதை குறிப்பிட்டார். ஒரே நேரத்தில் இரண்டும் அறுவடை செய்யப்படும். நியாயத்தீர்ப்பின்போது வேறு பிரிக்கப்படும்.

இவ்விரண்டு உவமைகளும் நியாயத்தீர்ப்பின் நேரத்தில் வேறு பிரிக்கப்படுவதைப்பற்றி கூறுகின்றன. இராஜ்ஜியத்திற்கென புதிய பிறப்படைந்தவர்களே புலப்படும் இராஜ்ஜியத்திற்குள் ஏற்றுக் கொள்ளப் படுவார்கள். மற்றவர்கள் இராஜ்ஜியத்திற்கு வெளியே தள்ளப்படுவார்கள்.

> **நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவ-னுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களா-கவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும். (லூக்கா 13:28)**

## தேவ இராஜ்ஜியத்தை கண்ணுக்கு புலப்படும் வகையில் அவர் ஸ்தாபிப்பார்:

> **சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது. அவருடைய கர்த்தத்-துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும். (தானியேல் 7:14)**

## மெய்யான விசுவாசிகள் இயேசுவுடன் அவரது இராஜ்ஜியத்தில் அவருடனேகூட ஆளுகை செய்வார்கள்:

> **நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். (வெளிப்படுத்தல் 3:21)**

## புதிய பூமியும் புதிய வானமும் இருக்கும்:

புதிய வானத்தையும் புதிய பூமியையும் குறித்து வெளிப்படுத்தல் 21ஆம் 22ஆம் அதிகாரங்களில் நீங்கள் வாசிக்கலாம். எருசலேமில் கர்த்தருடைய சிங்காசனம் இருக்கும் சகல ஜனங்களும் ஒன்று சேர்க்கப்படுவார்கள்.

> **அக்காலத்திலே எருசலேமைக் கர்த்தருடைய சிங்காசனம் என்பார்கள். சகல ஜாதியாரும் எருசலேமில் விளங்கிய கர்த்தருடைய நாமத்தினிமித்தம் அதினிடமா-கச் சேர்வார்கள். அவர்கள் இனித் தங்கள் பொல்லாத இருதயத்தின் இச்சையின்படி நடவார்கள். (எரேமியா 3:17)**

### சுருக்கம்

இப்போது நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் கடந்கால. நிகழ்கால, எதிர்கால காரியங்களை சுருக்கமாக பார்ப்போம்.

பின்வரும் அட்டவணையையும், அதன் பின் அதன் சுருக்க அட்டவணையையும் படிக்கவும்.

## ˆ ............பரலோகத்திலிருக்கும் தேவனுடைய இராஜ்ஜியம்............







பூமியிலிருக்கும் தேவனுடைய இராஜ்ஜியம் | இறுதி வேளையில் திரும்பி வரும் இராஜா | தேவனுடைய இராஜ்ஜியத்தை இறுதி வடிவில் ஸ்தாபித்தல்.

விரிவாக்கம் செய்யப்பட்டது ⟶ மனிதனால் ⟶ இஸ்ரவேலரால் ⟶ சபையால்

மேலே உள்ள வரைபடத்தின் புள்ளிக் கோடுகளை கவனியுங்கள். அது தேவனுடைய இராஜ்ஜியம். உலகம் உருவாகு முன்னமே தொடங்கி நித்தியம் வரையும் இருப்பதை காண்பிக்கின்றது.

கீழே அம்புக்குறியுள்ள வரைபடத்தை கவனியுங்கள். தேவன் பூமியை உருவாக்கி அவரது பரலோக இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்தார். அவரது இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்ய மனிதனை கருவியாக பாவிக்க தெரிந்தெடுத்தார். மனிதன் அந்த பொறுப்பிலிருந்து தவறிவிட்டான்.

பின்னர் தேவன் இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்யும்படி ஒரு ஜாதியை தேர்ந்தெடுத்தார். இஸ்ரவேலராகிய அவர்களும் அந்த பொறுப்பிலிருந்து தவறிவிட்டனர். அவர்கள் இராஜ்ஜியத்தின் கொள்கைகளுக்கு பதிலாக புறஜாதிகளின் தேவர்களிடத்தில் திரும்பினார்கள்.

பின்னர் தேவன் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினார். முதல் மனிதனான ஆதாம் தவறினான், இரண்டாம் மனிதனான இயேசு ஜெயமடைந்தார். அவர் பூமியில் தேவ இராஜ்ஜியத்தை அறிமுகஞ் செய்தார். மறு பிறப்பு என்ற ஆவிக்குரிய வழியின் மூலம் இயேசு, அவன் பௌதீக உலகத்திற்குள் வாழ்கின்றபோதும், தேவ இராஜ்ஜியத்திற்குரிய மனிதனாக வாழ வழிவகுத்தார். ஏனென்றால் இராஜாவும் அவரது இராஜ்ஜியமும் நிராகரிக்கப்பட்டுவிட்டது, ஸ்தாபிக்கப்படப் போகின்ற கண்ணுக்கு புலப்படும் இராஜ்ஜியமும் அவரது இரண்டாம் வருகை மட்டும் பின்போடப்பட்டுள்ளது.

இராஜ்ஜியத்தின் 'சுவிஷேசம்' அல்லது நற்செய்திக்கூடாக இராஜ்ஜியத்தை நிறுவ தேவன் இப்போது சபையை தேர்ந்தெடுத்துள்ளார். உலகத்திலுள்ள சகல ஜாதிகளுக்கும் இராஜ்ஜியத்தின் செய்தியை பகிர்ந்து கொள்ள சபையே கருவியாக இருக்கின்றது. முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ரவேலர் தோல்வியடைந்தபோதும் சபை ஜெயம் பெற்றுள்ளது. இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் உலகெங்கும் பிரசங்கிக்கப்படுகின்றபோது, இராஜா திரும்பவும் வருவார். தேவனுடைய இராஜ்ஜியம் கடைசியாக புலப்படும் வண்ணம் நிறுவப்படும். மற்ற உலகத்தின் அனைத்து இராஜ்ஜியங்களும் தோற்கடிக்கப்படும்.

## தேவனுடைய இராஜ்ஜியத்தை பற்றிய சத்தியங்கள்

நீங்கள் கடந்தகால, நிகழ்கால, எதிர்கால தேவனுடைய இராஜ்ஜியத்தைப்பற்றி கற்றுக் கொண்டீர்கள். இராஜ்ஜியத்தைக் குறித்த அடிப்படை சத்தியங்கள் கீழே தரப்படுகின்றன.

### பரலோக சிங்காசனத்திலிருந்து அது தேவனால் ஆளப்படும்:

**கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார். அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது. (சங்கீதம் 103:19)**

### இது மாறாத இராஜாவால் ஆளப்படும்:

**இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். (எபிரெயர் 13:8)**

### தேவனுடைய இராஜ்ஜியம் நித்தியமானது:

**உம்முடைய ராஜ்யம் சதாகாலங்களிலுமுள்ள ராஜ்யம், உம்முடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாகவும் உள்ளது. (சங்கீதம் 145:13)**

**அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். (லூக்கா 1:33)**

**குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. (எபிரெயர் 1:8)**

**அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும், அவருடைய அற்புதங்கள் எவ்வ-ளவு வல்லமையுமாயிருக்கிறது. அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம். அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும். (தானியேல் 4:3)**

### தேவனுடைய இராஜ்ஜியத்தை அசைக்கவோ, அதிரப்பண்ணவோ, அழிக்கவோ முடியாது:

**ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தி யோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக் கடவோம். (எபிரெயர் 12:28)**

### உலகத்தின் ஆரம்பத்திலேயே இராஜ்ஜியம் ஆயத்தம்பண்ணப்பட்டது:

**அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (மத்தேயு 25:34)**

## நாம் இராஜ்ஜியத்தின் உரிமையாளராயிருக்க வேண்டுமென தேவன் விரும்புகின்றார்:

**பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார். (லூக்கா 12:32)**

**ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். (லூக்கா 22:29)**

## இராஜ்ஜியம் தேவனுடையது:

**ராஜ்யம் கர்த்தருடையது. அவர் ஜாதிகளை ஆளுகிறவர். (சங்கீதம் 22:28)**

**எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவை-களே, ஆமென், என்பதே. (மத்தேயு 6:13)**

**அப்பொழுது கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார். அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும். (சகரியா 14:9)**

## தேவனுடைய இராஜ்ஜியம் மற்ற இராஜ்ஜியங்களையும் ஆளுகை செய்யும்:

**கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார். அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது. (சங்கீதம் 103:19)**

## தேவனுடைய இராஜ்ஜியத்தில் சகல தேசங்களின் மக்களும் கலந்திருப்பார்கள்:

**கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் தெற்கிலும் இருந்து ஜனங்கள் வந்து, தேவனுடைய ராஜ்யத்தில் பந்தியிருப்பார்கள். (லூக்கா 13:29)**

## தேவனுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்தின் இராஜ்ஜியமல்ல:

**இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுல-கத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக் காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். (யோவான் 18:36)**

## தேவனுடைய இராஜ்ஜியம் ஆவிக்குரிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது:

**தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவி யினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோமர் 14:17)**

**தேவனுடைய ராஜ்யம் பேச்சிலேஅல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 4:20)**

## தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் இரத்தத்தோடும் மாம்சத்தோடும் பிரவேசிக்க முடியாது:

**சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. (1 கொரிந்தியர் 15:50)**

**சகோதரர் வந்து நீ சத்தியத்தில் நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக்குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன்.**

**என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்-திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை.**

**பிரியமானவனே, நீ சகோதரருக்கும் அந்நியருக்கும் செய்கிற யாவற்றையும் உண்மையாய்ச் செய்கிறாய். (யோவான் 3:3,5)**

## தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு ஆவிக்குரிய திறவுகோல்கள் உண்டு:

**பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (மத்தேயு 16:19)**

இந்த 'இராஜ்ஜியத்திற்கான திறவுகோல்களை' பின்வரும் அதிகாரம் விளங்கப்படுத்தும்.

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

2. பிரிதொரு தாளில் கடந்தகால தேவனுடைய இராஜ்ஜியத்தின் கதையை சுருக்கமாக எழுதவும்.

3. பிரிதொரு தாளில் நிகழ்கால தேவனுடைய இராஜ்ஜியத்தைபற்றி சுருக்கமாக எழுதவும்.

4. பிரிதொரு தாளில் எதிர்கால தேவனுடைய இராஜ்ஜியத்தைபற்றி சுருக்கமாக எழுதவும்

5. இப்பாடத்திலுள்ள தேவனுடைய இராஜ்ஜியத்தின் தற்போதைய அடிப்படை சத்தியங்கள் மீட்டு பாருங்கள் எத்தனை காரியங்களை ஞாபகத்தில் வைத்துள்ளீர்கள் என்பதை கவனியுங்கள்.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

நீங்கள் இந்த பாடத்தில் இரண்டு ஆவிக்குரிய இராஜ்ஜியங்கள் பற்றியும், அங்கே வாழுகின்றவர்களைப் பற்றியும் கற்றீர்கள். உங்களது குடியுரிமை சாத்தானின் இராஜ்ஜியத்திலா அல்லது தேவனுடைய இராஜ்ஜியத்திலா இருக்கின்றது? நீங்கள் எவ்வளவு காலம் உலகத்தில் இருக்கின்றீர்களோ அவ்வளது காலத்திற்கும் உலக இராஜ்ஜியத்திற்குள் வசிக்கின்றீர்கள். நீங்கள் வாழுகின்ற தேசத்தின் மனித அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றீர்கள்.

மனித அரசாங்கத்தையும் தேவனே பூமியில் அவரது சட்டத்திட்டங்களை நிர்வகிக்கும் அமைப்பாக நிறுவினார். தேவனே இறையாண்மையுள்ள ஆட்சியாளராக இருந்து அவரது வார்த்தையும், அவரது திட்டமும், அவரது நோக்கமும் நிறைவேற செயல்படுகின்றார். இன்றைய அரசாங்கங்கள் அவரது திட்டத்தை பின்பற்றவில்லை. அவைகள் தீயவையும் ஒடுக்கு முறையையும் பின்பற்றகின்றன. அவைகள் தேவனுடைய கொள்கைகளை நடைமுறை படுத்தவில்லை. இந்த அரசாங்கங்களும் அதன் ஆட்சியா ளர்களும் தேவன் இருப்பதை ஏற்றுக் கொள்ளவில்லை. 'உலகத்தின இராஜ்ஜியங்கள்' சாத்தானின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன.

நீங்கள் உலகத்தில் மனித அரசுகளின் கீழ்தான் வாழவேண்டும், எனினும் வேதாகமத்தை அறிந்திருப்ப-தும் முக்கியமானது, இவைகளைப்பற்றி அது கற்றத்தருகின்றது.

## உலகத்தின் இராஜ்ஜியங்கள்

1. இராஜ்ஜியங்கள் தேவனால் உருவானது.
    - அ. அரசுகள் தேவனால் நியமிக்கப்படுகின்றன. ரோமர் 13:1
    - ஆ. ஆட்சியாளர்கள் தேவனுடைய ஊழியக்காரர். ரோமர் 13:4,6
    - இ. தேவன் அரசுகளை அவரது சித்தத்தின்படி அமைக்கின்றார். தானியேல் 4:32, 5:21 சங்கீதம் 75:7

2. அரசுகளைப்பற்றிய தேவனுடைய திட்டம்.
    - அ. அரசுகளைப்பற்றிய தேவனுடைய மூல திட்டம்.
        1. பராமரித்தலும் மக்களை நல்லவைகளுக்காக ஊக்குவித்தலும். ரோமர் 13:3,4
        2. நீதியாய் செயல்படவும் தீயவற்றை நியாயந்தீர்க்கவும் ரோமர் 13:3,4
    - ஆ. அரசுகள் அவரது திட்டத்தை எதிர்க்கின்றன.
        1. தங்களது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள அதிகாரத்தை அநீதியாக பாவிக்கின்றன. 1 இராஜாக்கள் 21:7-14
        2. இவ்வாறான சந்தர்ப்பங்களில் தேவன் ஆட்சியாளர் அல்லது ஆட்சியாளர்கள் மீது நியாயத்தீர்ப்பை கொண்டுவருகின்றார். 1 இராஜாக்கள் 21:19

3. மக்களைக் குறித்து அரசாங்கத்தின் பொறுப்புகள்.
    - அ. மக்களை பாவத்திற்குள் வழிநடத்தக் கூடாது: 1 இராஜாக்கள் 12: 28:30
    - ஆ. மக்கள் நற்காரியங்களை செய்ய ஊக்குவிக்க வேண்டும்: ரோமர் 13:1-5
    - இ. தீயவற்றை நியாயந்தீர்க்க வேண்டும்: ரோமர் 13:3-4
    - ஈ. உள்ளான அமைதியை பராமரிக்க வேண்டும்: 1 சாமுவேல் 30:21-24

உ. குடிமக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும். அப்போஸ்தலா் 22:25-30

4. ஆட்சியாளா்களின் ஆளும் கொள்கைகள்:

அ. ஆட்சியாளா்கள் ஞானவான்களாக இருக்க வேண்டும்: ஆதியாகமம் 41:33, உபாகமம் 1:13

ஆ. ஆட்சியாளா்கள் ஏழைகளை பாதுகாத்து உதவ வேண்டும்: ரோமா் 12:4, சங்கீதம் 82:3-4.

இ. ஆட்சியாளா்கள் மெய்தேவனை தேவனென்று அறிய வேண்டும்: சங்கீதம் 2:10-11

ஈ. தேவனை அங்கீகரிக்காத ஆட்சியாளா்கள் தள்ளப்படுவாா்கள்:

1. நேபுகாத்நேச்சா்: தானியேல் 4
2. பெல்ஷாத்சாா்: தானியேல் 5
3. ஏரோது: அப்போஸ்தலா் 12:21-23

உ. தனக்கு கீழ்ப்படியாத ஆட்சியாளா்களை அடிபணிய பண்ணலாம்: 1 இராஜாக்கள் 11:11

ஊ. பாவம் செய்தபடியால் தேவன் ஒரு குடும்பத்தையே அதிகாரத்திலிருந்து நீக்கவிட்டாா்: 1 இராஜாக்கள் 14:7-11

எ. ஒரு மனிதனின் நீதியினால் அவனது வாரிசை சிங்காசனத்தில் அரசாள அனுமதித்தாா்: 1 இராஜா 11:13, லூக்கா 1:32.

5. மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள தொடா்பு

அ. ஆட்சியாளா்களையும் சட்டங்களையும எதிா்க்கக்கூடாது: ரோமா் 13:2

1. தேவனுக்காக கீழ்ப்படிந்திருங்கள்: 1 பேதுரு 2:13-14.
2. அரசை தூஷிப்பது மாம்சத்திற்குரிய பாவம்: 2 பேதுரு 2:10
3. மக்கள் சட்டங்களுக்கு கீழ்ப்படிய வேண்டும்: மாற்கு 12:17

ஆ. ஆட்சியாளா்கள் தேவனுக்கு விரோதமான சட்டங்களை இயற்றி அதை கடைபிடிக்க கட்டளையிடும்போது அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பது விதிவிலக்கப்பட்டுள்ளது:

1. யாத்திராகமம் 1:17
2. தானியேல் 3:18
3. அப்போஸ்தலா் 5:29

இ. மக்கள் அரசாங்கத்திற்கான வரியை செலுத்த வேண்டும்: ரோமா் 13:6-7, மத் 17:25-27

ஈ. சிலசமயங்களில் தேவன் அரசுக்கு தெரிவு செய்வதற்கான சுதந்திரத்தை கொடுக்கின் றாா்: 1 சாமுவெல் 8:4-9

உ. ஆட்சியாளா்களுக்காக மக்கள் ஜெபிக்க வேண்டும். 1 தீமோத்தேயு 2:1-2

6. மனித அரசாங்கங்கள் தற்காலிகமானது. அனைத்து அரசாங்கங்களும் ஒருநாளில் அகற்றப் பட்டுவிடும். 1 கொரிந்தியா் 15:14

**அதிகாரம் நான்கு**

# இராஜ்ஜியத்தின் திறவுகோல்

## நோக்கங்கள்:

இவ்வதிகாரத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை அடையாளம் காணவும்,
- ☐ திறவுகோல்கள் யாருக்கு வழங்கப்பட்டது என்பதை அடையாளம் காணவும்,
- ☐ இராஜ்ஜியத்தை பெற்றுக்கொள்ளுவதற்கு பாவத்திலிருந்து மனந்திரும்புதல் அவசியம் என்பதை அறியவும்,
- ☐ இராஜ்ஜியத்திற்கு நுழைவதற்கு ஆவியில் தொடர்ச்சியான வளர்ச்சி நிச்சயமாக அவசியம் என்பதை அறியவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன். பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்ட விழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (மத்தேயு 16:19)**

### அறிமுகம்

இராஜாவும் தேவனுமாகிய இயேசு கிறிஸ்துவின் நித்திய இராஜ்ஜியத்தின் வாழ்க்கையை குறித்து நீங்கள் கற்றீர்கள். இந்த அதிகாரத்தில் நீங்கள் 'இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை' படிக்கும்போது தேவனுடைய இராஜ்ஜியத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளுவது என அறிந்துகொள்வீர்கள்.

### நியமிக்கப்பட்ட இராஜ்ஜியம்

பரலோகத்திற்கு திரும்புமுன்னர் இயேசு தமது சீஷர்களுக்கு கூறினார்:

> **ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். (லூக்கா 22:29)**

உலகம் முழுவதிற்கூடாகவும் இராஜ்ஜியத்தின் செய்தியை விரிவுப்படுத்தும் தமது சபையை குறித்தும் கூட இயேசு கூறினார்:

> **மேலும், நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற் கொள்வதில்லை. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்.**

**பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். (மத்தேயு 16:18-19)**

இந்த பந்தியிலே இயேசு முதல் சபையின் ஆவிக்குரிய அஸ்திபார கற்களின் ஒருவராக பேதுரு இருப்பார் என வெளிப்படுத்தினார். இதன் அர்த்தமானது அவர் அதின் வளர்ச்சியிலும் அபிவிருத்தி யிலும் இன்றியமையாத ஒரு நபராக இருப்பார். பேதுருவின் பெயரின் பொதுவான அர்த்தம் ‘கற்பாறை’ அல்லது ‘கல்’ ஆகும்.

இயேசு அவனைப்பற்றி கூறினார், ‘இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்….’ இது அவ னிலிருந்து சபையானது வருவியதாக இருக்கும் என்பதை சுட்டிக்காட்டுகின்றது. சபையின் கட்டுதலுக்கு மேல் அவனே கற்பாறையாக இருப்பார். அவனிலும் குறைந்த அநேக கற்பாறைகள் காணப்படலாம் (பேதுருவை போன்ற மக்கள்). இந்த கற்கள் சபையின் பகுதிகளுக்கு மிகவும் முக்கியமானது. ஆனால் சபையின் கட்டுதலின் கட்டமைப்பில் இயேசுவே அடிப்படையாக இருக்கின்றார்.

இயேசு இந்த சபையை குறித்து இரு கருத்துக்களை முன்வைத்தார்.

முதலாவது, அவர் கூறினார் ‘பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.’ இது எதிரிகளால் சபையானது சண்டையிற்கு உட்படும், ஆனால் எதிரிகளால் அதை மேற்கொள்ள முடியாது என்பதை காட்டுகின்றது.

இரண்டாவதும், எமது பாடத்திற்கு மிகவும் முக்கியமானதுமானதும், இயேசு தமது ராஜ்ஜியத்தின் திறவுகோல்களை சபைக்கு கொடுப்பதாக வாக்களித்துள்ளார்.

இயற்கையான உலகத்தில் ஒரு கட்டிடத்திற்கான சாவி உங்களிடத்தில் கொடுக்கப்பட்டிருக்குமானால், அதன் அர்த்தமானது அதற்கான அதிகாரம் உங்களிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதாகும்.

இப்பந்தியிலே இயேசுவினால் பேசப்படும் அதிகாரமானது ஆவிக்குரிய அதிகாரமாகும். சபையே ஆவிக்குரிய திறவுகோலாக அவருடைய ராஜ்ஜியத்தின் வாசலுக்கு அவர் கொடுத்துள்ளார். இயேசு சொன்னார் ‘நான்’ அவைகளுக்கு கொடுப்பேன். சபைக்கான வல்லமையும் அதிகாரமும் இயேசுவி லிருந்து வரும். ‘கொடுப்பேன்’ (எதிர்காலம்) என்னும் வார்த்தையின் அர்த்தமானது இயேசு பேசிய நேரம் வரைக்கும் திறவுகோல்கள் கொடுக்கப்படவில்லை என்பதாகும். இந்த வல்லமையானது அப்போஸ்தலர் 2ல் விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படும் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

ராஜ்ஜியத்திற்கான திறவுகோல்கள் என்பது கட்டுதல் மற்றும் விடுவித்தலுக்கான வல்லமையாகும். கட்டுதல் என்பது ஏதாவதொன்றின் மேல் மேற்கொள்ளுவது ஆகும். இது ஒரு அறையின் கதவை மூடி பூட்டிடுவதற்கு சமனாகும். விடுவித்தல் என்பது ஏதாவதொன்றை விடுதலை செய்வதாகும். இது ஒரு அறையின் கதவை திறப்பதற்கு சமனாகும்.

சபை அதிகாரம் கொண்டதொரு நிலையில் இருக்கின்றது. அது தேவனுடைய இராஜ்ஜியத்திற்கான திறவுகோல்களை கொண்டுள்ளது. அது உலக நாடுகளில், இராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய கதவுகளை திறக்கும் கருவியாக இருக்கின்றது. பேதுருதான் முதலாவதாக இராஜ்ஜியத்தின் திறவுகோல்களை பாவித்துள்ளார். அவரே புறஜாதிகளிடத்தில் ஊழியக்கதவை திறந்தவர்.

சபைக்கு ஆவிக்குரிய நல்ல சேனைகளை கட்டவிழ்க்கவும் தீய சேனைகளை கட்டவும் வல்மையுண்டு. விசுவாசிகள் பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்கின்றபோது ஜெயம் பெறுவதற்காக சேனைகளை கட்ட விழ்க்கவும், கட்டவும் முடியும்.

## தேவ இராஜ்ஜியத்திற்குள் நுழைவதெப்படி

இராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் இயேசுவால் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைந்து அதை சுதந்தரிப்பது எப்படி?

நிக்கதேமுவின் கதை யோவான் 3:1-21ல் பதிவு செய்யப்பட்டுள்ளது, அவன் கிறிஸ்துவின் மண்ணுலக ஊழியத்தின்போது சமயத்தலைவனாக இருந்தான். அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கும் ஆசையுடன் இயேசுவிடம் வந்ததோடு, நித்திய ஜீவனைப் பெறவும் அவரை அணுகினான். இயேசு அவனை நோக்கி:

> **இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோவான் 3:3)**

நிக்கதேமு சந்தேகம் நிறைந்தவனாக அவரை நோக்கி கேட்டான்:

> **அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். (யோவான் 3:4)**

இயேசு 'மறுபிறப்பை' குறித்து அவர் கூறியது, சரீரப்பிரகாரமான பிறப்பு அல்லவென்றும் அது அனுபவம் எனவும் நிக்கதேமுவிற்கு விளக்கினார், சரீரப்பிறப்பினால் இவ்வுலகின் இராஜ்ஜியத்திற்குள் பிறக்கின்றீர்கள்.

அந்த சரீரபிறப்பு பாவ சுபாவத்துடனானது:

> **இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். (சங்கீதம் 51:5)**

தேவனுடைய இராஜ்ஜியம் ஆவிக்குரிய இராஜ்ஜியம், அதனால் நீங்கள் ஆவிக்குரிய மறுபிறப்படைய வேண்டும். உங்களுடைய வாசஸ்தலத்தை, சாத்தானின் இராஜ்ஜியத்திலிருந்து தேவ இராஜ்ஜியத்திற்குள் மாற்றிக் கொள்ளலாம். இயேசு சொன்னார்:

**மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்பட-வேண்டாம். (யோவான் 3:6,7)**

நீங்கள் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் தேவ இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியாது என பவுலும் விபரித்துள்ளார்.

**சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. (1 கொரிந்தியர் 15:50)**

நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க, ஆவிக்குரிய மறுபிறப்பிற்கூடாக வாரிசுரிமை-யை பெற்றுக் கொள்ளுங்கள். மறுபடியும் பிறப்பதற்கான வழி இயேசு உங்களுடைய பாவங்களுக்கான தண்டனையை ஏற்று மரித்தார் என்பதை விசுவாசிப்பதேயாகும். நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்பு கேட்டு, அவரை விசுவாசியுங்கள்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**

**உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்-தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16-17)**

(சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் 'விசுவாசத்தின் அத்திபாரங்கள்' என்ற பாடம் பாவத்திலிருந்து மனந்திரும்புதலைக் குறித்தும், தேவனிடத்தில் விசுவாசம் வைப்பதைக் குறித்தும் கற்பிக்கின்றது. மறு படியும் பிறக்கும் அனுபவத்தை நீங்கள் இதுவரை பெறவில்லை என்றால், இதைக்குறித்து அதிகமாய் அறிந்து கொள்ள உங்களை உற்சாகப்படுத்துகின்றோம்.

நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை, சாத்தானின் இராஜ்ஜியத்திலிருந்து இயேசு மூலம் அகற்ற முடியும்:

**இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (கொலோசெயர் 1:13)**

## மனந்திரும்புதலா அல்லது புரட்சியா?

தேவ இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்யவே இயேசு பூமிக்கு வந்தார், சிலர் அவர் புரட்சியின் மூலம் இராஜாவாக வருவார் என்று எண்ணினார்கள். அவர்கள் உலகத்தில் நிலவும் ஆளுகைக்கு எதிராக சரீர ரீதியாக புரட்சியிருக்கும் என்று நினைத்தார்கள். ஆனால் இயேசு அவரது இராஜ்ஜியம் புரட்சியினால் அல்ல, மனந்திரும்புதலினால் ஏற்படும் என கற்றுக் கொடுத்தார்.

**இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே. இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். (யோவான் 18:36)**

**யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:**

**காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற்கு 1:14-15)**

**அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத்தேயு 4:17)**

இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது அவரருகில் இரண்டு கள்ளர்களும் சிலுவையில் அறையப்பட்டு இருந்தனர். அவர்களில் ஒருவன் மனந்திரும்பி கேட்டான்:

**இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.**

**இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக்கா 23:42-43)**

தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதற்கான ஒரே வழி மனந்திரும்புதலாகும்.

அநேக பிழையான கொள்கைகளும், கள்ள தீர்க்கதரிசிகளும் இராஜ்ஜியத்திற்கான வழி தம்மிடமிருப்பதாக கூறுவர் என இயேசு எச்சரித்துள்ளார்:

**இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்.**

**ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். (மத்தேயு 7:13-14)**

தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க இயேசு கிறிஸ்து மூலமாக ஒரே ஒரு வழி மாத்திரமே இருக்கின்றது.

இப்போதே நித்திய ஜீவனுக்கான வாசல் திறந்திருக்கின்றது எனவும் ஒருநாளில் அவ்வாசல் மூடப்பட்டு விடும் எனவும் இயேசு எச்சரித்தார்:

இராஜ்ஜியத்தின் கதவு இப்போது திறந்துள்ளது. பாவத்திலிருந்து மனந்திரும்பினால் அதனுள் பிரவேசிக்க முடியும். உலகத்தை தேவன் நியாயத்தீர்க்கின்றபோது, மிகவும் தாமதமாகிவிடும். கதவுகள் மூடப்பட்டுவிடும்.

## பிரவேசிப்பதற்கான மூன்று உவமைகள்

இயேசு மூன்று உவமைகளை தொடர்ச்சியாக லூக்கா 15:1-32ல் கூறியுள்ளார். இப்பாடத்தில் மேல திகமாக உவமைகளை பின்னர் இப்பாடத்தில் கற்பீர்கள். ஆவிக்குரிய சத்தியங்களை வெளிப் படுத்தும்படிக்கு இயேசு உலகிலுள்ள சாதாரண உவமாணங்களை பாவித்தார். காணாமற்போன ஆடு, காணாமற்போன காசு, காணாமற்போன மகன் போன்ற உவமைகளை லூக்கா 15ஆம் அதிகாரத்தில் வாசிக் கலாம். அவைகள் யாவும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதைக் குறித்து அவதானம் செலுத்துகின்றது.

-மேய்ப்பன் காணாமற்போன ஆட்டைத்தேடும் உவமை, ஆவிக்குரிய விதத்தில் காணாமற் போனோரை, எவ்விதம் தேவன் அவரது இராஜ்ஜியத்திற்கென தேடுவதை விளக்குகின்றது.

-ஒரு பெண் காணாமற்போன காசைதேடும் உவமை, காணாமற்போனோரை, எவ்விதம் நீங்கள் அவரது இராஜ்ஜியத்திற்கென தேடி வழிநடத்த வேண்டுமென்பதை விளக்குகின்றது.

-காணாமற்போன மகனின் உவமை, மனந்திரும்புதலின் கொள்கையின் மூலம் நீங்கள் தேவ-னுடைய இராஜ்ஜியத்திற்கென வாரிசுரிமையை சுதந்தரிப்பதை விளக்குகின்றது.

## விசுவாசத்தை கூட்டுதல்

தேவனிலும் அவரது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிலும் விசுவாசமாயிருப்பதற்கூடாகவே தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

> **என் பிரியமான சகோதரரே, கேளுங்கள். தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்-தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்-தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? (யாக்கோபு 2:5)**

எப்படியெனிலும், புதிய பிறப்பின் அனுபவத்திற்கு பின்னர், ஆவிக்குரிய தராதரத்தை உங்கள் வாழ்க்கையில் அபிவிருத்தி செய்வதைப்பற்றி பேதுரு பேசுகின்றார்.

> **இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும்,**
>
> **ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறு மையோடே தேவபக்தியையும்,**
>
> **தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.**
>
> **இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தரா-**

**கிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.**

**இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன்செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண்சொருகிப்போன குருடனாயிருக்கிறான்.**

**ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை.**

**இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். (2 பேதுரு 1:5-11)**

விசுவாசத்தின் மூலம் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்த பின்னர், தேவனுடைய இராஜ்ஜியத்தின் கொள்கைகளை அவதானித்து அதற்கேற்றபடி உங்கள் வாழ்க்கைமுறையை அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும்.

ஆவிக்குரிய முதிர்ச்சியை பெறுவது இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்கான பாதுகாப்பு என பேதுரு கூறுகின்றார். தேவனுடைய இராஜ்ஜியத்தில் ஜீவிப்பதற்கான கொள்கைகளை பின்னர் கற்றுக் கொள்வீர்கள், அது ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு உதவும்.

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.......................................................................................................................................................................

.......................................................................................................................................................................

2. திறவுகோல்கள் யாருக்கு வழங்கப்பட்டது?

.......................................................................................................................................................................

3. இராஜ்ஜியத்தின் திறவுகோல்கள் யாவை?

.......................................................................................................................................................................

4. சாத்தானின் இராஜ்ஜியத்திலிருந்து தேவனுடைய இராஜ்ஜியத்தற்குள் பிரவேசிப்பதற்காக சாதாரணமாக செய்ய வேண்டிய கிரியை யாது?

.......................................................................................................................................................................

5. தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க என்ன செய்ய வேண்டும் என நிக்கதேமுவுக்கு இயேசு சொன்னார்?

.......................................................................................................................................................................

6. 2 பேதுரு 1:5-11 வரை கூறப்பட்டுள்ளதென்ன? (வேதாகமத்தை திறந்து வாசிக்கலாம்)

.......................................................................................................................................................................

7. ஒன்றை கட்டுவது என்பதன் அர்த்தம் என்ன?

.......................................................................................................................................................................

8. ஒன்றை கட்டவிழ்ப்பது என்பதன் அர்த்தம் என்ன?

.......................................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு:

முன்னைய அதிகாரங்களில் இயேசுவின் வாழ்க்கை ஊழியம் என்பனவற்றில் இராஜா, இராஜ்ஜியம், இராஜ்ஜியத்தின் கொள்கைகளைப்பற்றி அவர் கற்றுக் கொடுத்தவைகளை கற்றீர்கள். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களில் அவற்றைபற்றிய ஒப்பீட்டு வரையறை கீழே கொடுக்கப் படுகின்றது.

இப்போது சுவிசேஷங்களை விபரமாக கற்கப்போகின்றீர்கள். மத்தேயுவின் புத்தகம் சகல விசுவாசிகளுக்கு எழுதப்பட்டதாக இருப்பினும், அது யூதர்களை இலக்கு வைத்து எழுதப்பட்டது. மத்தேயு வாக்குப்பண்ணப்பட்ட மேசியா இயேசுவெனவும், யூதர்களுடைய இராஜா அவரே எனவும் முன்வைப்பார். மத்தேயு இயேசு வின் இராஜ்ஜியத்தில் அவதானம் செலுத்தி பேசுவார். வேதாகம புத்தகங்களில் அதிகமாக இராஜ்ஜியத் தைக் குறித்து அவதானம் செலுத்தும் புத்தகம் மத்தேயுவாகும். மத்தேயு 50 தடவைகளுக்கு அதிகமாக 'இராஜ்ஜியம்' என்ற சொற்தொடரை பாவிப்பதோடு 'பரலோக இராஜ்ஜியம்' எனவும் முழு புத்தகத்திலும் குறிப்பிட்டுள்ளார்.

### பகுதி ஒன்று: இராஜாவின் வம்சவரலாறு 1:1-17

1. அறிமுகம்: 1:1

2. வம்ச வரலாறிலுள்ள மக்கள்: 1:2-16

3. வம்ச வரலாறின்திட்டம்: 1:17

### பகுதி இரண்டு: இராஜாவின் பிறப்பும் சிறு பராயமும் 1:18-2:23

1. கருத்தரிதல்: 1:18-23

2. பிறப்பு: 1:24-25

3. பிறப்புடன் தொடர்புடைய நிகழ்வுகள்: 2:1-23
   - அ. ஞானிகள் ஏரோதுவிடம் செல்லுதல்: 2:1-12
   - ஆ. எகிப்திற்கு செல்லுதல்: 2:13-15
   - இ. ஏரோதுவின் பழிவாங்கல்: 2:16-18
   - ஈ. நாசரேத்துக்கு திரும்புதல் 2:19-23

### பகுதி மூன்று: ஆயத்தம் 3:1-4:11

1. இராஜாவின் வருகைக்கு ஆயத்தமாகுதல்: 3:1-17
   - அ. யோவான் ஸ்நானகனின் செய்தியும் ஊழியமும்: 3:1-12
   - ஆ. இராஜாவின் ஞானஸ்நானம்: 3:13-17

2. இராஜாவின் ஆயத்தம்: 4:1-11

அ. அவரது மனுஷீகத்தில் சாத்தானின் தாக்குதல்: 4:1-4
ஆ. அவரது தெய்வீகத்தில் சாத்தானின் தாக்குதல்: 4:5-7
இ. அவரது மேசியத்துவத்தில் சாத்தானின் தாக்குதல்: 4:8-11

**பகுதி நான்கு: கலிலேயாவில் இராஜாவின் ஊழியம் 4:12-13:58**

1. மனந்திரும்புதலுக்கான அழைப்பு: 4:12-17

2. சீஷத்துவத்திற்கு நான்கு மீனவர்கள் அழைக்கப்படுதல்: 4:18-22

3. ஆரம்ப வெற்றியும் கீர்த்தியும்: 4:23-25

4. இராஜ்ஜியத்தின் குடிகளின் நடத்தைக்கான கொள்கைகள்: 5:1-7:28
   அ. இராஜ்ஜியத்தின் குடிகளை நடத்தைக்குட்படுத்தும் மனநிலைகள்: 5:1-12
   ஆ. இராஜ்ஜியத்தின் குடிகளின் சாட்சி: வெளிச்சம் மற்றும் உப்பு: 5:13-16
   இ. நியாயப்பிரமாணத்திற்கும் தீர்க்கதரிசிகளுக்குமிடையிலான ராஜ்ஜியத்தின் கொள்கைகளின் உறவு: 5:17-20
      1. பொதுவான தேவனுடைய நியாயப்பிரமானம்: 5:17-20
      2. புதிய நியாயப்பிரமானம்: 5:21-48
         அ. கொலை: 5:21-26
         ஆ. விபச்சாரம்: 5:27-30
         இ. விவாகரத்து: 5:31-35
         ஈ. சத்தியம் பண்ணுதல்: 5:33-37
         உ. மற்றவர்களுக்கான பரிகாரம்: 5:38-48
   ஈ. இராஜ்ஜியத்தின் துதித்தலுக்கான மூன்று மனநிலைகள்: 6:1-18
      1. கொடுத்தல்: வெளியான பார்வை: 6:1-4
      2. ஜெபித்தல்: மேலான பார்வை: 6:5-15
      3. உபவாசம்: உள்ளான பார்வை: 6:16-18
   உ. இராஜ்ஜியத்தின் குடிகளுக்கான சலுகைகள்: 6:19-21
      1. பெறுமதிகளுக்கான தொடர்பு: 6:19-21
      2. ஊழியத்திற்கான தொடர்பு: 6:22-24
      3. தேவைகளுக்கான தொடர்பு: 6:25-34
      4. உண்மையான சலுகை: இராஜ்ஜியம்: 6:33
   ஊ. ராஜ்ஜியத்தின் குடிகளுக்கான உண்மையான நடத்தை: 7:1-29
      1. நியாயந்தீர்த்தல்: 7:1-5
      2. எது பரிசுத்தம் என்பதில் கவனம்: 7:6
      3. ஜெபம்: 7:7-12
         அ. மூன்று விதமான ஜெபம்: கேட்டல், தேடுதல், தட்டுதல்: 7:7-8
         ஆ. இவ்வுலக தகப்பனையும் பரலோக தகப்பனையும் ஒப்பிடுதல்: 7:9-11
   எ. இராஜ்ஜியத்தின் குடிகளுக்கான விசேஷ எச்சரிக்கை: 7:13-29
      1. இரண்டு வாசல்: 7:13-14
      2. கள்ள தீர்க்கதரிசிகள்: 7:15-20

3. தேவனுடைய மனிதன் என்ற உறுதி: அவரது சித்தம் செய்தல்: 7:21-23
4. ஞானவானையும், மதிகேடனையும் ஒப்பிடுதல்: 7:24-27

ஏ. இயேசு கிறிஸ்துவைப்பற்றிய ஆச்சரியமான உபதேசம்: 7:28-29

5. இராஜாவின் அதிகாரம்: 8:1-9:38

அ. வியாதிகளின் மேல் அதிகாரம்: 8:1-17

1. குஷ்டரோகி சுகமடைதல்: 8:1-4
2. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் குணமடைதல்: 8:5-13
3. பேதுருவின் மாமியார் குணமடைதல்: 8:14-15
4. சகலவிதமான வியாதிகளும் குணமடைதல்: 8:16-17

ஆ. அவரது சீடர்களின் மேல் அதிகாரம்: 8:18-22

இ. இயற்கையின் மேல் அதிகாரம்: 8:23-27

ஈ. பிசாசுகளின் மேல் அதிகாரம்: 8:28-34

உ. பாவத்தின் மேல் அதிகாரம்: 9:1-8

ஊ. மனிதர்களின் மேல் அதிகாரம்: 9:9-17

1. மத்தேயுவின் அழைப்பு: 9:9
2. பாவிகளோடு போஜனம்பண்ணல்: 9:10-13
3. சவாலுக்கான பதில்: 9:14-17

எ. மரணத்தின் மேல் அதிகாரம்: அதிகாரியின் மகள்: 9:18-19, 23-26

ஏ. சரீர நிலைகளின் மேல் அதிகாரம்: 8:20-28

1. பெரும்பாடுள்ள ஸ்திரி: 8:20-22
2. குருட்டுத்தன்மை: 9:27-31
3. செவிடும் பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டவனும்: 9:32-34
4. இயேசுவின் மனதுருக்கம்: 9:35-38

6. இராஜாவின் வேலைக்கான கட்டளை ஒப்படைக்கப்படல்: 10:1-42

அ. பன்னிரு அருட்பணியாளரும் அவர்களது அதிகாரமும்: 10:1-4

ஆ. பயணத்திற்கான வழிகாட்டல்: 10:5-42

1. எங்கே போக வேண்டும்: 10:5-6
2. ஊழியம்: 10:7-8
3. பொருளாதார வழிகாட்டல்: 10:9-15
4. ஆவிக்குரிய வழிகாட்டல்: 10:16-42

7. இராஜ்ஜியத்தைப்பற்றிய அபிப்பிராயம்: 11:1-30

அ. இராஜ்ஜியம் தவறாக அர்த்தப்படல்: 1:1-11

ஆ. இராஜ்ஜியம் தவறாக செல்லுதல்: 11:12-19

இ. இராஜ்ஜியம் புறந்தள்ளப்படல்: 11:20-24

ஈ. இராஜ்ஜியம் ஏற்றுக்கொள்ளப்படுதல்: 11:25-30

8. பரிசேயருடன் முறுகுதல்: 12:1-14

அ. ஓய்வுநாளில் அறுவடை செய்தல்: 12:1-8

ஆ. ஓய்வுநாளில் குணப்படுத்துதல்: 12:9-13

இ. விளைவுகள்: 12:14-21

9. மன்னிக்கத்தகாத பாவம்: 12:22-37

10. பரிசேயரின் கேள்விகளுக்கு கிறிஸ்து பதிலளித்தல்: 12:38-45

11. இராஜ்ஜியத்தில் பௌதீக உறவுகளுக்கு மேலான ஆவிக்குரிய அதிகாரம்: 12:46-50

12. இராஜ்ஜியத்தின் உவமைகள்: 13:1-53
    அ. விதைத்தலின் உவமை: 13:1-9
    ஆ. உவமை மூலம் பேசுவதற்கான காரணம்: 13:10-17
    இ. விதைத்தல் உவமைக்கான அர்த்தம் கூறுதல்: 13:18-23
    ஈ. களைகளுக்கான உவமை: 13:24-30
    உ. கடுகு விதைக்கான உவமை: 13:31-32
    ஊ. புளித்த மாவுக்கான உவமை: 13:33
    எ. உவமைகள் தொடர்பிலான சுருக்கம்: 13:34-35
    ஏ. களை தொடர்பிலான உவமையின் அர்த்தம் கூறல்: 13:36-43
    ஐ. நிலத்தில் மறைக்கப்பட்டுள்ள பொக்கிஷத்திற்கான உவமை: 13:44
    ஒ. மிகப்பெறுமதியான முத்திற்கான உவமை: 13:45-46
    ஓ. வலை தொடர்பிலான உவமை: 13:47-50
    ஔ. முடிவுரையில் உவமைகளின் குறிப்பு 13:51-52

13. இராஜாவின் விருந்துபசாரம் அவரது ஊரில்: 13:53-58

**பகுதி ஐந்து: கலேலேயாவில் இராஜாவின் ஊழியம் 14:1-18:35**

1. யோவான் ஸ்நானகனின் மரணம்: 14:1-12

2. கடலிலிருந்து இயேசு திரும்புதல்: 14:13-15:20
    அ. 5,000 பேரை போஷித்தல்: 14:13-21
    ஆ. அப்பத்திற்காகவும் மீன்களுக்காகவும் பின்பற்றல்: 14:22-23
    இ. கடலின் மேல் நடத்தல்: 14:24-33
    ஈ. கெனசரேத்தில் ஊழியம்: 14:34-36
    உ. பரிசேயருக்கும், சதுசேயருக்குமான முரண்பாடு: 15:1-20

3. தீரு சீதோன் பட்டணங்களிலிருந்து இயேசுவினுடைய திரும்புதல்: 15:21-28

    அ. தீரு சீதோன் பட்டணத்திலிருந்த ஒரு ஸ்திரி: 15:21-28

4. தெக்கப்போலியிலிருந்து இயேசுவினுடைய திரும்புதல்: 15:29-38

    அ. கலிலேயா கடற்கரையருகில் குணமாக்கும் ஊழியம் 15:29-31

ஆ. 4,000 பேரை போஷித்தல்: 15:32-38

5. மக்தலாவில் ஊழியம்: 15:39-16:4

6. சதுசேயரிடமும் பரிசேயரிடமும் சீடர்கள் அவதானமாயிருக்கும்படியான எச்சரிக்கை: 16:5-12

7. பிலிப்புச் செசரியாவிலிருந்து திரும்புதல்: 16:13-17:21

அ. சீடர்கள் பரீட்சிக்கப்படல் 16:13-20
ஆ. மரணத்தையும், உயிர்த்தெழுதலையும், மறுபடியும் வருதலையும் அறிவித்தல்: 16:21-28
இ. கிறிஸ்து மறுரூபமாகுதல்: 17:1-13
ஈ. சந்திரரோகி குணமடைதல்: 17:14-21

8. கலிலேயாவிற்கான குறுகிய விஜயம்: 17:22-18:35
அ. அவர் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் ஞாபகப்படுத்தல்: 17:22-23
ஆ. ஆலயத்திற்கான வரியை செலுத்துதல்: 17:24-27
இ. பாடத்தின் மகத்துவம்: 18:1-6
ஈ. குற்றங்கள் பற்றிய எச்சரிக்கை: 18:7-9
உ. காணாமற்போன ஆட்டின் உவமை: 18:10-14
ஊ. இராஜ்ஜியத்தின் குடிகள் பிரச்சனைகளை சரிபடுத்துவது:18:15-35
1. எவ்வாறு பிரச்சனைகளை சரிபடுத்துவது: 18:15-17
2. இராஜ்ஜியததின் குடிகளின் உத்தரவாதமும் நல்வாய்ப்புகளும்: 18:18-20
3. மன்னிப்பைபற்றிய கேள்வி: 18:21-22
4. இராஜாவும் அவனது கடன்காரரும்: 18:23-35

**பகுதி ஆறு: இராஜாவின் பெரேயாவின் ஊழியம் 19:1-20:34**

1. யூதேயாவில் அநேகரை குணமாக்கியமை: 19:1-2

2. விவாகரத்தைப்பற்றிய கேள்வி: 19:3-12

3. இயேசுவினால் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டமை: 19:13-15

4. செல்வந்தனான வாலிபனுடன் நேர்முகம்: 19:16-22

5. செல்வத்தின் அபாயம்: 19:23-30

6. நிலச்சொந்தகாரனின் உவமை: 20:1-16

7. இயேசு மரணத்தை திரும்பவும் முன்னறிவித்தல்: 20:17-19

8. ஒரு தாயாரின் சுயநலமிக்க வேண்டுதல்: 20:20-28

9. எரிகோவிற்கருகில் இரண்டு குருடர் குணமாகியமை: 20:29-34

**பகுதி ஏழு: இராஜாவினுடைய கடைசி வாரம் 21:1-27:31**

1. எருசலேமுக்கு இராஜாங்க பிரவேசம்: 21:1-11

2. தேவாலயத்தை சுத்திகரித்தல்: 21:12-17

3. அத்திமரத்தை சபித்தல்: 21:18-22

4. இயேசுவின் அதிகாரத்தைக் குறித்து கேள்வி: 21:23-32

5. துன்மார்க்கமான குத்தகைக்காரனின் உவமை: 21:33-46

6. திருமண விருந்தைப்பற்றிய உவமை: 22:1-14

7. இயேசுவை இழிவுபடுத்துதல்: 22:15-45

   அ. சீசருக்கு வரி செலுத்துவதைப்பற்றிய கேள்வி: 22:15-22
   ஆ. உயிர்த்தெழுதலைப்பற்றிய கேள்வி: 22:23-33
   இ. பெரிதான கட்டளையைக் குறித்த கேள்வி: 22:34-40
   ஈ. இயேசுவின் கேள்விகள்: 22:41-46

8. வேதபாரகரும் பரிசேயரும் விவாதம் பண்ணுதல்: 23:1-39

   அ. சமய அதிகாரத்தை கண்டனம் செய்தல்: 23:1-3
   ஆ. அவர்கள் பாரமான சுமைகளை சுமத்துகிறவர்கள்: 23:4
   இ. போலியான மகிமையை தேடுபவர்கள்: 23:5-7
   ஈ. அவரது சீடர்களுக்கு ஆலோசனை வழங்கள்: 23:8-12
   உ. வேதபாரகர் பரிசேயர் மீது கண்டனம்: 23:13-36
   எ. எருசலேமிற்காக அழுதல்: 23:37-39

9. எதிர்கால இராஜ்ஜியம்: 24:1-25:46

   அ. தேவாலயத்தின் அழிவு: 24:1-2
   ஆ. கடைசிகால அடையாளங்கள்: 24:3-14
   இ. உபத்திரவக்காலம்: 24:15-22
   ஈ. இயேசு திரும்பவும் வருதல்: 24:23-31
   உ. அத்திமரத்தின் உவமை: 24:32-35
   ஊ. கர்த்தருடைய நாள்: 24:36-41
   எ. விழித்திருக்கும்படியான கட்டளை: 24:42-51
   ஏ. கடைசிக்காலத்தைக் குறித்த உவமைகள்: 25:1-46

1. பத்து கன்னிகள்: 25:1-13
2. தாலந்துகள்: 25:14-30
3. செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும்: 25:31-46

10. சிலுவையிலறையப்படும் நிகழ்வுகள்: 26:1-27:31

அ. மரணத்தைக் குறித்த அறிவித்தல்: 26:1-2
ஆ. இயேசுவை கொல்ல சதி செய்தல்: 26:3-5
இ. அடக்கத்திற்கு முன்னான அபிஷேகம்: 26:6-13
ஈ. இயேசுவை காட்டிக் கொடுப்பதற்கான யூதாசின் ஒப்பந்தம்: 26:14:16
உ. கடைசி இராப்போசனம்: 26:17-29
1. பஸ்காவிற்கான ஆயத்தம்: 26:17-19
2. கடைசி இராப்போசனம்: 26:20-29
3. பேதுரு மறுதலிக்கப்போவதையிட்டு இயேசுவின் எச்சரிப்பு: 26:30-35
ஊ. கெத்சமனே: 26:36-46
எ. காட்டிக் கொடுக்கப்படுதலும் கைதும்: 26:47-56
ஏ. இயேசுவின் சோதனைகள்: 26:57-27:26

**பகுதி எட்டு: இராஜாவின் மரணமும் வெற்றியும் 27:27-28:20**

1. மரணமும் அடக்கம் பண்ணப்படலும்: 27:27-66
அ. வீரர்களின் பரிகாசம்: 27:27-31
ஆ. கல்வாரிப்பாதையும் மரணமும்: 27:32
இ. விசுவாசமுள்ள ஸ்திரி, அடக்கம்பண்ணப்படுதல், கல்லறை பாதுகாவலர்கள்: 27:33-50

2. உயிர்த்தெழுதல்: 28:1-15

3. மாபெரும் கட்டளை: 28:16-20

**அதிகாரம் ஐந்து**

# இராஜ்ஜியத்திலிருந்து தள்ளப்பட்டவன்

## நோக்கங்கள்:

இந்த அதிகாரத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ தேவராஜ்ஜியத்தின் பிரவேசத்தை தடுத்து நிறுத்துகின்ற பாவங்களை வேதாகம பந்தியி-ருந்து அடையாளம் காணவும்,
- ☐ தேவராஜ்ஜியத்தின் பிரவேசத்தை தடுத்து நிறுத்துகின்ற பாவங்களை வரையறுக்கவும்,
- ☐ தேவராஜ்ஜியத்தின் பிரவேசத்தை தடுத்து நிறுத்துகின்ற பாவங்களை விளக்கவும் வேதாகம குறிப்புகளைத்தரவும் முடியும்.

## திறவுகோல் வாக்கியம்:

**பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லு கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை (மத்தேயு 7:21)**

## அறிமுகம்:

கடந்த அதிகாரத்தில் நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை அணுகுவதை அனுமதிக்கும் ஆவிக்குரிய திறவுகோல்களைக் குறித்து கற்றீர்கள். இந்த அதிகாரம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைவதை தடுக்கும் விடயங்களைக் குறித்து கற்போம். சிலர் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியாது தள்ளப்படுவார்கள் என்பது உண்மையில் கவலைத்தருகின்ற விடயமாக இருக்கின்றது.

## இராஜ்ஜியத்திலிருந்து தள்ளப்பட்டவன்

உண்மையில் இராஜ்ஜியத்திற்குரியவர்களாக இராதவர்களும் தாம் தேவனுடைய இராஜ்ஜியத்திற் குரியவர்கள் என எண்ணிக் கொண்டிருக்கின்றனர். வேதாகமம் நல்ல விதைகளைப்பற்றியும் களைகளை-பற்றியும் பேசுகின்றது.

**நிலம் உலகம். நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர். களைகள் பொல்லாங்கனுடைய புத்-திரர்.**

**மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து,**

**அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும்.**

**அப்பொழுது, நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். (மத்தேயு 13:38-43)**

தற்காலத்தில் இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க வேண்டிய குடியிருப்பாளர்கள் இன்னமும் பாவத்திற்குள் ஜீவிக்கின்றார்கள். எதிர்காலத்தில் நியாயத்தீர்ப்பு நாளின்போது இம்மக்களை தேவன் மெய்யான குடியிருப்பாளர்களிடமிருந்து பிரித்து போடுவார். தீயவர்களான இவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத் திலிருந்து துரத்துப்படுவார்கள்.

நிகழ்கால இராஜ்ஜியம் கடலில் அநேக மீன்களை பிடிக்க பாவிக்கப்படும் வலையோடு ஒப்பிடப்பட்டு பேசப்படுகின்றது.

**அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.**

**அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள்.**

**இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து,**

**அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண் டாயிருக்கும் என்றார். (மத்தேயு 13:47-50)**

வேதாகமம் எதிர்காலத்தின் ஒருநாளைப்பற்றி சொல்லுகின்றது...

**அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். (மத்தேயு 8:11)**

அதைக் குறித்து இயேசு எச்சரிக்கின்றார்...

**நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் சகல தீர்க்கதரிசிகளையும் தேவனுடைய ராஜ்யத்திலிருக்கிறவர்களாகவும், உங்களையோ புறம்பே தள்ளப்பட்டவர்களாகவும் காணும்போது உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் அங்கே உண்டாயிருக்கும். (லூக்கா 13:28)**

இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் முன்னர், தேவன் சகலரையும் நியாயந்தீர்ப்பார், மரித்து உயிரோடு எழுந்தவர்களையும் அவர் நியாயந்தீர்ப்பார்.

**நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடு கிறதாவது: (2 தீமோத்தேயு 4:1)**

இறுதி நியாயத்தீர்ப்பின் வேளையில் மனிதர்களிடையே பிரிவுகள் இருக்கும். சிலர் இராஜ்ஜியத்திற்குள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள், சிலர் துரத்தப்படுவார்கள்.

> **அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.**
>
> **அப்பொழுது, சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறதுபோல அவர்களை அவர் பிரித்து,**
>
> **செம்மறியாடுகளைத் தமது வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளைத் தமது இடதுபக்கத்திலும் நிறுத்துவார்.**
>
> **அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். (மத்தேயு 25:31-43)**

## குடியுரிமையை நிரந்தரமாக பெறுதல்

சிலர் இராஜ்ஜியத்திலிருந்து துரத்தப்படுவதைக் குறித்தும், முக்கியமாக தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நிரந்தர குடியுரிமையை நிரந்தரமாக பெறுவதைக் குறித்தும் வேதாகமம் வெளிப்படுகின்றது

> **பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7:21)**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத்தவிர தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நிரந்தர வதிவிடம் கிடைக்கும் என்ற நிச்சயம் இல்லை. வார்த்தைகளின் அர்ப்பணிப்பு மாத்திரம் போதாது என இயேசு கூறியுள்ளார். நீங்கள் தேவனுடைய சித்தத்தை செய்ய வேண்டும். பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய சித்தம்.

> **தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். (2 பேதுரு 3:9)**

இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின்னரும் நீங்கள் தேவனுடைய சித்தத்தை செய்ய வேண்டும். நீங்கள் பிரவேசிக்கப்போகின்ற புதிய இராஜ்ஜியத்தின் கொள்கைகளின்படியும் வாழ வேண்டும். இக்கொள்கைகள் இப்பாடத்தில் பின்னர் வழங்கப்படும்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் குடியிருப்பாளராகிய பின்னர் இன்னும் பலஅர்ப்பணிப்புகளை செய்ய வேண்டும். அது சிந்தனை மற்றும் செயல்களில் மாற்றங்களைக் கொண்டிருக்கும். நீங்கள்

நிலையான ஒரு புதிய வாழ்க்கை முறையை தேவனுடைய இராஜ்ஜியத்தின் கொள்கைகளுக்கு அமைவாக அமைத்து அபிவிருத்திச் செய்துக் கொள்ள வேண்டும்.

தேவனுடைய சித்தத்தை செய்வதின் முக்கியத்துவத்தை இயேசு மத்தேயு 21:28-32 ல் வலியுறுத்தியுள்ளார். இக்கதையை நீங்கள் உங்களது வேதாகமத்தில் வாசியுங்கள். அது சுவிசேஷத்திற்கான தனிப்பட்ட பிரதியுத்தரத்தை வெளிப்படுத்துகின்றது. வார்த்தை பிரயோகம் மாத்திரம் போதாது. அதை நீங்கள் கிரியையில் போட வேண்டும்.

## பாவங்கள் நுழைவதை தடுக்கின்றது

பாவங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைவதை தடுக்கின்றது. பாவம் தேவனுடைய பிரமாணத்தை மீறச்செய்கின்றது.

> **பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான். நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். (1 யோவான் 3:4)**

புதிய ஏற்பாட்டில் அநேக பாவங்கள் அடையாளங்காணப்பட்டுள்ளது. 'விசுவாசத்தின் அத்திபாரங்கள்' என்ற சர்வதேச அறுவடைநேர பாடத்திட்டத்தில் இதைக்குறித்த பூரணமாக கற்பீர்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் நுழைவதை தடுக்கும் பாவங்களை இரண்டு பந்திகளில் அடையாளம் காணலாம்:

> **அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள். வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,**
>
> **திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1 கொரிந்தியர் 6:9-10)**
>
> **மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன. அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,**
>
> **விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,**
>
> **பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத்தியர் 5:19-21)**

சில பாவங்கள் இவ்விரண்டு பகுதிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறிப்புகளும் பாவங்களை குறிப்பிடுகின்றபோதும், வசனங்கள் பட்டியலிடப்படவில்லை.

**பின்வரும் பாவங்களைப் பற்றிய குறிப்புகள் கொரிந்தியர் மற்றும் கலாத்தியரிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.**

## அநீதி:

கொரிந்தியரின் முதலாவது பந்தியிலே அநீதியுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாது என கூறுகின்றது. கலாத்தியர் புத்தகமும் அநீதியுடன் தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாது என்றே திரும்பவும் கூறுகின்றது. கலாத்தியர் இதை 'அசுத்தம்' என அழைக்கின்றது அது ஆவிக்குரிய அல்லது தார்மீக அசுத்தத்தை குறிக்கும்.

உலகிலுள்ள பல நாடுகளில், ஒருவர் அவரது மரணத்திற்கு பின்னர் மற்றவர்களால், அவரது உடமை-களை மற்ற மக்களுக்கு கொடுக்கும் முறை இருக்கின்றது. மரபுரிமையை பெறும் இவர்கள் வாரிசுகள் என அழைக்கப்படுவர். நீங்கள் வாரிசாக இருப்பீர்களானால் மரபுரிமையாக பெற்ற பொருள்கள் ஏதாவ-தொன்று உங்களிடமிருக்கும். ஆனால் அவற்றை நீங்கள் பெறுவதற்கு குறிப்பிட்ட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டியதாயிருககும். அதாவது அந்த நாட்டின் வாரிசுரிமைக்குரிய சட்டங்களையும் கை கொள்ள வேண்டும்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வாரிசாக நீங்கள் இருக்கின்றீர்கள். இயேசு அவரது மரணவேளையில் உங்களை வாரிசாக்கிக் கொண்டார். உங்கள் பாவத்திற்காக அவர் மரித்தபடியால், ராஜ்ஜியத்திற்குள் உங்களால் நுழைய முடியும். சரியான வாரிசுரிமையை பெற்றுக் கொள்வதற்கு கடந்த கால பாவத் திற்கு மன்னிப்பை நீங்கள் பெறவேண்டும், இயேசு உங்கள் வாழ்க்கை முறையையும் சிந்தனை-யையும் கிரியைகளையும் மாற்றுவார் எனவும் நம்ப வேண்டும். நீதியாய் வாழ ஆரம்பிக்க வேண்டும். இவைகளே வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள்.

'நீதி' என்னும் வார்த்தையின் அர்த்தம் இப்போது சரியாக, பரிசுத்தமாயிருப்பது என்பதாகும். சிந்தனை யிலும், வார்த்தையிலும், செயலிலும், பரிசுத்தமாயிருப்பதென்பது எனவும், அது தேவனுடைய சித்தமா-கும் எனவும் எழுதப்பட்ட வார்த்தை வெளிப்படுத்துகின்றது.

சட்டங்களுக்கு கிழ்ப்படிவதினால் நிதியை பெற்றுக் கொள்ள முடியாது. இயேசுவை விசுவாசிப்பதி னால் மாத்திரமே பெற முடியும். ஒருவன் இயேசுவை விசுவாசிக்க ஆரம்பிக்கின்றபோது 'நீதியின் தேவன் அவனுடன் இருக்கின்றார்' முன்னர் அவன் செய்தவற்றையல்ல, தேவன் விரும்புகின்ற அனைத்தையும் அவன் செய்ய வேண்டும்.

> **நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார். (2 கொரிந்தியர் 5:21)**

இயேசுவினுடைய பூலோக ஊழியத்தின்போது வாழ்ந்த சமயத்தலைவர்களான வேதபாரகரும், பரிசேயரும், சமய சடங்காச்சாரங்களுக்கு இணங்கி நடப்பவனே நீதிமானாக இருப்பான் என்றெண்ணி அதற்காகவே முயற்சிக்கின்றவர்களாக இருந்தனர். ஆனால் அதைக் குறித்து இயேசு எச்சரித்தார்....

> **வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிரா விட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன். (மத்தேயு 5:20)**

இயேசு மதத்தலைவர்களுக்கு கூறியதாவது:

> **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியா-தபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை. (மத்தேயு 23:13)**

சமய மரபுகள், விதிகள், சடங்காச்சாரங்கள் என்பவற்றை நீதியாக எண்ணுவார்களேயானால், அவர்கள் சதுசேயர் மற்றும் பரிசேய வர்க்கத்தினராகவே இருப்பார்கள். இப்படிப்பட்டவைகள் பொய்யான நீதியாக இருக்கின்றன. அவர்கள் உள்ளான மனிதனில் அல்லது மனதில் ஏற்படும் மாற்றத்தைவிடவும், வெளி-புறமான மாற்றத்தையே ஏற்றுக்கொள்கின்றனர். நீதியான வழிக்கு பாரம்பரிய மரபுகள் அவசியம் என யாராவது கற்பித்தார்களேயானால், அவர்கள் மற்றவர்களையும் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதை தடுப்பவர்களாவர்.

'அநீதி' என்ற சொல் 'அசுத்தம்' என்பதை உள்ளடக்கியிருக்கும். எனினும் அனைத்து பாவங்களுக்கும் தேவனுடைய வார்த்தையில் அடையாளப்படுத்துகின்ற இச்சொற்கள் கலாத்தியரிலும் கொரிந்தியரிலும் காணப்படவில்லை. எந்தவொரு மனிதனாவது பாவத்துடன் அநீதியுடன் வாழுவானாயின் அவன் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்கமாட்டான். அதனாலேயே 'வஞ்சிக்கப்படாதிருங்கள்' என்று கொரிந்திய புத்தகத்தில் குறிப்பிடப்படுகின்றது. எனவே தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டிய நீங்கள் சாத்தானின் பொய்யானவற்றுக்குள் ஏமாற்றுக்குற்பட வேண்டாம்.

## விபச்சாரக்காரர்:

திருமணமாகாத இருவர் மேற்கொள்ளும் உடலுறவே விபச்சாரம். இப்பாவம் வேசித்தனத்திற்கும் உட்பட்டது. திருமணமானவர் தனது துணையல்லாதவரிடம் மேற்கொள்ளும் உடலுறவு வேசிதனத்தை குறிக்கும். இது ஒருபாலுறவையும் (ஒரேபால் இனத்தவர்), முறையற்ற பாலுறவையும், (இரத்த உறவி-னர்) குறிக்கும்.

## விக்கிரக ஆராதனைக்காரர்:

விக்கிரக ஆராதனை என்பது சிலைகளை வழிபடுவதைக் குறிக்கும். இது கற்கள், மரங்கள், விலையேறப் பட்ட உலேகங்களால் செய்யப்பட்ட உருவங்களை வணங்குவதை மாத்திரம் குறிக்காது. தேவனைப் பார்க்கிலும் முக்கியத்துவம் கொடுக்கின்ற யாவும் விக்கிரகமேயாகும்.

விக்கிரக ஆராதனை செய்கின்றவர்கள். மெய்யான தேவனை வணங்காமல் தவறான விக்கிரகங்களை வணங்குகின்றனர். விக்கிரக ஆராதனை செய்யும்போது, தேவனுடைய மெய்யான நிலையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றோம்.

## வேசித்தனம்:

திருமணம் முடித்தவர் தனது துணையல்லாத ஒருவருடன் மேற்கொள்ளும் உடலுறவு வேசித்தனம் எனப்படும்.

### மதுபானபிரியர்:

மதுபான வெறியர் என குடிபோதையை கலாத்தியர் அழைக்கின்றது. அல்கஹோல் கலந்த மது பானங்களை பாவிக்கின்றபோது அது அவர்களுடைய மனதையும் சரீரத்தையும் பாதிக்கின்றது.

**பின்வரும் பாவங்கள் கொரிந்தியரில் மாத்திரம் பட்டியலிடப்பட்டுள்ளது.**

### ஆண்தன்மையற்றவர் (காமுகன்):

கீழ்தரமான பாலியல் பாவங்களை செய்யும் ஆணைக்குறிக்கும், ஆனால் இது மாம்சத்திற்குரிய பாலியல் பாவங்கள்.

### தங்களை துஷ்பிரயோகம் செய்பவர்கள்:

தங்களை தவறாக பயன்படுத்தி, தவறாக நடந்துகொண்டு தங்களை துஷ்பிரயோகம் செய்பவர்கள். இவர்கள் மற்றவர்களை பாலியல் வன்முறைக்குட்படுத்தி தங்களை துஷ்பரயோகம் செய்பவர்கள். அதாவது தங்களுடைய சொந்த சரீரத்திற்கு விரோதமாக பாவம் செய்பவர்கள்.

### திருடர்கள்:

மக்களிடம் திருடும் திருடர்கள் இருக்கின்றனர். மற்றவர்களுக்குரிய பொருட்களை அவர்களது அனும தியின்றி அல்லது அறிவின்றி எடுத்துக்கொள்வார்கள். இப்படிப்பட்டவர்கள் திருடர் எனப்படுவர்.

### பேராசைகாரர்:

மற்றவர்களுக்குரியதான ஒன்றை, விரும்பி ஆசைப்படுதல் பேராசை எனப்படும். மற்றவர்களுடைய பணம், சொத்து, பதவி, அல்லது அதிகாரத்திற்கு நீங்கள் ஆசைபடலாம். நீங்கள் மற்றவர்களுடைய கணவனுக்கு அல்லது மனைவிக்கு ஆசைப்படலாம்.

### கொள்ளையர்கள்:

மற்றவர்களின் பொருளை பலவந்தமாக பறிக்கிறவர். அதை எடுத்துக் கொள்வதற்காக அவர்கள் மீது பலாத்காரத்தை பாவிப்பவர்.

### தூஷிக்கிறவர்:

மற்றவர்களை திட்டுதல், விரோதமாக பேசுதல், பரிசுத்த மற்ற காரியங்களை மற்றவருக்கு தெரியாமல் பேசுதல் என பொருள்படும்.

**பின்வரும் பாவங்கள் கலாத்தியரில் மாத்திரமே சொல்லப்பட்டுள்ளது.**

### காம இச்சை:

இச்சை, பாவ உணர்வுகள், கீழ்த்தரமான, இழிவான, வெட்கமற்ற நடத்தை போன்றவற்றை காம இச்சை என்பது குறிக்கும்.

### மாந்திரீகம்:

மாந்திரீகம் என்பது பில்லி சூனியம், ஜோதிடம், நாள் நட்சத்திரம் பார்த்தல், மந்திர மயக்க மருந்துகளை பாவித்தல், ஓதுதல், போதைப்பொருட்களை பாவித்தல், மந்திரங்கள், உட்பட மந்திரவாதிகளை கொண்டு செய்யப்படுவதாகும். இது சாத்தானுடனான தொடர்புள்ள ஆராதனையாகும்.

### துவேசம்:

அன்புக்கு எதிரானது. மற்றவர்களை விரும்பாதபோது கடுமையான வெறுப்பை காண்பிக்கும் ஓர் உணர்வாகும்.

### மாறுபாடு:

கருத்து வேறுபாடு, பிரிவினை, பிளவு என்பனவற்றை மாறுபாடு என்பது குறிக்கும். இது முரண்பாடு என்பதற்கு ஒப்பானது.

### போட்டி மனப்பான்மை:

மற்றவர்களைப்போன்றே சமமாக நாமும் இருக்க வேண்டும், அல்லது அவர்களைப் பார்க்கிலும் நன்றாக இருக்க வேண்டும் என்ற ஆசை. இது பொறாமையுடனான ஒரு போட்டி மனப்பான்மையாகும்.

### கடுங்கோபம்:

இது வன்முறையைக் கொண்ட கோபம், கோபத்தை செயல்படுத்துதலை குறிக்கும்.

### சச்சரவு (விவாதம் பண்ணுதல்):

சண்டையிடல், மோதல்களை நடத்துதல், சச்சரவு பண்ணுதல் என்பனவாகும். இதன் அர்த்தம் மோதல் அல்லது சச்சரவாகும்.

### புரட்டுதல்:

அமைதியின்மை அல்லது முரண்பாட்டை கிளரிவிடுதல்.

### விசுவாச துரோகம்:

தேவனுடைய வார்த்தையில் பிழையான நம்பிக்கைகள் : தங்களுக்கு விருப்பமான சுய கருத்துக்களை

பிழையான கருத்துக்களை கொண்டிருந்து சபையில் பிரிவினையை உண்டாக்குவதை குறிக்கும்.

### பொறாமை கொள்ளுதல்:

மற்றவர்களின் வெற்றியைக் குறித்து பொறாமை கொள்ளுதல், குறிப்பாக அவர்களின் நிதி, ஆவிக்குரிய பௌதீக ஆசீர்வாதங்களால் பொறாமை கொள்ளுதல் எனலாம்.

### கொலைகாரர்:

வேண்டுமென்றே இன்னுமொருவரின் உயிரை எடுத்தலைக் குறிக்கும். தற்பாதுகாப்புக்காக, தற்செயலாக செய்யப்பட்ட கொலையை இது குறிக்காது.

### களியாட்டம்:

உலக வாழ்வில் ஒன்றித்திருத்தல், மூர்க்கத்தனமான நடத்தையில் மகிழ்ச்சியாயிருத்தல் என்பனவற் றையும் குறிக்கும்.

## இராஜ்ஜியத்தின் நுழைவை தடுப்பவை:

இப்பட்டியல்களில் குறிப்பிடப்பட்டுள்ளவைகளுக்கு அதிகமான பாவங்கள் பற்றி வேதாகமத்தில் குறிப் பிடப்படுகின்றன, அவைகள் இராஜ்ஜியத்தின் நுழைவை தடுப்பவைகளாக இருக்கின்றன.

### மாம்சமும் இரத்தமும்:

பவுல் எச்சரித்துள்ளார்:

> **சகோதரரே, நான் சொல்லுகிறதென்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது. அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை. (1 கொரிந்தியர் 15:50)**

நாம் முந்தைய அத்தியாயத்தில் ராஜ்ஜியத்தைப்பற்றி விவாதித்தோம். தேவனுடைய இராஜ்ஜியம் ஆவிக்குரியது. மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அதற்குள் பிரவேசிக்க முடியாது. நீங்கள் அதற்குள் பிரவேசிக்க வேண்டுமானால் முந்தைய அதிகாரத்தில் விவாதித்தபடி ஆவிக்குரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

> **இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லு கிறேன் என்றார்.**
>
> **இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவ-னுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். (யோவான் 3:3,5)**

**இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும். (2 பேதரு 1:11)**

## குழந்தைத்தனமான விசுவாசம் இன்மை

இயேசு சொன்னார்...

**நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 18:3)**

**எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி... (மாற்கு 10:15)**

தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க வேண்டுமானால் சிறு குழந்தைகளைப்போலாக வேண்டும். இது சரீரத்திலும், உணர்விலும் சிறு பிள்ளைகளைப்போலாவதை அர்த்தப்படுத்தாது, அதேவண்ணம் தாயின் கருவறைக்குள் மீண்டும் நுழைந்து வருவதையும் மறுபிறப்பு அர்த்தப்படுத்தாது. தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பது என்பது இலகுவான காரியம், குழந்தையைப்போல விசுவாசிப்பதேயாகும். இதை நீங்கள் செய்யாதிருந்தால், உங்களால் இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க முடியாது.

### செல்வம்:

இயேசு கிறிஸ்து மண்ணுலகில் ஊழியம் செய்துக் கொண்டிருக்கின்றவேளையில் ஒரு தலைவன் ஒருவன் அவரை பின்பற்ற வேண்டும் என விரும்பினான். (இக்கதையை நீங்கள் லூக்கா 18:18-25 வரையிலும் வாசிக்கலாம்) இத்தலைவன் நீதிமானாக இருந்தான், ஆனாலும் இயேசு சொன்னர்...

**இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு. உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.**

**அவன் அதிக ஐசுவரியமுள்ளவனானபடியினால், இதைக் கேட்டபொழுது, மிகுந்த துக்கமடைந்தான். (லூக்கா 18:22-23)**

அந்த செல்வந்த தலைவன் இயேசுவை பின்பற்றவில்லை, காரணம் தேவனைப்பார்க்கிலும் அவனுக்கு செல்வம் முக்கியமானதாக இருந்தது.

**அவன் மிகுந்த துக்கமடைந்ததை இயேசு கண்டு: ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது. (லூக்கா 18:24)**

**அப்பொழுது இயேசு சுற்றிப் பார்த்து, தம்முடைய சீஷரை நோக்கி: ஐசுவரியமுள்ளவர்கள்**

**தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார்.**

**சீஷர்கள் அவருடைய வார்த்தைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். இயேசு பின்னும் அவர்களை நோக்கி: பிள்ளைகளே, ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறது எவ்வளவு அரிதாயிருக்கிறது!**

**ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் என்றார். (மாற்கு 10:23-25)**

இயேசு செல்வந்தர்கள் இராஜ்ஜியத்திற்கு புறம்பானவர்கள் என்று அர்த்தம் கொள்ளவில்லை. செல்வந்தனாகும் என்ற ஆசை தேவ இராஜ்ஜியத்திலிருந்து மனிதர்களை புறம்பாக்குகின்றது.

**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது.. (1 தீமோத்தேயு 6:10)**

இயேசுவை பின்பற்றாமலிருக்க அல்லது இராஜ்ஜியத்தில் நுழைவதற்கு செல்வம் தடையாக இருக்கின்றது.

## பாவத்திலிருந்து விடுதலை

ஏதாவது ஒரு பாவத்தின் குற்றவுணர்வு உங்களுக்கிருக்குமானால், அதற்கு ஒரே தீர்வாக இயேசு கிறிஸ்து மூலமே இரட்சிப்பு இருக்கின்றது. பவுல் கூறுகின்றார்.

**உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப் பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். (1 கொரிந்தியர் 6:11)**

கடந்த காலத்தில் என்ன செய்தீர்கள் என்பது முக்கியமல்ல, தற்போது என்ன செய்கின்றீர்கள் என்பதும் முக்கியமல்ல, ஆனால் நீங்கள் பாவ மன்னிப்பை பெற வேண்டும்.

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ள வராயிருக்கிறார்.**

**நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களா யிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது. (1 யோவான் 1:8-9)**

நீங்கள் சகல அநீதியானவற்றிலுமிருந்து கழுவப்படுவீர்கள் என்றால், அனைத்து பாவமும் மன்னிக்கப் பட்டு இருப்பீர்கள் என்றால், உங்களால் தேவ இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியும்.

## அகற்றிவிடுங்கள்

வேதாகமத்தை திறந்து மாற்கு 9:43-48ஐ எடுங்கள். இப்பகுதியிலே இயேசு கிறிஸ்து உங்களது

கையாவது, காலாவது இடறல் உண்டாக்கினால் அகற்றிவிடும்படி போதித்தார். உன் கண் இடறலுண் டாக்கினால் பிடிங்கி எரியும்படி கூறினார்.

> **உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினால், அதைப் பிடுங்கிப்போடு. நீ இரண்டு கண்ணுடையவனாய் நரக அக்கினியிலே தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும். (மாற்கு 9:47)**

உங்கள் வாழ்க்கையில் சாபத்தை ஏற்படுத்தும் பாவம் அகற்றப்பட வேண்டும் என்பதே இயேசுவின் கருத்தாக இருக்கின்றது. அது ஒருவேளை உங்களுக்கு அவசியமானதாக, விலையேறப்பட்டததாக இருக்கலாம், ஆனாலும் அகற்றப்பட வேண்டும். அவர் அதற்காக கை, கால், கண் என்பனவற்றை உதாரணமாக பாவித்துள்ளார். இயற்கையாகவே சரீரத்திற்கு மிக அவசியமான விலைமதிப்பற்ற உறுப்புகளே இவைகள். இவைகள் உங்களை தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதை தடை பண்ணுகின்ற காரியங்களாக இருந்தால் அதை அகற்றிவிடுவது நல்லது என்றே இயேசு கூறுனார்.

இராஜ்ஜியத்திலிருந்து வெளியே தள்ளிவிடும் பாவம், மதிப்புள்ள காரியங்கள், தராதரங்கள் எவையும் பறம்பே தள்ளிட முடியாது.

## சுய பரிசோதனை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.....................................................................................................................................................................................

.....................................................................................................................................................................................

2. தேவராஜ்ஜியத்தின் பிரவேசத்தை தடுத்து நிறுத்துகின்ற பாவங்கள் இரண்டை பட்டியலிடுக:

.....................................................................................................................................................................................

3. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசியுங்கள். சரியான கூற்றுக்கு முன்னர் (ச) எனவும், பிழை-யான கூற்றுக்கு முன்னர் (பி) எனவும் எழுதவும்.

அ ..................... நீங்கள் செல்வந்தராக இருப்பின் பரலோக இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாது.

ஆ ..................... இரத்தமும் மாம்சமும் பரலோக இராஜ்ஜியத்தை சுதந்தரிக்க முடியாது.

இ ..................... இராஜ்ஜியத்திற்குள் நுழைய தடையாக உங்கள் வாழ்வில் இருக்கின்றவற்றை அகற்றிவிட வேண்டும் என்றார் இயேசு.

ஈ ..................... தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க நீங்கள் சிறு பிள்ளைகளைப் போலாக வேண்டும் என இயேசு கூறினார்.

உ ..................... தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க நீங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஊ ..................... 'இயேசுவே கர்த்தர்' என்று நீங்கள் கூறுவது, தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க உறுதியளிக்கின்றது.

எ ..................... இறுதி நியாயத்தீர்ப்பின்போது சிலர் இராஜ்ஜியத்திலிருந்து துரத்தப்படுவார்கள்.

4. தேவராஜ்ஜியத்தின் நுழைவாயிலில் தடுத்து நிறுத்துகின்ற பாவங்களை வரையறுக்கும் இரண்டு வசனங்களை எழுதுக.

.....................................................................................................................................................................................

5. தேவராஜ்ஜியத்தின் பிரவேசத்தை தடுத்து நிறுத்துகின்ற பாவங்களை விளக்கும் வேதாகம குறிப்புகளை முதலாவது பகுதியில் வாசிக்கவும். அதற்கான வரைவிலக்கணத்தை இரண்டாம் பந்தியில் வாசிக்கவும். முதலாம் பந்திக்குரிய சரியான வரைவிலக்கணத்தை இரண்டாம் பகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் இலக்கத்தை முதலாம் பகுதியிலுள்ள கோடிட்ட இடத்தில் குறிப்பிடவும். உங்களுக்காக உதாரணமாக முதலாவது கொடுக்கப்பட்டள்ளது.

| முதலாம் பந்தி | இரண்டாம் பந்தி |
|---|---|
| .................அ. அநீதி | 1. உலக வாழ்க்கையும் அடங்காத நடத்தையும். |
| .................ஆ. வேசித்தனம் | 2. அனைத்து பாவமும் அடங்கும். |
| .................இ. விக்கிரக ஆராதனைகாரர் | 3. மற்றவர்களின் வெற்றியில் பொறாமைபடுதல். |
| .................ஈ விபச்சாரக்காரர் | 4. இன்னுமொரு உயிரை எடுத்தல். |
| .................உ. மதுபான பிரியர் | 5. துணையல்லாதவரிடம் பாலியல் உறவு. |
| .................ஊ. ஆண்தன்மையற்றவர்கள் | 6. மதுபான வெறியர். |
| .................எ. தம்மை துஷ்பிரயோகம் செய்பவர் | 7. களவாடும் மக்கள். |
| .................ஏ. திருடர்கள் | 8. மற்றவர்களுக்கெதிராக பரிசுத்தமற்றவற்றை பேசுபவர். |
| .................ஐ.பேராசை | 9. விக்கிராதனைக்காரர். |
| .................ஒ. தூசிக்கிறவர்கள். | 10. கீழ்த்தரமான பாலியல் பாவங்களை செய்யும் ஆண். |
| .................ஓ. தூஷிக்கிறவர். | 11. தமக்கு சொந்தமல்லாதவருடன் பாலியல் தொடர்பு கொள்பவர். |
| .................ஔ. காம இச்சை | 12. தமது சரீரத்தை துஷ்பிரயோகம் செய்பவர். |
| .................க. மாந்திரீகம் | 13. மற்றவர்களின் உடமைகளில் ஆசை கொள்பவர். |
| .................கா வெறுப்பு | 14. பொருட்களை பலவந்தமாக பறிப்பவர். |
| .................கி மாறுபாடு | 15. பாவ உணர்வுகள், இழிவான நடத்தைகள். |
| .................கீ போட்டி மனப்பான்மை | 16. வன் முறையான கோபம், |
| .................கு கடுங்கோபம் | 17. தேவனுடைய வார்த்தைக்கு மாறான கொள்கை. |
| .................கூ சச்சரவு | 18. ஆழ்ந்த வெறுப்பு. |
| .................கெ. புரட்டுதல். | 19. கருத்து வேறுபாடு, விரோதம். |
| .................கே. விசுவாச துரோகம் | 20. மற்றவர்களைப் போலாக வேண்டும் என்ற ஆசை |
| .................கை. பொறாமை கொள்ளல் | 21. சண்டையிடல். |
| .................கொ. கொலைகாரர் | 22. குழப்பத்தை கிளரிவிடுகின்றவர்கள். |
| .................கோ. களியாட்டம் | 23. மந்திரங்களை நடை முறைபடுத்தல். |

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

தேவனுடைய இராஜ்ஜியத்திற்கான வேதாகம குறிப்புகள், மாற்குவின் புத்தகத்தில் இராஜ்ஜியத்தின் கொள்கைகளாக கூறப்பட்டுள்ளன.

மாற்கு 1:14-15

3:24

4:11,26,30

9:1,47

10:14-15, 23-25

11:9-10

13:8

14:25

15:43

**ஆறாம் அதிகாரம்**

# மாதிரிகளும் கொள்கைகளும், அறிமுகம்

## நோக்கங்கள்:

இவ்வதிகாரத்தை முடிக்கின்றபோது உங்களால் இயலுமானவை:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ மாதிரி என்ற வார்த்தையை வரையறுக்கவும்,
- ☐ கொள்கை என்ற வார்த்தையை வரையறுக்கவும்,
- ☐ வேதாகமத்தின் மாதிரி என்ற வார்த்தையின் அர்த்தத்தை விவரிக்கவும்,
- ☐ வேதாகமத்தின் கொள்கை என்ற வார்த்தையின் அர்த்தத்தை விவரிக்கவும்,
- ☐ இராஜ்ஜியத்தின் மாதிரிகள் மற்றும் கொள்கைகள் என்ற வார்த்தைகளின் அர்த்தத்தை விவரிக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான். (1 நாளாகமம் 28:19)**

## அறிமுகம்:

முன்னைய அதிகாரத்தில் நீங்கள் தேவ இராஜ்ஜியத்திற்குள் நுழையும் ஆவிக்குரிய திறவுகோல்களைப் பற்றி கற்றுக் கொண்டீர்கள். நீங்கள் தேவ இராஜ்ஜியத்தின் குடியுரிமையை பெற்றிருக்க அதன் வாழ்க்கை முறைகளையும், கொள்கைகளையும் கற்றிருக்க வேண்டும். அது நீங்கள் புலம்பெயர்ந்து வேறு நாட்டிற்கு வசிக்க செல்வீர்களாயின் அப்புதிய நாட்டின் வாழ்க்கை முறைக்கு ஒத்ததாகவே அமையும்.

தேவ இராஜ்ஜியத்தின் கொள்கைகளும் மாதிரிகளும் எழுதப்பட்ட வேத வாக்கியத்தின்படியே இயங்கு கின்றது. பின்வரும் அதிகாரங்களில் கொள்கைகளை நீங்கள் கற்றுக் கொள்ளும் முன்னர், அதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

## மாதிரிகளும் கொள்கைகளும்

ஒரு நோக்கத்துடன் உருவாக்கப்படும் ஒரு பொருள், அசல் அல்லது மாதிரி பிரதிபலிக்கும். இது ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட அசல் ஒன்றை பின்பற்றப்பட்ட நகலாக இருக்கும். உதாரணமாக மேற்குலக ஆடைகள் வடிவமைப்பை பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு பாணியை பொருத்தே ஆடை வடிவமைக்கப்பட வெட்டப்படுகின்றது. பல ஆடைகள் அதே பாணியாகவே வடிவமைக்கப்படுகின்றமை யால் அதே பாணியிலிருந்து வந்தது என எம்மால் அடையாளம் காண முடிகின்றது.

ஒரு உண்மையான கொள்கை அல்லது மாதிரி நடத்தை அல்லது விதிமுறை நடவடிக்கையின்

அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பொதுவான உண்மைகள் வேறு துணை உண்மைகளினால் உருவாக்கப்படுகின்றது. 'இரண்டாந்தரமான' உண்மைகள் பொதுவான உண்மைகளோடு தொடர்புபட்ட-தாயிருக்கும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவின் அரசிலமைப்பானது அடிப்படைக் கொள்கையாக கருத்து சுதந்திரத்தை வழங்குகின்றது. எழுதுவதற்கும், சுதந்திரமாக பேசுவதற்கும், சட்டபூர்வமான கூட்டங்களை கூடுவதற்கும், தங்களுடைய விசுவாசத்தை அறிக்கையிடுவதற்கும் அங்கே முடியும்.

## வேதாகம முறைகளும் கொள்கைகளும்

வேதாகம முறைகள் ஆவிக்குரிய மாதிரிகளாக அல்லது வேதவசனங்களின் நோக்கங்களை கொண்ட-தாக கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக இயேசு கிறிஸ்து தன்னை பின்பற்றியவர்களுக்கு முறை-களை அல்லது மாதிரிகளை கொடுத்துள்ளார்.

வேதாகம கொள்கைகளில் ஆவிக்குரிய சத்தியங்கள் அடங்கியுள்ளன. பலவிதமான சூழ்நிலை களுக்கும் பொருந்துகின்ற விதத்தில் கூடுதலான துணைக்கொள்கைகளும் இணைந்துள்ளன. உதாரண-மாக 'கொடுங்கள் அப்போழுது பெற்றுக் கொள்வீர்கள்' என இயேசு கூறினார். பணத்தை கொடுத்தல், பொருட்களை கொடுத்தல். நட்புகொள்ளுதல் என்பன துணை சத்தியங்களாக இருக்கின்றன, அவை-களை நாம் பிரயோகிக்கலாம். இவைகள் கொடுத்தலினால் பெறும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை காண்பிக்கின்றன.

## மாதிரிகளுக்கும் கொள்கைகளுக்குமான முக்கியத்துவம்

எசேக்கியேல் 43:7-12ஐ வாசிக்கவும். இப்பகுதி மாதிரிகளுக்கும் கொள்கைகளுக்குமான முக்கியத்து வத்தை வலியுறுத்துகின்றது. இஸ்ரவேலர் ஆவிக்குரிய ஆராதனை செய்யும் இடங்களில் பின்பற்றும் படியாக விசேஷித்த மாதிரிகளை தேவன் நிறுவினார்.

ஆனாலும் இஸ்ரவேலர் தமது சொந்த மாதிரிகளையே அமைத்தனர். தேவன் தனக்கேன ஓர் அமைப்பை அமைக்கச்சொன்னதின் அர்த்தம் என்ன? அவர்கள் 'தேவனுடைய வாசற்படியண்டையில் தங்களது வாசற்படியையும், அவரது வாசலண்டையில் தங்களது வாசல் நிலைகளையும்' சேர்த்து அமைத்தார்கள். அவர்கள் தமது சொந்த மாதிரியின்படி அமைத்தபோது அது தேவனையும் அவர்களையும் பிரிக்கும் சுவராக அமைந்தது, எனவே தேவன் தனது வல்லமையை ஊற்றுவதையும் நிறுத்தினார். இது அவர்களது ஆராதனையை தேவன் ஏற்றுக் கொள்வதை தடுப்பதாக அமைந்தது.

தீர்க்கதரிசியாகிய எசேக்கியேல் தேவனுடைய மாதிரியையும் அளவையும், அவர்களுடைய வாழ்க்கை முறையையும் பார்க்கும்படி கூறினான்.

> **மனுபுத்திரனே, இஸ்ரவேல் வம்சத்தார் தங்கள் அக்கிரமங்களினிமித்தம் வெட்கப்படும் படிக்கு, நீ அவர்களுக்கு இந்த ஆலயத்தைக் காண்பி, அதின் அளவை அளக்கக்-கடவர்கள். (எசேக்கியேல் 43:10)**

மக்கள் தங்கள் நடைமுறைகாரியங்களில், சொந்த முறைகளையும், தமது சொந்த சமயப்பிரிவு களையும், சமயங்களையும், அல்லது கலாச்சார விதிகளையும், தவறான காரியங்களை அமைக்கும் அளவீட்டையே கொண்டிருக்கின்றனர். அவர்கள் வேதாகம கோட்பாட்டு காரியங்களை கற்றுக்கொடுத்-

தாலும்  அது ஒன்றுக்கும் பிரயோசனமற்றதாகவே இருக்கிறது.

இயேசு இது போன்ற மக்களுக்காக சொன்னார்:

> **மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். (மத்தேயு 15:9)**

வேதாகமத்தின் மாதிரிகளையும். கொள்கைகளையும் புரிந்து கொள்வது முக்கியமானது இல்லையென்றால், உங்களது ஆராதனை பிரயோசனமற்றது.

உலகில் அளவீட்டில் பல தராதரங்கள் உள்ளன. உலகில் பல்வேறு வித்தியாசமான மாதிரிகள் மனிதர்களால் பின்பற்றப்பட்டு, வெற்றி பெற்ற மனிதர்கள் இருக்கின்றனர். மனிதர்கள் மற்ற மனிதர்களுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள தங்களுடைய அளவீட்டுக்கு பதிலாக தேவனுடைய தராதரத்தை நோக்க வேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகின்றார்:

> **ஆகிலும் தங்களைத்தாங்களே மெச்சிக்கொள்ளுகிற சிலருக்கு நாங்கள் எங்களைச் சரியாக்கவும் ஒப்பிடவும் துணியமாட்டோம். தங்களைக்கொண்டு தங்களை அளந்து கொண்டு, தங்களுக்கே தங்களை ஒப்பிட்டுக்கொள்ளுகிற அவர்கள் புத்திமான்களல்ல. (2 கொரிந்தியர் 10:12)**

மோசே கூடாரத்தைக் கட்டுவதற்கான வழிகாட்டலை கொடுத்தபோது, தேவன் கொடுத்த மாதிரியின்படியே சகல காரியங்களையும் செய்ய வேண்டும் என்ற எச்சரிப்பையும் கொடுத்தான்.

> **நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக....**
>
> **மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே அவைகளைச் செய்ய எச்சரிக்கையாயிரு. (யாத்திராகமம் 25:9,40)**
>
> **இவர்கள் செய்யும் ஆராதனை பரலோகத்திலுள்ளவைகளின் சாயலுக்கும் நிழலுக்கும் ஒத்திருக்கிறது. அப்படியே, மோசே கூடாரத்தை உண்டுபண்ணப்போகையில்: மலையிலே உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே நீ எல்லாவற்றையும் செய்ய எச்சரிக்கையாயிரு என்று தேவன் அவனுக்குக் கட்டளையிட்டார். (எபிரெயர் 8:5)**

தாவீது ராஜாவும், தேவாலயத்தை கட்டுவதற்கு முற்பட்டபோது,  தேவனுடைய மாதிரியை பின்பற்ற கவனமுள்ளவனாக இருந்தான்.

> **இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான். (1 நாளாகமம் 28:19)**

இந்த மனிதர்கள்  உலகில் இருந்தாலும் தேவனுடைய முறையை பின்பற்ற கவனமுள்ளவர்களாக இருந்தனர். அப்படியாயின் ஆவிக்குரிய வேதாகமத்தில், நாம் கண்டு கொண்டுள்ள மாதிரிகளையும்

கொள்கைகளையும் பின்பற்ற எவ்வளவாய் கவனமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## வேதாகம முறைகளுக்கான உதாரணங்கள்:

இயேசுவே விசுவாசிகளுடைய வாழ்விற்கான சிறந்த மாதிரியாக இருக்கின்றார்.

> **நான் (இயேசு) உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். (யோவான் 13:15)**

நாம் பின்பற்றுக்கூடிய வாழ்க்கை முறைகளைக் கொண்ட மனிதர்களினதும், மனுஷிகளினதும் வாழ்க்கை வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> **அவர்கள் இச்சித்ததுபோல நாமும் பொல்லாங்கானவைகளை இச்சியாதபடிக்கு, இவைகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 10:6)**

> **இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது. உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. (1 நாளாகமம் 10:11)**

பிற நாடுகளின் சாதகமான உதாரணங்களை பின்பற்றவும், பாதகமான உதாரணங்களை தவிர்த்துக் கொள்ளவும் தேசத்தாருக்காக வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> **சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவை-களைத் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டுள்ளது. (2 பேதுரு 2:6)**

கிறிஸ்தவ தலைவர்கள் தங்களை பின்பற்றுவோருக்கு உதாரணமாக இருக்க வேண்டும்.

> **உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,**

> **சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். (1பேதுரு 5:2-3)**

அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகின்றார்.

> **சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள். (பிலிப்பியர் 3:17)**

> **உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச்செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம். (2 தெசலோனிக்கேயர் 3:9)**

விசுவாசிகளுக்குள் ஆவிக்குரிய மாதிரிகள் இருக்க வேண்டும். அவர்கள் மற்றவர்கள் பின்பற்றக் கூடிய நல்ல ஆவிக்குரிய எடுத்துக்காட்டுக்களை வழங்கள் வேண்டும்.

> **உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு. (1 தீமோத்தேயு 4:12)**

> **இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள். (1 தெசலோனிக்கேயர் 1:7)**

> **நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி.. (தீத்து 2:7)**

உங்கள் வாழ்வில் வேதாகம கொள்கைகளை புரிந்து கொண்டிருப்பீர்களானால் நீங்கள் மற்றவர்களுக்கு ஆவிக்குரிய நல்ல மாதிரிகளை காண்பிப்பீர்கள்.

## வேதாகம கொள்கைகளுக்கான எடுத்துக்காட்டுகள்

எபிரெயர் 5:12ல் பவுல் அப்போஸ்தலன் 'தேவனுடைய வார்த்தைகளின் மூலஉபதேசங்களை' குறிப்பிடுகின்றார். எபிரெயர் 6:1-3ல் இந்த கொள்கைகளை பட்டியலிடுகின்றார். ஏனென்றால் இவைகள் முக்கியமானவைகள். சர்வதேச அறுவடை நேர நிறுவனமும் 'விசுவாசத்தின் அத்திபாரங்கள்' என்ற பாடத்தில் இக்கொள்கைகளை பகிர்ந்து கொள்ள தன்னை அர்ப்பணித்துள்ளது.

'விசுவாசத்தின் அத்திபாரங்கள்' என்ற பாடத்தில் இக்கொள்கைகளை கற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம். அடிப்படை வேதாகமத்தின் கொள்கைகளின் முக்கியத்துவத்தை இது விபரிக்கின்றது. இந்த அடிப்படை வேதாகம கொள்கைகள், உங்களுடைய வாழ்விற்கான இராஜ்ஜியத்தின் மாதிரிகளையும் கொள்கைகளையும் ஆவிக்குரிய அத்திபாரமாக காண்பிக்கின்றது.

## ராஜ்ஜியத்தின் மாதிரிகளையும் கொள்கைகளையும்

பின்வரும் அதிகாரங்களில் மாதிரிகளையும் கொள்கைகளையும் கற்பீர்கள், தேவனுடைய இராஜ்ஜியத்-தின் ஆளுகையையும் 'தேவ இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்' என்ற முறையில் கற்பீர்கள்.

உலக முறைகளிலும், தராதரங்களிலும், பார்க்க தேவனுடைய இராஜ்ஜியத்தின் முறைகளும் கொள்கைகளும் எத்தகைய வித்தியாசமானவை என்பதையும் அறிந்து கொள்வீர்கள்.

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

2. 'மாதிரி' என்ற வார்த்தையை வரையறுக்கவும்,

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

3. 'கொள்கை' என்ற வார்த்தையை வரையறுக்கவும்,

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

4. 'வேதாகமத்தின் மாதிரி' என்ற வார்த்தையின் அர்த்தத்தை விவரிக்கவும்,

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

5. 'வேதாகமத்தின் கொள்கை' என்ற வார்த்தையின் அர்த்தத்தை விவரிக்கவும்.

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

6. 'இராஜ்ஜியத்தின் மாதிரிகள் மற்றும் கொள்கைகள்' என்ற வார்த்தைகளின் அர்த்தம் என்ன?

.......................................................................................................................................................

.......................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

தேவனுடைய இராஜ்ஜியத்தை ஆளும் அடிப்படைக் கொள்கைகளை அடுத்த சில அதிகாரங்க-ளில் கற்றுக் கொள்வீர்கள். இந்த கொள்கைகள் இயேசு கொடுத்த கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இக்கட்டளைகளை கற்றுக் கொள்ள பின்வரும் வரைகோட்டை பயன்படுத்தவும்.

## இராஜாவின் கட்டளைகள்.

### மனந்திரும்புதல்:

-மனந்திரும்பு: மத்தேயு 4:17, வெளி 2:5
-என்னிடத்தில் வா: மத்தேயு 11:28
-முதலாவது தேவனையும் அவரது நீதியையும் தேடுங்கள்: மத்தேயு 6:33
-யாரிலும் குறையிருந்தால் மன்னித்துவிடுங்கள்: மாற்கு 11:25
-உங்களை வெறுத்துவிடுங்கள்: மத்தேயு 16:24
-கேளுங்கள்.. தேடுங்கள்.. தட்டுங்கள்..: மத்தேயு 7:7
-இடுக்கமான வாசலால் உட்பிரவேசியுங்கள்: லூக்கா 13:24

### நம்பிக்கை:

-சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்: மாற்கு 1:15
-தேவனையும் என்னையும் விசுவாசியுங்கள்: யோவான் 14:1
-தேவனால் அனுப்பப்பட்டவா் என விசுவாசியுங்கள்: யொவான் 6:28-29
-என்னில் பிதாவும், பிதா என்னிலும் இருப்பதை விசுவாசியுங்கள்: யோவான் 14:11
-நான் செய்கின்ற கிரியைகளை நம்புங்கள்: யோவான் 10:37-38
-ஒளி உங்களோடிருக்கையில் ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள்:யோவான் 12:36
-பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள்: மாற்கு 11:24

### புதிய பிறப்பு:

-நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்: யோவான் 3:7
-உட்புறத்தை முதலாவது சுத்தமாக்கு: மத்தேயு 23:26
-நல்ல மரம் நற்கனியை கொடுக்கும்: மத்தேயு 12:33
-நீங்கள் என்னில் நிலைத்திருங்கள், நான் உங்களில் நிலைத்திருப்பேன்: யோவான் 15:4
-உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள்: மாற்கு 9:50
-நிலைநிற்கிற போஜனத்திற்காக கிரியை செய்யுங்கள்: யோவான் 6:27
-உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளபடியால் சந்தோஷப்படுங்கள்: லூக்கா 10:20

### பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளல்:

-நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள்: யோவான் 20:22
-பிள்ளைகள் முதலில் திருப்தியடையட்டும்: மாற்கு 7:27

-தாகமாயிருந்தால் என்னிடத்தில் வரக்கடவன்: யோவான் 7:37-39
-எனது கற்பனைகளை கைகொள்ளுங்கள்: யோவான் 14:15-17
-நிறைவாய் பெறும்படி கேளுங்கள்: யோவான் 16:24, லூக்கா 11:5-13
-பெலனால் தரிப்பிக்கப்படும்படி காத்திருங்கள்: லூக்கா 24:49
-சத்திய ஆவியானவர் என்னைக்குறித்து சாட்சியிடுவார்: யோவான் 15:26-27

## இயேசுவை பின்பற்றுதல்:

-என்னை பின்பற்றி வா: யோவான் 12:26
-ஞானஸ்நானம் பெறு: மத்தேயு 3:13-15, 28:19
-என்னை நினைவுகூரும்படி இதை செய்யுங்கள்: லூக்கா 22:17-19
-மற்றவர்களின் கால்களை கழுவுதல்: யோவான் 13:14-15
-என்னை பின்பற்றுகிறவன், தன் சிலுவையை எடுத்துக்கொள்ளக்கடவன்: லூக்கா 9:23
-என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்: மத்தேயு 11:29
-என்னுடைய அன்பின் நிலைத்திருங்கள்: யோவான் 15:9

## ஜெபம்:

-எப்போதும் ஜெபியுங்கள்: லூக்கா 21:36
-சோதனைக்குட் பிரவேசிக்காமலிருக்க ஜெபியுங்கள்: லூக்கா 22:40-46
-அறுப்புக்காக வேண்டிக் கொள்ளுங்கள்: லூக்கா 10:2
-உங்களை சபிக்கின்றவர்களுக்காக ஜெபியுங்கள்: லூக்கா 6:28
-பிதாவிடம் என்னுடைய நாமத்தால் ஜெபியுங்கள்: மத்தேயு 6:6, யோவான் 16:24-26
-கர்த்தருடைய ஜெபத்தைபோன்று ஜெபியுங்கள்: மத்தேயு 6:9-13
-வீணான வார்த்தைகளை பேச வேண்டாம்: மத்தேயு 6:7-8

## விசுவாசம்:

-தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்: மாற்கு 11:22
-விசுவாசமற்று இருக்க வேண்டாம்: யோவான் 20:27
-அயலாருடன் சந்தேக மனதோடு இருக்கவேண்டாம்: லூக்கா 12:29
-உங்கள் வாழ்க்கையை மட்டும் எண்ணவேண்டாம்: மத்தேயு 6:25-34
-கலங்க வேண்டாம்: யோவான் 14:1-27
-திடன் கொள்ளுங்கள்: மத்தேயு 14:27
-பயப்படாதிருங்கள்: மாற்கு 5:36, லூக்கா 12:4-7

## மரணபரியந்தமும் உண்மையாயிருத்தல்:

-மரணபரியந்தம் உண்மையாயிரு: வெளிப்படுத்தல் 2:10
-உனக்குள்ளதை பற்றிக்கொண்டிரு: வெளிப்படுத்தல் 3:11
-உங்களை பிடித்து துன்பப்படுத்தினால் சந்தோஷமடையுங்கள்: மத்தேயு 5:11-12, லூக்கா 6:23
-உங்களை உபத்திரவப்படுத்தினால் வேறொரு நகருக்கு செல்லுங்கள்: மத்தேயு 10:23

-எப்படி பேசுவோம் என கவலைபட வேண்டாம்: மத்தேயு 10:19
-முறுமுறுக்க வேண்டாம்: யோவான் 6:41-43
-தலையை ஏறெடுத்து பாருங்கள்: லூக்கா 21:28

## நற்செய்தியை பிரசங்கித்தல்:

-சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள்: மத்தேயு 10:7, மாற்கு 16:15
-கிறிஸ்துவின் நாமத்தில் மனந்திரும்புதலை போதியுங்கள்: லூக்கா 24:46-47
-திரித்துவ நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள்: மத்தேயு 28:19
-உங்களுக்கு கட்டளையிட்ட யாவற்றையும் கற்றுக் கொடுங்கள்: மத்தேயு 28:20
-நான் சொல்பவற்றை சொல்லுங்கள்: மத்தேயு 10:27, மாற்கு 4:22
-எனது ஆடுகளை போஷியுங்கள்: யோவான் 21:15-17
-வியாதியஸ்தரை குணமாக்குங்கள்: மத்தேயு 10:8.

## பேராசை:

-பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: லூக்கா 12:15
-பூமியிலே பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம்: மத்தேயு 6:19-20
-தசமபாகத்தை செலுத்தி இரக்கத்தை விட்டுவிடாதே: மத்தேயு 23:23
-கேட்கின்றவர்களுக்கு கொடு: மத்தேயு 5:42
-உங்களுக்குண்டானவற்றில் கொடுங்கள்: லூக்கா 11:41
-இராப்போசத்திற்காக ஏழைகளை அழையுங்கள்: லூக்கா 14:12-13

## மாய்மாலம்:

-பரிசேயரின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: லூக்கா 12:1
-வேதபாரகரைப்பற்றிய எச்சரிக்கை: லூக்கா 20:46-47
-அவர்களுடைய செய்கைகளின்படி செய்யாதிருங்கள்: மத்தேயு 23:3-4
-எனது பிதாவின் வீட்டை கள்ளர் குகையாக்காதீர்கள்: மத்தேயு 2:16
-மனுஷர் பார்க்க வேண்டும் என்பதற்கு தானம் செய்ய வேண்டாம்: மத்தேயு 6:1-4
-அறைவீட்டுக்குள் பிரவேசித்து இரகசியமாய் ஜெபி: மத்தேயு 6:5-6
-மனிதர்கள் காணும்படியாக உபவாசிக்க வேண்டாம்: மத்தேயு 6:16-18

## சாந்தம்:

-உங்கள் மீது என் நுகத்தடியை எடுத்துக் கொள்ளுங்கள்: மத்தேயு 11:29
-புறஜாதிகளின் அதிகாரிகளைப்போலிருக்க வேண்டாம்: மத்தேயு 20:25-26
-தலைவனாயிருக்க விரும்புகிறவன் வேலைக்காரனாயிருக்கக்கடவன்: மாற்கு 10:43-44
-ரபி என அழைக்கப்படாதிருங்கள்: மத்தேயு 23:8
-முதன்மையான அறையில் உட்கார வேண்டாம்: லூக்கா 14:8-11
-ஆவிகள் கீழ்ப்படிகிறதிற்காக சந்தோஷபடவேண்டாம்: லூக்கா 10:20
-நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர்: லூக்கா 17:10

## சகோதரரிடத்தில் எமது அன்பு:

-நான் உங்களை நேசித்ததுபோல மற்றவர்களையும் நேசியுங்கள்: யோவான் 15:12
-சிறியரில் ஒருவரையும் அற்பமாய் எண்ண வேண்டாம்: மத்தேயு 18:10-14
-சகோதரனுடன் சமாதானமாயிரு: சமரசமாயிரு: மத்தேயு 5:23-24, மாற்கு 9:50
-சகோதரனின் குற்றங்களை தீர்த்துக் கொள்: மத்தேயு 18:15-17
-சகோதரனை ஒரு நாளைக்கு ஏழுதரம் மன்னித்துவிடு: மத்தேயு 18:21-22, லூக்கா 17:3-4
-தோற்றத்தின்படி தீர்ப்பு செய்ய வேண்டாம்: மத்தேயு 7:1-5, யோவான் 7:24
-ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள்: லூக்கா 6:37

## பரிபூரண அன்பு:

-பூரண சற்குணராயிருங்கள்: மத்தேயு 5:48
-உங்களுக்குள்ளதைவிற்று தரித்திரருக்கு கொடுங்கள்: மத்தேயு 19:21, லூக்கா 12:32-33
-சத்துருக்களை சிநேகியுங்கள்: மத்தேயு 5:44, 26:52
-பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்: லூக்கா 6:27-28
-கைமாறு கருதாமல் கடன் கொடுங்கள்: லூக்கா 6:35
-தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்: மத்தேயு 5:39-41
-பொறுமையினால் உங்கள் ஆத்துமாவை காத்துக்கொள்ளுங்கள்: லூக்கா 21:19

## தேவனில் உயர்வான அன்பை காட்டுங்கள்:

-தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும்.. ஆத்துமாவோடும், மனதோடும், பலத்தோடும் அன்புகூருவாயாக: மாற்கு 12:30
-தேவன் ஒருவரையே ஆராதிப்பாயாக: மத்தேயு 4:10
-ஆவியோடும் உண்மையோடும் ஆராதிப்பாயாக: யோவான் 4:23-24
-பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்: மத்தேயு 23:9
-தேவனாகிய கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக: மத்தேயு 4:7
-தேவனுக்கு பயந்திரு: லூக்கா 12:5
-எல்லோரும் குமாரனையும் கனம்பண்ண வேண்டும்: யோவான் 5:22-23

## தேவன் மற்றும் மனிதரிடம் எமது கடமை:

-இராயனுடையதை இராயனுக்கு செலுத்துங்கள்: மாற்கு 12:17
-சத்தியம் பண்ணவேண்டாம்: மத்தேயு 5:34-37, மாற்கு 4:22
-தேவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கக்கடவன்: மத்தேயு 19:5-6
-சீக்கிரமாய் நல்மனம்பொருந்து: மத்தேயு 5:25
-பிசாசுகளை துரத்தும்போது தடுக்க வேண்டாம்: மாற்கு 9:38-40
-உங்களுக்கு முன்னால் வைக்கப்பட்டவற்றை சாப்பிடுங்கள்: லூக்கா 10:38
-ஒன்றும் சேதப்பட்டு போகாதபடிக்கு சேகரியுங்கள்: யோவான் 6:12

## அயலாருடன் எமது கடமை:

-உங்களைப்போல அயலாளரையும் நேசிக்கவும்: மத்தேயு 19:17-19
-கொலை செய்ய வேண்டாம்: மத்தேயு 19:18
-விபச்சாரம் செய்ய வேண்டாம்: மத்தேயு 19:18
-களவு செய்ய வேண்டாம்: மத்தேயு 19:18
-பொய்சாட்சி சொல்ல வேண்டாம்: மத்தேயு 19:18
-தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக: மத்தேயு 19:19
-மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்களோ அதை செய்யுங்கள்: லூக்கா 6:31

## ஞானம்:

-சர்ப்பத்தைப்போன்று வினா.., புறாக்களைப்போல கபடற்றவர்களாயும் இருங்கள்: மத்தேயு 10:16
-மனுஷரைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: மத்தேயு 10:17
-குருடருக்கு வழி காட்டும் குருடரை விட்டுவிடுங்கள்: மத்தேயு 15:12-14
-பரிசுத்தமானவற்றை நாய்களுக்கு கொடாதிருங்கள்: மத்தேயு 7:6
-பணப்பையுடையவன் அதை எடுத்துக் கொள்ளக்கடவன்: லூக்கா 22:35-36
-பாத்திரவான் யார் என விசாரியுங்கள்: மத்தேயு 10:11-13, லூக்கா 10:5-7
-ஏற்றுக் கொள்ளாதவரின் இடத்திலிருந்து காலில் படிந்த தூசியை தட்டிவிடுங்கள்: லூக்கா 9:5, 10:10-11

## வேதவாக்கியங்களை தேடுங்கள்:

-வேதவாக்கியங்களை தேடுங்கள்: யோவான் 5:39
-நான் சொன்ன வார்த்தைகளை நினைவிற் கொள்ளுங்கள்: யோவான் 15:20
-நீங்கள் இந்த வார்த்தைகளை கவனமாய் கேளுங்கள்: லூக்கா 9:44
-கேட்பவைகளைக் குறித்து கவனமாயிருங்கள்: லூக்கா 8:18
-நீங்கள் கேட்கிறதை கவனியுங்கள்: மாற்கு 4:24
-பரிசேயரின் புளித்தமாவைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: மத்தேயு 16:6-12
-கள்ள தீர்க்கதரிசிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்: மத்தேயு 7:15-17

## உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும்:

-உங்கள் ஒளி பிரகாசிக்கட்டும்: மத்தேயு 5:16
-உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு: லூக்கா 11:35
-நீங்கள் போய் கனி கொடுங்கள்: யோவான் 15:16
-இரக்கமுள்ளவர்களாயிருங்கள்: லூக்கா 6:36
-உனக்குச் செய்தவைகளையெல்லாம் அறிவி: மாற்கு 5:19
-கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்: யோவான் 4:35
-வெளிச்சத்திலே நடவுங்கள்: யோவான் 12:35

## கிறிஸ்துவின் இரண்டாம் வருகை:

-உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக் கொண்டிருங்கள்: வெளிப்படுத்தல் 2:25,3:2-3
-மனுஷகுமாரன் வருவார்: ஆயத்தமாயிருங்கள்: லூக்கா 12:40
-உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரியட்டும்: லூக்கா 12:35-36
-உங்களுடைய இருதயங்கள் பெருந்திண்டி..வெறி லவுகீக கவலையால் பாரமடையாதிருப்பதாக: லூக்கா 21:34
-லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்: லூக்கா 17:31-32
-வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருங்கள்: மாற்கு 13:5-6, லூக்கா 21:8
-விழித்திருங்கள்: மாற்கு 13:34-37

அத்தியாயம் ஏழு

# இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்

# இராஜ்ஜியத்தின் கொள்கைகள் - பகுதி ஒன்று

## நோக்கங்கள்:

இப்பாடத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால் முடியுமானவை:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ இராஜ்ஜியத்தின் கொள்கைகளை அறிந்து கொள்வதின் முக்கியத்துவத்தை விபரிக்கவும்,
- ☐ தேவ இராஜ்ஜியத்தை ஆளும் அடிப்படை கொள்கைகளை அறிந்து கொள்ளவும்,
- ☐ இராஜ்ஜியத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் அடித்தளத்தை அடையாளம் காணவும்,
- ☐ இரண்டு இராஜ்ஜியத்தின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளை பட்டிய லிடவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். (லூக்கா 22:29)**

## அறிமுகம்

இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் மனிதனை முதலில் தேவனது இராஜ்ஜியத்திற்கு திரும்பவும் அழைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. ஆனால் இவைகளையெல்லாம் செய்தால் தான் இராஜ்ஜியத்திற்குள் நுழைய முடியும் என்று அறநெறிகளை அவர் அமைக்கவில்லை. அதற்குள் பிரவேசிக்க ஒரேயொரு வேண்டு-தலே உண்டு: பாவத்திலிருந்து மனந்திரும்புதலின் விளைவாக மறுபிறப்படைவதே அது. நீங்கள் மனந் திரும்பி இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது, தேவ இராஜ்ஜியத்திற்கென்று பிறந்து இராஜ்ஜியத்தின் குடிகளாகிறீர்கள்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் குடிகள், இராஜ்ஜியத்தின் சட்டங்களுக்கமைவான புதிய வாழ்க்கை முறையால் ஆளப்படுவது அவசியமாகும். ஆன்மீக இராஜ்ஜியத்தின் வாழ்வின் தரத்தை புலப்படும் இராஜ்ஜியத்தின் வாழ்க்கை பாதிக்கின்றது. இராஜ்ஜியத்தின் வாழ்க்கை உலக இராஜ்ஜியத்தின் வாழ் விலும் பார்க்க மாறுபட்டது. இவ்விரண்டினதும் கட்டமைப்புகளும் கொள்கைகளும் மாறுபட்டவை. நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பது புதிய நாட்டுக்குள் பிரவேசிப்பதைப் போன்றது. அத னால் நீங்கள் வித்தியாசமான கலாச்சாரத்தையும் கற்றுக் கொள்ள வேண்டும்.

பௌதீக உலகின் 'பண்பாடு' ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்வை ஆளும் நடத்தைகளில் உள்ளது. இதைப்பற்றியும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்பற்றியும் பின்வரும் அத்தியாயங்களில் கற்பீர்கள். பின்வரும் அத்தியாயங்களில் உவமைகளின் மூலம் அதிகமான சத்தியங்கள் வழங்கப்படும்.

## இராஜ்ஜியத்தின் கொள்கையின் முக்கியத்துவம்

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வாழ்க்கைக்கு, அதன் கொள்கைகளை அறிந்திருப்பது முக்கியமானது.

### நீங்கள் வசிக்கின்ற இராஜ்ஜியத்தின் குடியுரிமையை காத்துக் கொள்ள அதன் கொள்கைககளின்படி வாழ வேண்டும்:

இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிக்க மனந்திரும்புதல் மாத்திரமே அவசியமாயிருக்கின்றது, குடியுரிமையை காத்துக் கொள்ள திட்டவட்டமான வேண்டுதல் ஒன்றுண்டு. இயேசு கூறினார்:

> **பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. (மத்தேயு 7:21)**

தேவனுடைய சித்தத்தை அவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார், இராஜ்ஜியத்தின் சட்டங்களின்படியே விசுவாசிகள் ஆளப்படுவார்கள்.

### இயேசு இராஜ்ஜியத்தின் கொள்கைகள் முக்கியமானது என்றுள்ளார்:

இயேசு இராஜ்ஜியத்தின் வாழ்வைக் குறித்து அவதானமாயிருக்க வேண்டும் என லூக்கா 12:22-31ல் கற்றுத்தந்துள்ளார். அதை அவர் பின்வரும் அறிக்கையில் கூறியுள்ளார்:

> **தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (லூக்கா 12:31)**

நீங்கள் முதலாவதாக இராஜ்ஜியத்தை தேட வேண்டும்.. அதன் கொள்கைகள், அதன் வாழ்க்கை முறை, போன்றனவற்றை தேடும்போது வாழ்க்கைக்கு அவசியமாக சகல விடயங்களும் வழங்கப்படும்.

### இராஜ்ஜியத்தின் கனிகள் பின்வருமாறு சோதிக்கப்படும்:

கனிகளை பரீட்சித்து அறிவதினால் இராஜ்ஜியம் எவ்வாறானது என அறியப்படும் என இயேசு யூதர்களுக்கு கூறினார். மத்தேயு 21:43. ஒரு மரத்தின் கனி அதன் உள்ளான வாழ்வை வெளிப்படுத்துவதுபோல இராஜ்ஜியத்தின் கனியானது உள்ளான வாழ்வின் தோற்றத்தை வெளியரங்கமாக்கும். நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தின் குடியிருப்பாளரானால், அதை நீங்கள் வெளியரங்கமான வாழ்வில் காண்பிப்பீர்கள்.

---

இயேசு கற்பித்த யாவும் இராஜ்ஜியத்தின் நற்செய்தியில் உள்ளது. சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் 'போதனையின் உத்திகள்' என்ற மற்றொரு பாடத்தில் இயேசு கிறிஸ்துவின் சகல போதனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது. 'போதனையின் உத்திகள்' வேறொரு பாடமென்பதால் இப்பாடத்தில் அவைகள் இதனுடன் இணைக்கப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் போதனைகளை சிவப்பு நிறம் கலந்து அச்சிடப்பட்ட வேதாகமங்களில் மாணவர்கள் கற்றுக் கொள்ள முடியும். இவ்வேதாகமத்தில் இயேசுவின் போதனை சிவப்பு நிற மையினாலும், மற்றவை கறுப்பு நிற மையினாலும் அச்சிடப்பட்டிருக்கும்.

## எதிர்கால இராஜ்ஜியத்தின் ஆட்சிக்காலத்திற்குரிய கொள்கைகளையும் தெரிந்திருக்க வேண்டும்:

எதிர்கால தேவனுடைய இராஜ்ஜியத்தில் விசுவாசிகளும் தேவனுடன் இணைந்து ஆளுகை செய் வார்கள் என 2 தீமோத்தேயு 2:12 குறிப்பிடுகின்றது. 'ஆளுகை' என்று கூறும்போது அது 'வல்லமையோடும் அதிகாரத்தோடும்' ஆளுவதைக் குறிக்கும். நீங்கள் அவரோடு ஆளுகை செய்வீர்களேயானால், அவரது இராஜ்ஜியத்தின் சட்டங்களை அறிந்திருக்க வேண்டும்.

## இராஜ்ஜியத்தின் கொள்கைகளின் அத்திபாரம்

பௌதீக உலகத்தில் கட்டமைப்பின் அடிப்படையிலேயே அத்திபாரம் போடப்படும். ஒரு கட்டிடத்தை கட்டும்போதெல்லாம் அவர்கள் முதலில் ஒரு சரியான அத்திபாரத்தை போட வேண்டும். நேர்த்தியான கண்ணுக்கு புலப்படும் கட்டிடத்தை அத்திபாரமே ஆதரித்து தாங்குகின்றது.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் அத்திபாரம் அதை ஆளும் நீதியின் கொள்கைகளில் உள்ளது.

> **குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது. (எபிரெயர் 1:8)**

செங்கோல் என்பது கையில் வைத்துள்ள ஒரு கோல், அது வல்லமையையும் அதிகாரத்தையும் பறைசாற்றும். அந்த அதிகாரம் அல்லது வல்லமை என்பது தேவனுடைய இராஜ்ஜியத்தின் நீதியாக இருக்கின்றது. அது சுய முன்னேற்றமோ அல்லது மதமோ அல்ல. இயேசு சொன்னார்:

> **வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 5:20)**

இயேசுவின் மண்ணுலக ஊழியத்தின்போது சதுசேயரும் பரிசேயரும் மதத்தலைவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய ஆவிக்குரிய அனுபவங்கள் அவர்களது மத சுய முயற்சிகளில் நிறுவப்பட்டிருந்தது. அவர்கள் அநேக விதிகளையும், கட்டுப்பாடுகளையும், பாரம்பரியங்களையும் தமது வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கடைப்பிடித்தனர்.

நீதியின் தேவனாலேயே இராஜ்ஜியம் கட்டப்படுள்ளது: எம்மால் கூற முடியும்:

> **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:33)**

தேவனுடைய இராஜ்ஜியத்தின் அத்திபாரம், நீதிமான்களது நீதியின் வாழ்வின் மீதே இடப்பட்டுள்ளது.

> **ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. கர்த்தர் தம்முடையவர்களை அறிவாரென்பதும், கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிற எவனும் அநியாயத்தைவிட்டு விலகக்கடவனென்பதும், அதற்கு முத்திரையாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 2:19)**

இது பின்வரும் வரைபடத்தால் உதாரணப்படுத்தப்படுகின்றது:

**தேவனுடைய இராஜ்ஜியத்தின் அஸ்திபாரம்**

| | | |
|---|---|---|
| நீதிமானாகிய மனிதர்கள் | → | தேவன் தம்முடையவர்களை அறிந்திருக்கின்றார் |
| நீதியான வாழ்க்கையை வாழுதல் | → | கர்த்தருடைய நாமத்தை தரித்துக் கொண்ட யாவருக்கும் அவர் பாவமன்னிப்பையளித்து அதிலிருந்து விலக்கிகாக்கின்றார். |

இந்த நீதியின் அர்ப்பணிப்பு இரண்டு நிலைகளில் உள்ளது. இதை பின்வரும் பந்தி தெளிவாக விளக்குகிறது:

> **அப்பொழுது ஒருவன் வந்து, அவரை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான்.**
>
> **அதற்கு அவர்: நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே. நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார்.**
>
> **அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயதுமுதல் கைக் கொண்டிருக்கிறேன். இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான்.**
>
> **அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டா னவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது, பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.**
>
> **அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்ட-பொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். (மத்தேயு 19:16-17, 20-22)**

'ஜீவனுக்குள் பிரவேசிக்க' நீதி தேவையாக இருக்கின்றது. இந்த நீதி பாவம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்படுவதினால் ஏற்படும் புதிய பிறப்பின் அனுபவத்தினால், தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து வாழ்வதின் மூலம் வருகின்றது. ஆனால் நீதியின் மற்றொரு நிலை பூரணத்துவமாகும். (ஆவிக்குரிய முதிர்ச்சி). பூரணத்துவத்தை அடைய உலக மதிப்புகள், தராதரங்கள், விமைதிப்பற்ற உடைமைகள் தேவைப்படுகின்றது.

எமக்குரியதெல்லாவற்றையும் விற்றுவிட வேண்டும் அல்லது ஏழைகளுக்கு கொடுத்துவிட வேண்டும் என்பது இதன் அர்த்தமாகாது. இந்த மனிதன் தேவனைப் பார்க்கிலும் செல்வத்தை நேசித்தமையி-னாலேயே இயேசு இதன் முக்கியத்துவத்தை காண்பித்தார். இராஜாவைப் பார்க்கிலும் முக்கியமானது இவ்வலகில் ஒன்றுமில்லை. பரிபூரணத்துவத்தை அடைய உலகத்தின் கொள்கைகளை கைவிட்டுவிட்டு தேவனுடைய இராஜ்ஜியத்தின் கொள்கைகளை தழுவிக் கொள்ள வேண்டும்.

## இரண்டு பெரிதான இராஜ்ஜியத்தின் கொள்ளைகள்

பெரிதான இராஜ்ஜியத்தின் கொள்கைகள் அடிப்படையாகக் கொண்டே மற்ற கொள்கைகள் இருக்கின்றன. பெரிதான கற்பனை என்னவென்று கேட்டபோது இயேசு சொன்னார்:

> **இயேசு அவனை நோக்கி: உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக.**
>
> **இது முதலாம் பிரதான கற்பனை.**
>
> **இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே.**
>
> **இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்றார். (மத்தேயு 22:37-40)**

மாற்கு அதே அறிக்கையை பின்வருமாறு பதிவு செய்திருக்கின்றார்:

> **இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.**
>
> **உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோ-டும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிர-தான கற்பனை.**
>
> **இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். (மாற்கு 12:29-31)**

இயேசு மற்றொரு விதத்தில் இரண்டாவது கற்பனையை கூறினார்:

> **ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்க-ளுமாம். (மத்தேயு 7:12)**
>
> **மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (லூக்கா 6:31)**

சுருங்கக்கூறின், தேவனுடைய இராஜ்ஜியத்தின் இரண்டு பெரிதான கொள்கைகளாவன:

1. தேவனை முழு இருதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் முழு பெலத்தோடும் அன்பு கூற வேண்டும்.

2. மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்களோ அதையே மற்றவர்களுக்கு செய்யுங்கள்.

மற்றறெல்லா இராஜ்ஜியத்தின் கொள்கைகளும் இந்த இரண்டு முக்கிய கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு இராஜ்ஜியத்தின் கொள்கைகளும் தேவனுடனும் மற்றவர்களுடனும் உள்ள உறவை தொடர்புபடுத்தும்.

## இராஜ்ஜியம் அறிமுகப்படுத்துவது:

இந்த உலகத்தின் இராஜ்ஜியத்தின் கட்டமைப்புக்கு எதிர் மறையானதாக, தேவனுடைய இராஜ்ஜியம் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அதன் கட்டமைப்பு சரியானதாகவும் வெளிப்படையாகவும் இருந்தது. தேவ தூதன் கன்னி மரியாளிடம் தோன்றி, அவள் வரப்போகும் இராஜாவின் தாயார் என பறைசாற்றிய போது, மரியாள் தேவனை போற்றினாள். அவளது வார்த்தைகள் தீர்க்கதரிசனம் மற்றும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் புதிய உலகை வெளிப்படுத்துவதமாக இருந்தது.

> **வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.**
>
> **அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலை முறைக்குமுள்ளது.**
>
> **தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார். இருதயசிந்தையில் அகந் தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.**
>
> **பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்.**
>
> **பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். (லூக்கா 1:49-53)**

உலகின் பெருமை மற்றும் வலிமைமை, மேன்மை கீழ்நோக்கி சென்றது. பசியுள்ளவன் திருப்தியாக்கப்பட்டும், செல்வந்தன் வெறுமையாகவும் அனுப்பப்பட வேண்டும்.

தேவனுடைய இராஜ்ஜியத்தை யோவான் இந்தவிதமாகவே வெளிப்படுத்தி அறிமுகஞ்செய்தார்:

> **மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும், வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிறபிரகாரம்,**
>
> **அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்கும் போய், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசங்கித்தான். (லூக்கா 3:5-6)**

தண்ணீரை திராட்சரசமாக்கும் முதல் அற்புதத்தை இயேசு செய்தார். உலகின் அரசாட்சிக்கு மாறானதாக இராஜ்ஜியத்தின் சட்டங்கள் விளக்கப்பட்டுள்ளது.

## பொதுவான கொள்கைகள்: இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்

மண்ணுலக ஆட்சிக்கும், மனிதனால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான சிந்தனைக்கும் நேர் எதிரிடையாக தேவனுடைய இராஜ்ஜியத்தின் அடிப்படைக் கொள்கைகள் இருக்கின்றன. இந்த கொள்கைகள் பின்வருகின்றன:

### பொதுவான கொள்கை:

இயேசுவால் இராஜ்ஜியத்தின் ஒரு அடிப்படை கொள்கை நிறுவப்பட்டது. 'உங்கள் மத்தியில் அப்படி இருக்கக்கூடாது

> **அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.**
>
> **உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். (மத்தேயு 20:25-28)**
>
> **உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது. உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன். (லூக்கா 22:26)**
>
> **உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மாற்கு 10:43-44)**

இயேசு இங்கே ஒரு தலைமைத்துவ விடயத்தை கையாளுகின்றபோதும், அவர் ஒரு பொதுவான இராஜ்ஜியத்தின் கொள்கையையும் நிறுவினார். 'உங்கள் மத்தியில் அப்படி இருக்கக்கூடாது' உலக தரத்தில், மண்ணுலக அரசாட்சியின் சில கொள்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பினும், தேவனுடைய இராஜ்ஜியத்தின் கொள்கைகள் வித்தியாசமானவையாகவே இருக்கின்றது. 'உங்கள் மத்தியில் அப்படி இருக்கக்கூடாது'.

## ஐக்கியத்தின் கொள்கை:

மண்ணுலகத்தில் ஏராளமான இராஜ்ஜியங்கள் உண்டு, எனினும் அவைகள் பிளவுபட்டதாகவே இருக் கின்றது. இப்படியாக பிளவுபட்டிருப்பதால், பல புரட்சிகளும் போராட்டங்களும் இருக்கின்றன. தேவ-னுடைய இராஜ்ஜியம் ஒரு ஐக்கிய இராஜ்ஜியம். அது பல அவயவங்களைக் கொண்ட ஆவிக்குரிய சரீரமாக விபரிக்கப்பட்டுள்ளது.

> **எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப்பிரக-ாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.**
>
> **நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.**
>
> **சரீரமும் ஒரே அவயவமாயிராமல் அநேக அவயவங்களாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 12:12-14)**

தேவனுடைய இராஜ்ஜியத்தில் வசிப்போர் தேவனுடனும் இயேசுவுடனும் இணைந்திருப்பார்கள்:

> **அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்க ளெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.**
>
> **நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.**
>
> **ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பின தையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும்படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன். (யோவான் 17:21-23)**

தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும் சாத்தானின் இராஜ்ஜியத்திற்கும் சம்பந்தம் இல்லை.

> **இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோ-தமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம். தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது.**
>
> **சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிற-தாயிருக்குமே. அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?**
>
> **நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவை-**

**களை யாராலே துரத்துகிறார்கள்? ஆகையால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கி-றவர்களாயிருப்பார்கள்.**

**நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. (மத்தேயு 12:25-28, லூக்கா 11:17-20)**

எல்லையற்ற வல்லமையை பிறப்பிப்பதே தேவனுடைய இராஜ்ஜியத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருக்கின்றது. இயேசு வாக்குப்பண்ணினார்:

**அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்தேயு 18:19-20)**

தேவனுடைய இராஜ்ஜியத்தின் குடிகள் மாம்ச சரீரத்தில் இருக்கிறபடியால் நேரத்திற்கு நேரம் பிரிவினைகள் தோன்றுகின்றன. இவ்விதமான பிரிவினையை கையாளும் முறையை இயேசு கொடுத்தது மத்தேயு 18:15-35 வரையும் காணப்படுகின்றது.

## விளங்கிக் கொள்ளும் கொள்கை:

தேவனுடைய இராஜ்ஜியத்தை இரண்டு வழிகளில் விளங்கிக் கொள்ளலாம். ஒளி மற்றும் உப்பு

**நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.**

**நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள். மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.**

**விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள். அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும்.**

**இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்-கடவது. (மத்தேயு 5:13-16)**

**ஒருவனும் விளக்கைக் கொளுத்தி, மறைவிடத்திலாவது, மரக்காலின் கீழேயாவது வைக்காமல், உள்ளே வருகிறவர்கள் வெளிச்சம் காணும்படி, அதை விளக்குத்தண்டின் மேல் வைப்பான்.**

**கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.**

**ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.**

**உன் சரீரம் ஒருபுறத்திலும் இருளடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால், ஒரு விளக்கு தன் பிரகாசத்தினாலே உனக்கு வெளிச்சம் கொடுக்கிறதுபோல, உன் சரீரமுழுவதும் வெளிச்சமாயிருக்கும் என்றார். (லூக்கா 11:33-36)**

**உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால் எதினால் சாரமாக்கப்படும்?**

**அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் உதவாது, அதை வெளியே கொட்டிப் போடுவார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றார். (லூக்கா 14:34-35)**

**பின்னும் அவர் அவர்களை நோக்கி: விளக்கைத் தண்டின்மேல் வைக்கிறதற்கேயன்றி, மரக்காலின் கீழாகிலும், கட்டிலின் கீழாகிலும், வைக்கிறதற்குக் கொண்டுவருவார்களா? (மாற்கு 4:21)**

**உப்பு நல்லதுதான், உப்பு சாரமற்றுப்போனால், அதற்கு எதினாலே சாரமுண்டாக்குவீர்கள்? உங்களுக்குள்ளே உப்புடையவர்களாயிருங்கள், ஒருவரோடொருவர் சமாதானமுள்ளவர்களாயும் இருங்கள் என்றார். (மாற்கு 9:50)**

பௌதீக உலகில் ஒளியும் உப்பும் அமைதியாக வேலை செய்கின்றது. அவை உணவை பாதுகாக்கவும், காயமாற்றவும், சுவையை சேர்க்கவும் பயன்படுகிறது. சிறிதளவு உப்பானது பாரியளவு பாதிப்பை உணவிற்கு கொடுக்கின்றது.

ஆவிக்குரிய உலகில், இராஜ்ஜியத்தின் குடிகள் உப்பைபோன்று ஊடுருவி உள்ளனர். அவர்கள் இராஜ்ஜியத்தின் மதிப்பையும் தரத்தையும் பாதுகாக்க வேண்டும், மற்றவர்களை குணமாக்க வேண்டும், வாழ்க்கைக்கு சுவையூட்ட வேண்டும். அவர்கள் இராஜ்ஜியத்தில் பரவியுள்ளனர். உப்பானது மனித குலத்திற்கு பெரிதான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மற்றொரு பகுதியில் இயேசு இராஜ்ஜியத்தை புளித்த மாவிற்கு ஒப்பிடுகின்றார். (மத்தேயு 13:33) உப்பைப்போன்றே புளித்தமாவும் அமைதியாக வேலை செய்கின்றது.

பௌதீக உலகில் ஒளி இருளை அம்பலப்படுத்துகின்றது. இருளில் வழிகாட்டுகின்றது. ஒளியிலிருந்து இருள் தப்பிக்க முடீயாது. இராஜ்ஜியத்தின் குடிகள் ஆவிக்குரிய ஒளியாக உலகிற்கு இருக்கின்றார்கள். அவர்கள் இருளிலிருப்போருக்கு வழிகாட்ட வேண்டும். அவர்கள் இருளான காரியங்களை அவரது வாழ்வில் அனுமதிக்க முடியாது. விசுவாசிகள் புலப்படும் விதத்தில் இராஜ்ஜியத்தின் வாழ்வை வாழ வேண்டும், இராஜ்ஜியத்தின் செய்தியை படிப்படியாக உலகத்திற்குள் பரப்ப வேண்டும்.

## ஜெபத்தின் கொள்கைகள்:

இராஜ்ஜியத்தின் ஜெபம் மூன்று கொள்கைகளை அடிப்படையாக கொண்டுள்ளது. கேட்டல், தேடுதல், தட்டுதல்:

**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**

**ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகி-றான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (மத்தேயு 7:7-8)**

ஜெபத்தின் ஒவ்வொரு நிலையும் அதிக தீவிரமாக தேவனைத் தேடுவதைப்பற்றி பேசுகின்றது.

இராஜ்ஜியத்தின் குடியிருப்பாளருக்காக ஒரு மாதிரி ஜெபத்தை இயேசு கொடுத்துள்ளார். அதை நீங்கள் மத்தேயு 6:9-10லும் லூக்கா 11:2-4லும் வாசிக்கலாம்.

## ஆராதனைக் கொள்கை:

ஆராதனையின் அடிப்படைக் கொள்கைகள் மத்தேயு 6:1-18 விபரிக்கின்றது. உங்களது வேதாகமத்தில் இதை வாசியுங்கள். ஆராதனையின் அடிப்படைக் கொள்கைகளில் சேர்ந்திருப்பவை:

| | | |
|---|---|---|
| கொடுத்தல் : | வெளிநோக்கிய பார்வை | மத்தேயு 6:1-4 |
| ஜெபித்தல் : | மேல் நோக்கிய பார்வை | மத்தேயு 6:5-15 |
| உபவாசம் : | உள் நோக்கிய பார்வை | மத்தேயு 6:16-18 |

இம்மூன்று பகுதியான ஆராதனையும் தேவனின் ஆசீர்வாதத்தை பெறும்படியாக இரகசியமாக செய்யப்பட வேண்டும்.

## தனித்தன்மையான பார்வைக் கொள்கை:

இராஜ்ஜியத்தின் குடியிருப்பாளர்கள் முதலாவதாக தேவனுடைய இராஜ்ஜியத்தை தேட வேண்டிய தனித்துவமான பார்வையை கொண்டிருக்க வேண்டும். மத்தேயு 6:19-34ஐ லூக்கா 12:22-34உடன் ஒப்பிட்டு வாசிக்கவும்.

-இயேசு தனித்துவமான இதயத்தை பற்றி பேசினார் மத்தேயு 6:19-21
-அவர் தனித்துவமான பார்வையை பற்றி பேசினார் மத்தேயு 6:22-23
-அவர் தனித்துவமான பக்தியை பற்றி பேசினார் லூக்கா 16:13
-அவர் தனித்துவமான ஊழியத்தைப்பற்றி பேசினார் மத்தேயு 6:24, லூக்கா 9:60,62
-அவர் தனித்துவமான சிந்தனையைப்பற்றி பேசினார் மத்தேயு 6:25-32,34

பின்வரும் வசனம் இக்கொள்கையின் தனித்துவமான பார்வையை சுருக்கமாக தருகின்றது:

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:33)**

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்.

..............................................................................................................................................................

..............................................................................................................................................................

2. இராஜ்ஜியத்தின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கும் அடித்தளத்தை அடையாளம் என்ன?

..............................................................................................................................................................

3. இரண்டு இராஜ்ஜியத்தின் சட்டங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள் யாவை?

- முதலாவது: ..........................................................................................................................

- இரண்டாவது: ........................................................................................................................

4. இராஜ்ஜியத்தின் கொள்கைகளை அறிந்து கொள்வதின் முக்கியத்துவங்கள் நான்கை எழுதவும்.

............................................................................................ ............................................................................................

............................................................................................ ............................................................................................

5. கொள்கைகள் கற்று தரும் வசனங்களை பொருத்தமாக, உங்களுடைய வேதாகமத்தை பாவித்து பொருத்தவும். முதலாவது பகுதியிலுள்ள வசனங்களை கவனியுங்கள். அந்த வசனம் கற்று தருகின்ற கொள்கைகளை இரண்டாவது பகுதியிலிருந்து தெரிவு செய்யவும். பின்னர் முதலாம் பகுதியில் உள்ள வசனங்களுக்கு முன் கோடிட்ட இடத்தில் சரியான இலக்கத்தை எழுதவும். முதலாவது உதாரணமாக தரப்படுகின்றது.

| **பகுதி ஒன்று** | | **பகுதி இரண்டு** |
|---|---|---|
| அ........2....... | மத்தேயு 5:13-16 | 1. ஒற்றுமையின் கொள்கை |
| ஆ................ | 1 கொரிந்தியர் 12:12-14 | 2. விளங்கிக் கொள்ளும் கொள்கை |
| இ................. | மத்தேயு 20:26 | 3. ஜெப கொள்கை |
| ஈ.................. | மத்தேயு 7:7-12 | 4. பொதுவான கொள்கை: இராஜ்ஜியத்தின் கொள்கைகள் உலகத்திலிருந்தும் வேறுபடுகின்றது. |
| உ................ | மத்தேயு 6:1-18 | 5. தனித்தன்மையான பார்வை |
| ஊ................ | மத்தேயு 6:19-34 | 6. ஆராதனைக் கொள்கை |

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

லூக்கா புத்தகம் கூறும் இராஜ்ஜியத்தின் கொள்கைகள்:

லூக்கா 1:33

........................................................................................................................................

4:43

........................................................................................................................................

6:20

........................................................................................................................................

7:28

........................................................................................................................................

8:1,10

........................................................................................................................................

9:2,11,27,60

........................................................................................................................................

10:9-11

........................................................................................................................................

11:2,17-20

........................................................................................................................................

12:31-32

........................................................................................................................................

13:18-29

........................................................................................................................................

14:15

........................................................................................................................................

16:16

........................................................................................................................................

17:20-21

........................................................................................................................................

18:16-29

........................................................................................................................................

19:11-15

........................................................................................................................................

21:10,31

........................................................................................................................................

22:16-30

........................................................................................................................................

23:42,50-51

அத்தியாயம் எட்டு

# தேவ இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்

# இராஜ்ஜியத்தின் கொள்கைகள் - பகுதி இரண்டு

## நோக்கங்கள்:

இப்பாடத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால் முடியுமானவை:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், உலக இராஜ்ஜியத்திற்குமிடையிலான கட்டமைப்பை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும்.

## திறவுகோல் வசனம்:

**என் பிரியமான சகோதரரே, கேளுங்கள். தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்து கொள்ளவில்லையா? (யாக்கோபு 2:5)**

## அறிமுகம்

தேவ இராஜ்ஜியத்தின் கொள்கைகள் என்று நீங்கள் கற்றுக் கொள்கின்ற பாடத்தின் தொடர்ச்சியாக தேவ இராஜ்ஜியத்தின் கலாச்சாரத்தைக் குறித்து இவ்வதிகாரத்திலே கற்றுக் கொள்வீர்கள். இந்த ஆவிக்குரிய இராஜ்ஜியத்தின் விஷேசித்த கொள்கைகளை நீங்கள் கற்றுக் கொள்வதோடு, அது பொதுவான கொள்கையாக ஏழாம் அதிகாரத்திலும் உள்ளடக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டிருந்தது.

## குறிப்பான முரண்பாடுகள்: இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்

இப்போது நாம் ஏற்கனவே விவாதிக்கப்பட்ட தேவ இராஜ்ஜியத்தின் பொதுவான, விஷேசித்த கொள்கைகளைப்பற்றி கற்றுக் கொள்வோம். அநேகமாக இந்த முரண்பாடுகள் மத்தேயு 5-7 மற்றும் லூக்கா 6ஆம் அதிகாரத்திலும் காணப்படுகின்றது. உங்கள் ஆய்வுகளைத் தொடர முன்பாக இவ் வதிகாரங்களை வாசிக்கவும்.

இந்த பந்திகளை அவர் முதன்முதலில் இஸ்ரவேலின் மலைப்பிரதேசத்திலிருந்து கற்றுத்தந்தமை யால் இது 'மலை பிரசங்கம்' என அறியப்படுகின்ற இயேசுவின் முதல் போதனையின் ஒரு பகுதியாக இருக்கின்றது. இப்போதனைகள் பல குறிப்பிடத்தக்க இராஜ்ஜியத்தின் கொள்கைகளைக் கொண்டுள்ளது. பிரசங்கமானது ஒவ்வொரு வாழ்க்கை நிலைமையையும் மறைக்காமல், கொள்கைகளின் பிரதிநிதியாக காணப்படுகின்றது. அனைத்து சூழ்நிலைகளிலும் பொருத்தமான ஒழுக்கமான நடத்தையை நிலை நிறுத்த அவைகள் உதவுகின்றன.

மத்தேயு 5:1-12 வரையிலான பிரசங்கத்தின் முதல் பகுதி, தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டதும், 'பாக்கியவான்கள்' என்ற இராஜ்ஜியத்தின் அடிப்படை அணுகுமுறையை கையாளுகின்றது. வழக்கமாக பாக்கியவான்களாக இல்லாதிருப்போர் சமுதாயத்தில் மதிப்பாக நடத்தப்படமாட்டார்கள். இப்பந்தியில் பாவிக்கப்பட்டுள்ள 'பாக்கியவான்கள்' என்ற வார்த்தையின் அர்த்தம் தேவனால் அங்கீகரிக்கப்பட்டது என்பதாகும். ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதற்கும், மகிழ்ச்சியாயிருப்பதற்கும் வித்தியாசமுண்டு. ஆசீர்வ திக்கப்பட்டிருப்பது தேவனைப் பொருத்துள்ளது, அது சூழ்நிலைகளால் பாதிப்படையாது. ஆனால் மகிழ்ச்சியாயிருப்பது வாழ்வின் சூழ்நிலைகளில் தங்கியிருக்கின்றது.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் கலாச்சாரத்தில் காணப்படுகின்ற குறிப்பிடத்தக்க முரண்பாடுகள் இங்கே தரப்படுகின்றது.

## ஆவியில் எளிமையுள்ளோருக்கு இந்த இராஜ்ஜியம் உரித்துடையது:

> **ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு 5:3)**

பொருளாதாரம் உள்ளவர்களை உலகம் மதிக்கும். தேவனோ தரித்திரரை தெரிந்தெடுத்து விசுவாசத்தில் ஐசுவரியவான்களாக்கினார்.

> **என் பிரியமான சகோதரரே, கேளுங்கள் தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? (யாக்கோபு 2:5)**

> **அப்பொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கிப்பார்த்து: தரித்திரராகிய நீங்கள் பாக்கியவான்கள். தேவனுடைய ராஜ்யம் உங்களுடையது. (லூக்கா 6:20)**

## ஏழைகள் பணக்காரராயும், பணக்காரர் ஏழைகளுமாயிருப்பார்கள்:

உலகம் சுய நம்பிக்கை, சுய வெளிப்பாடு, சுய முன்னேற்றம் போன்றவற்றை வலியுறுத்துகிறது. ஆனால் தேவன் ஆவியில் எளிமையுள்ளவர்களுக்கும், தம்மை இரட்சிக்க திராணியில்லாதவர்களுக்கும், ஆவிக்குரிய தேவையுள்ளோருக்கும், அவர்களது பிரச்சனையை தீர்க்க உதவுகின்றார்.

> **ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு ஐயோ உங்கள் ஆறுதலை நீங்கள் அடைந்து தீர்ந்தது. (லூக்கா 6:24)**

## துக்கம் சந்தோஷத்தைக் கொண்டுவரும்:

இரண்டு விதமான துக்கமுண்டு. உலகத்தின் துக்கம் பாவத்தின் விளைவாக வருகின்றது. இது பாவத்தின் தண்டனையால் பாதிக்கப்பட்டமையால் வருகின்றது. ஆனால் இந்த துக்கம் வாழ்க்கையில் ஓர் மாற்றத்தைக் கொண்டுவராது. தேவனுக்கேற்ற துக்கம் செய்த பாவத்திற்காக ஏற்படுகின்றது. தேவனுக்கேற்ற துக்கம் மனந்திரும்புதலைக் கொண்டுவரும்.

**தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. (2 கொரிந்தியர் 7:10)**

தேவன் துக்கத்தை அங்கீகரிக்கின்றார். அதை அனுபவிக்கின்றபோது ஆறுதல் கிடைக்கும் என்கின்றார்.

**துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் ஆறுதலடைவார்கள். (மத்தேயு 5:4)**

**இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள், திருப்தியடைவீர்கள். இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள், இனி நகைப்பீர்கள். (லூக்கா 6:21)**

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும். நீங்கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். (யோவான் 16:20)**

இராஜ்ஜியத்தில் துயரப்படுகின்றவர்கள் ஆறுதலடைவார்கள், துக்கம் சந்தோஷத்தைக் கொண்டுவரும். உலகத்தின் அரசாட்சியில் இருப்போருக்கு சந்தோஷம் துக்கமாக மாறும்.

**திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ. பசியாயிருப்பீர்கள். இப்பொழுது நகைக்கிற உங்களுக்கு ஐயோ இனி துக்கப்பட்டு அழுவீர்கள். (லூக்கா 6:25)**

## சாந்த குணமுள்ளோர் ஜெயம் பெறுவர்:

சாந்தகுணம் பலவீனமோ அல்லது அகிம்சையோ அல்ல. சாந்தம் என்பது மென்மையாக நடந்து கொள்ளல், எளிதில் கோபமடையாத மென்மையான சுபாவமாகும். உலகத்தில் 'உங்கள் உரிமைக்காக உறுதியாக எதிர்த்து நில்லுங்கள்' என்று ஆலோசனை கொடுக்கும்.

அடக்கம் மாம்சீக மனிதனின் இயற்கையான குணமில்லை. இது இராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய கனி.

**ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,**

**சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலாத்தியர் 5:22-23)**

இக்குணாதிசயங்கள் இராஜ்ஜியத்தின் குடிகளிடத்தில் இருக்க வேண்டும். பரிசுத்தாவியானவரின் நிறைவைப் பெறும்போதே அதன் விளைவாக இக்கனி கிடைக்கின்றது. (சர்வதேச அறுவடை நேர பாடத்திட்டத்தின் 'பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்' என்ற இன்னுமொரு பாடத்தில் இவை விரிவாக விவாதிக்கப்படுகின்றது.)

சாதுவான மக்கள் வெற்றியாளர்கள் உலகத்தார் கருதுவதில்லை, ஆனால் தேவன் சாதுவானவர்களுக்காக மரபுரிமையை வாக்களிக்கின்றார்.

**சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். (மத்தேயு 5:5)**

## பசியுள்ளோர் திருப்தியடைவார்கள்:

உலக இராஜ்ஜியங்களில் உள்ள மக்கள் பல காரியங்களுக்காக பட்டினியோடு இருப்பர். அவர்கள் வல்லமை, செல்வம், வெற்றி, சந்தோஷத்திற்காக பசியோடிருப்பர். இராஜ்ஜியத்தின் குடிகள் உலகின் இக்காரியங்களுக்காக பசியோடிருப்பதில்லை. இராஜ்ஜியத்தின் அடிப்படை கொள்கைகளில் ஒன்றான நீதியையே தேடுவார்கள்.

**நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் திருப்தியடைவார்கள். (மத்தேயு 5:6)**

**இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள் திருப்தியடைவீர்கள். இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள். இனி நகைப்பீர்கள். (லூக்கா 6:21)**

சில விசுவாசிகள் தேவனுடைய 'ஆசீர்வாதங்களை' பெற்றுக் கொள்வதற்காக சமயகூட்டங்க ளுக்கு செல்கின்றனர். ஆனாலும் அவர்கள் ஒருபோதும் திருப்தியடைவதில்லை. இந்த இராஜ்ஜியத்தின் கொள்கையில், நீதிக்காக பசியுள்ளோர்கள் ஆவிக்குரிய விதத்தில் திருப்தியடைவார்கள் என்று இயேசு வெளிப்படுத்தியுள்ளார்.

நீங்கள் பௌதீக உலகில் பசியோடிருந்தால், உட்கார்ந்திருந்து உணவிற்காக காத்திருக்க மாட்டீர்கள். நீங்கள் உணவை பெறுவதற்காக அதை தயாரித்து பசியை போக்கிக் கொள்ள நடவடிக்கை எடுப்பீர்கள். ஆவிக்குரிய உலகில் பசியோடிருந்தால், உட்கார்ந்திருந்து தேவன் திருப்தியாக்குவார் என காத்திருக்க முடியாது. நீங்கள் அவரைத் தேடி, அவருடன் ஜெபத்தில் தொடர்பு கொண்டு, அவரது எழுதப்பட்ட வார்த்தையை வாசிக்க வேண்டும்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் பசி தீர்க்கப்படும். உலகின் அரசாட்சி பசியோடிருக்க விட்டுவிடும்.

**திருப்தியுள்ளவர்களாயிருக்கிற உங்களுக்கு ஐயோ பசியாயிருப்பீர்கள். (லூக்கா 6:25)**

## இரக்கமுள்ளோர் இரக்கம் பெறுவார்கள்:

உலகத்தின் கொள்கைகள், நீங்கள் மற்றவர்களுடன் மிக இரக்கமாயிருந்தால் உங்களை உதாசீனப் படுத்திவிடும். நீங்கள் அதிகமாக இரக்கத்தை காட்டினால், தமது பிரயோஜனத்திற்காக உங்களை பாவிப்பார்கள். இராஜ்ஜியத்தின் கொள்கைகள் இதற்கெதிரானது. நீங்கள் இரக்கம் காட்டும்போது இரக்கம் பெறுவீர்கள்.

**இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் இரக்கம் பெறுவார்கள். (மத்தேயு 5:7)**

### உள்நோக்கத்தைவிட வெளி நோக்கத்தையே வலியுறுத்தினார்.:

இயேசுவின் காலத்தில் வாழ்ந்த சமயத்தலைவர்கள் வெளிப்பிரகாரமான பாரம்பரியத்தையும், நியாயப் பிரமாணத்தையும் கைகொள்வதை உற்பிரகாரமான இருதயத்தின் மனோபாவத்தை பார்க்கிலும் மேலானதாக கருதினர். ஓய்வுநாளை கண்டிப்பாக கடைப்பிடித்தனர், தொடர்ச்சியாக உபவாசித்தனர், வெளி யரங்கமாக ஜெபித்தனர், ஏழைகளுக்கு தானம் பண்ணினார்கள்.

ஆனால் இயேசு கிறிஸ்து வெளியரங்கமான பலிகளைப் பார்க்கிலும் உள்ளான மனோபாவத்தையே கவனித்தார். அவர் கூறினார்:

> **இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். (மத்தேயு 5:8)**

வெளியரங்கரமான சமயசடங்காச்சாரங்களை தேவன் கவனிப்பதில்லை. இருதயத்தின் தூய்மையை கவனிக்கிறார்.

### புரட்சியை அல்ல அமைதி அவசியம்:

புரட்சிபண்ணி இராஜ்ஜியங்களை மாற்றுவது உலக வழக்கம். சமாதானம் பண்ணுகின்றவர்கள் தேவ-னுடைய இராஜ்ஜியத்தில் மாற்றத்தை கொண்டுவருவார்கள். இயேசு கூறினார்:

> **சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். (மத்தேயு 5:9)**

பிரச்சினைகளின்போது, யுத்தங்கள் இல்லாதபோது சமாதானம் ஓடிவிடும். ஆனால் இயேசு பேசிய சமா-தானம் இந்த சமாதானத்தை விட வித்தியாசமானது.

> **சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தை-யே உங்களுக்குக் கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. (யோவான் 14:27)**

உலக அமைதி அச்சமூட்டுவதாக இருக்கின்றது. அவர்கள் சமாதான ஒப்பந்தத்தை செய்கின்றார்கள். ஆனால் அவற்றை காத்துக்கொள்கின்றார்களா? விசுவாசிகளுக்கு அவர் பரிபூரணமான சமாதானத்தை வாக்குபண்ணியுள்ளார். உலகிலுள்ள எவ்விதமான குழப்பமான சூழ்நிலைகளிலும் அவர்களால் தேவ-னுடைய சமாதானத்தினிமித்தம் நிம்மதியாக வாழமுடியும்.

### உபத்திரவப்படுவோர் வெகுமதியை பெறுவர்:

விஷேடக்காரணங்களுக்காக நீதியின் பொருட்டு உபத்திரவப்படுவோர் ஆசீர்வாதம் பெறுவர் என இராஜ்ஜியத்தின் கொள்கை கூறுகின்றது.

**நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு 5:10)**

**மனுஷகுமாரன் நிமித்தமாக ஜனங்கள் உங்களைப் பகைத்து, உங்களைப் புறம்பாக்கி, உங்களை நிந்தித்து, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிவிடும்போது நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.**

**அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள். (லூக்கா 6:22-23)**

**எல்லா மனுஷரும் உங்களைக்குறித்துப் புகழ்ச்சியாய்ப் பேசும்போது உங்களுக்கு ஐயோ, அவர்கள் பிதாக்கள் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் அப்படியே செய்தார்கள். (லூக்கா 6:26)**

எல்லாப் பொதுவான பிரச்சினைகளின் மூலமும் ஆசீர்வாதம் கிடைப்பதில்லை. ஏனெனில் அவர்கள், அவர்களது சொந்த தவறுகளினாலேயே பாதிக்கப்படுகின்றனர்.

**நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும். (1 பேதுரு 2:20)**

பாவம் சில பிரச்சனைகளுக்கு காரணமாக அமைகின்றது:

**உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.**

**அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.**

**நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:14-16)**

## சிறியது பெரிதாயிருக்கும்:

உலகத்தில் பெருந்தன்மை மேன்மையுள்ளதாக இருக்கின்றது. மக்கள் வெற்றியையும், பிரசித்தத்தையும், பெரும் செல்வத்தையும், அதிகாரத்தையும் கொண்டிருக்கும்போது சாதித்துவிட்டோம் என கருதுகின்றனர். தேவனுடைய இராஜ்ஜியத்தில், இராஜ்ஜியத்தின் கொள்கைகளின்படி வாழ கற்றுக் கொண்டவர்கள் பெரியவர்களாயிருப்பார்கள். அவர்கள் உலகத்தின் இராஜ்ஜியம் குறைவானது என கருதுகின்றமையால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பெரியவர்களாயிருப்பார்கள்.

**ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான் இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான். (மத்தேயு 5:19)**

## தாழ்மையுள்ளோர் உயர்த்தப்படுவர்:

**தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்து கிறவன் உயர்த்தப்படுவான் என்றார். (லூக்கா 14:11)**

**தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். (மத்தேயு 23:12)**

## ஊழியர்களே தலைவர்கள்:

உலக இராஜ்ஜியங்கள் தலைவர்களை உயர்வாக மதித்து நடத்துகின்றன. அவர்கள் மேன்மையுள்ளவர்களாக கௌரவிக்கப்படுகின்றனர். அவர்கள் வேலைக்காரர் மீது சார்ந்திருந்து மற்றவர்களிலும் பார்க்க மேலான்மை கொண்ட வர்க்கம் என கருதுகின்றனர்.

தேவனுடைய இராஜ்ஜியத்தில் நீங்கள் வாழுவதற்கு வேலைக்காரராக வேண்டும்:

**அப்பொழுது, இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.**

**உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**

**உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.**

**அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். (மத்தேயு 20:25-28)**

**உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது. உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன். (லூக்கா 22:26)**

**உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**

**உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும்**

**ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மாற்கு 10:43-44)**

**உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மத்தேயு 23:11)**

## கடைசியானவன் முதன்மையாவான்:

உலக இராஜ்ஜியத்தில் முதன்மையாக இருக்கின்றவர்கள் தேவ இராஜ்ஜியத்தில் கடைசியாக இருப் பார்கள்.

**ஆகிலும், முந்தினோர் அநேகர் பிந்தினோராயும், பிந்தினோர் அநேகர் முந்தினோராயும் இருப்பார்கள் என்றார். (மத்தேயு 19:30)**

**இவ்விதமாக, பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள். அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார். (மத்தேயு 20:16)**

**அப்பொழுது முந்தினோர் பிந்தினோராவார்கள், பிந்தினோர் முந்தினோராவார்கள் என்றார். (லூக்கா 13:30)**

## சிறியது பெரிதாகும்:

இயேசு கிறிஸ்து இக்கொள்கையை விளங்கப்படுத்துவதற்காக கடுகுவிதை, புளித்தமா, விதவையின் சிறிய காணிக்கை போன்ற இயற்கையான உதாரணங்களை பாவித்தார்.

**வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கிறது. அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் நிலத்தில் விதைத்தான்.**

**அது சகல விதைகளிலும் சிறிதாயிருந்தும், வளரும்போது, சகல பூண்டுகளிலும் பெரிதாகி, ஆகாயத்துப் பறவைகள் அதின் கிளைகளில் வந்து அடையத்தக்க மரமாகும் என்றார்.**

**வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: பரலோகராஜ்யம் புளித்தமாவுக்கு ஒப்பாயிருக்கிறது அதை ஒரு ஸ்திரீ எடுத்து, முழுவதும் புளிக்கும் வரைக்கும், மூன்றுபடி மாவிலே அடக்கி வைத்தாள் என்றார். மத்தேயு 13:31-33, மாற்கு 4:30-32 ஐயும் வாசிக்கவும்.**

**அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப்பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார்.**

**ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங் களுக்குச் சொல்லுகிறேன்.**

**அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்துத் தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள். இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்த தெல்லாம் போட்டுவிட்டாள் என்றார். (லூக்கா 21:1-4)**

## மிக உயர்வாக மதிப்பவை கீழ்த்தரமாக மதிக்கப்படும்:

**அவர் அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷர்முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறீர்கள், தேவனோ உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனுஷருக்குள்ளே மேன்மையாக எண்ணப்படுகிறது தேவனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கிறது. (லூக்கா 16:15)**

## வயது வந்தோர் குழந்தைகளாக மாறுதல்:

தேவஇராஜ்ஜியத்தில் பெரியோர் குழந்தைகளைப்போலிருப்பார்கள். அவர்கள் இராஜ்ஜியத்தின் நற்செய்தியை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பதே இதன் அர்த்தம். எளிமையான விசுவாசம் அவர்களுடையது.

**அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து: பரலோகராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள்.**

**இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி:**

**நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிர வேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**ஆகையால் இந்தப் பிள்ளையைப்போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோகராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான். (மத்தேயு 18:1-4)**

**இயேசுவோ அவைகளைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டு: சிறு பிள்ளைகள் என் னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள், அவைகளைத் தடைபண்ணாதிருங்கள். தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.**

**எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (லூக்கா 18:16-17)**

## ஜீவனை விட்டவர்கள் அதை காத்துக் கொள்வார்கள்:

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். (யோவான் 12:24)**

**தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தமாகவும் சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக் கொள்ளுவான். (மாற்கு 8:35)**

**தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தம் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் காப்பான். (மத்தேயு 10:39)**

நீங்கள் இராஜாவை பின்பற்றும்படியாக உலக இன்பங்களையும், தராதரங்களையும் இழக்க வேண்டும்:

**அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.**

**தன் ஜீவனை ரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். (மத்தேயு 16:24-25)**

## ஜீவனை நேசியாமல் வெறுத்துவிடுதல்:

**தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான். இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான். (யோவான் 12:25)**

## கொடுங்கள் பெற்றுக் கொள்வீர்கள்:

**கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். (லூக்கா 6:38)**

## நடைபெற முடியாதது சாத்தியமாகும்:

**அதற்கு அவர்: மனுஷரால் கூடாதவைகள் தேவனால் கூடும் என்றார். (லூக்கா 18:27)**

**இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான். தேவனாலே எல்லாம் கூடும் என்றார் (மத்தேயு 19:26)**

**இயேசு அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான், தேவனால் இது கூடாததல்ல தேவனாலே எல்லாம் கூடும் என்றார். (மாற்கு 10:27)**

## குருடர் பார்வையடைவார்கள். பார்வையுள்ளோர் குருடராவார்கள்:

> **அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார். (யோவான் 9:39)**

ஆவிக்குரிய இருளில் தொலைந்துபோனவர்களுக்கு பார்வையை கொடுக்கவே இயேசு வந்தார். அவர்கள் மத பாரம்பரியங்களின் மூலம் ஆவிக்குரிய பார்வையை பெறலாம் என நினைத்தார்கள், உண்மையில் அவர்கள் குருடராகவே இருந்தனர்.

## நுகத்தடியை சுமக்கும் சுமையிலிருந்து ஓய்வெடுங்கள்:

ஒரு நுகத்தடியானது கலப்பையை இழுப்பதற்கு ஜோடியாக இரண்டு மாடுகளை இணைக்க பயன் படுத்தப்படும் ஒரு மரத்துண்டாக இருக்கின்றது. அது தொழிலாளரைப்பற்றி பேசுகிறது. ஏதாவதொன்றை சுமப்பதே சுமை எனப்படுகின்றது. அது பாரமானது. இயேசு சொன்னார்:

> **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**
>
> **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது, உங்கள் ஆத்துமாக் களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**
>
> **என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)**

உண்மையான இளைப்பாறுதலை கண்டுகொள்ளுங்கள்: இயேசுவோடு நுகத்தடியில் இணைந்திருந்தால் அவர் உங்கள் சுமையை சுமப்பார். இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் உலகமெங்கும் பரவ வேண்டும் என்பதே அவரது பாரமாக இருக்கின்றது.

## மண்ணுலக பொக்கிஷங்களைவிட பரலோக பொக்கிஷங்களையே வலியுறுத்தினார்:

> **பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்:**
>
> **பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடு கிறதும் இல்லை.**
>
> **உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும். (மத்தேயு 6:19-21)**

மண்ணுலக பொக்கிஷங்களை தேடுவோரை முட்டாளுடன் ஒப்பிட்டு இயேசு வலியுறுத்தினார்:

> **தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார். (லூக்கா 12:21)**

## பரலோகத்தை பார்க்கிலும் மண்ணுலக மகிமையை தேடுதல்:

> **சுயமாய்ப் பேசுகிறவன் தன் சுயமகிமையைத் தேடுகிறான், தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனோ உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதி யில்லை. (யோவான் 7:18)**

> **தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்? (யோவான் 5:44)**

> **இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணா யிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவனென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். (யோவான் 8:54)**

## சமாதானத்திற்கு பதிலாக பிரித்தலான முடிவுகள்:

இயேசுவே சமாதானம். அவர் மனுவுருவில் உலகத்திற்கு வந்தபோது பூமியில் சமாதானம் ஏற்பட்டது. ஆனால் இயேசு உலக இராஜ்ஜியங்களுக்குள் சமாதானத்துக்கு பதிலாக பிரிவினையை கொண்டு வந்தார். குடும்பங்கள், நகரங்கள், இராஜ்ஜியங்கள் என்பன அவரால் பிரிக்கப்பட்டது. சிலர் அவர் இராஜா என ஏற்று விசுவாசித்தார்கள். அவர்கள் ஆவிக்குரிய மறுபிறப்பினால் இராஜ்ஜியத்தின் குடிகளாக மாறினர். மற்றவர்கள் இயேசுவை இராஜாவாக ஏற்காதபடியால் அவர்கள் இராஜ்ஜியத்தின் பங்குதாராக வில்லை. அதன் பலனாக பிரிவினை ஏற்பட்டது:

> **நான் பூமியிலே சமாதானத்தை உண்டாக்கவந்தேன் என்று நினைக்கிறீர்களோ? சமாதானத்தையல்ல, பிரிவினையையே உண்டாக்கவந்தேன் என்று உங்களுக்குச் சொல்லு கிறேன்.**

> **எப்படியெனில், இதுமுதல் ஒரே வீட்டிலே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள், இரண்டுபேருக்கு விரோதமாய் மூன்றுபேரும், மூன்றுபேருக்கு விரோதமாய் இரண்டுபேரும் பிரிந்திருப்பார்கள்.**

> **தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும், தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும், மாமி மருமகளுக்கும் மருமகள் மாமிக்கும் விரோதமாய்ப் பிரிந்திருப்பார்கள் என்றார். (லூக்கா 12:51-53)**

> **ஒரு மனுஷனுக்குச் சத்துருக்கள் அவன் வீட்டாரே. (மத்தேயு 10:36)**

## மறைக்கப்பட்டவை வெளியரங்கமாகும்:

அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை.

> **நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள் காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம்பண்ணுங்கள். (மத்தேயு 10:26-27)**

## இராஜ்ஜியம் நீதிமான்களுக்கு பதிலாக பாவிகளால் பெருகுகின்றது:

> **பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள். நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். (மத்தேயு 9:13)**

## இயற்கையைவிட ஆவிக்குரியதை வலியுறுத்தினார்:

> **தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோமர் 14:17)**

> **தேவனுடைய ராஜ்யம் பேச்சிலேஅல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 4:20)**

## மேலதிக முரண்பாடுகள்:

தேவனுடைய இராஜ்ஜியத்திற்கும், உலகத்தின் இராஜ்ஜியத்திற்கும் இடையிலான முரண்பாட்டை பின்வரும் அட்டவணையை பயன்படுத்தி மேலதிகமாக படிக்கவும்.

| | |
|---|---|
| இரண்டு வழிகளும் இரண்டு வாசல்களும்: | மத்தேயு 7:13-14 |
| இரண்டு தீர்க்கதரிசிகள்: | மத்தேயு 7:15 |
| இரண்டு மரங்கள்: | மத்தேயு 7:17-20, லூக்கா 6:43-44 |
| இரண்டு விண்ணப்பங்கள்: | மத்தேயு 7:21-23 |
| இரண்டு வீடுகள்: | மத்தேயு 7:24-27, லூக்கா 6:46-49 |

## சுய பரீட்சை

1. திறவுகோல் வாக்கியத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................................................

.................................................................................................................................................................................

.................................................................................................................................................................................

2. ஒவ்வொரு வெற்றிடத்திலும் சரியான சொல்லை எழுதி வசனத்தை பூர்த்தியாக்கவும்:

**இராஜ்ஜியத்தின் விசேஷித்த கொள்கைகள்**

அ. ஏழைகள் .....................................................................................................

ஆ. துக்கம் ..................................................................................................... கொண்டு வரும்

இ. சாந்தகுணமுள்ளோர் .....................................................................................................

ஈ. பசியுள்ளோர் .....................................................................................................

உ. இரக்கமுள்ளோர் .....................................................................................................

ஊ. உள்நோக்கத்தைவிட .....................................................................................................
வலியுறுத்தினார்.:

எ. புரட்சி அல்ல .....................................................................................................

ஏ. உபத்திரவப்படுவோர் .....................................................................................................

ஐ. சிறியது .....................................................................................................

ஒ. தாழ்மையுள்ளோர் .....................................................................................................

ஓ. ஊழியர்களே .....................................................................................................

ஔ. கடைசியானவன் .....................................................................................................

க. சிறியது .....................................................................................................

கா. மிக உயர்வாக மதிப்பவை .....................................................................................................

கி. வயது வந்தோர் ..........................................................................................................

கீ. நீங்கள் ..........................................................................................................மரிக்க வேண்டும்

கு. நீங்கள் ஜீவனை விட்டால் ..........................................................................................................

கூ. நீங்கள் ஜீவனை நேசியாமல் ..........................................................................................................

கெ. நீங்கள் கொடுங்கள் ..........................................................................................................

கே. நடைபெற முடியாதது ..........................................................................................................

கை. குருடர் ..........................................................................................................

கொ. நுகத்தடியை சுமக்கும் சுமையிலிருந்து ..........................................................................................

கோ மண்ணுலக பொக்கிஷங்களைவிட .......................................................................................... பொக்கிஷங்களையே வலியுறுத்தினார்.

கௌ. பரலோகத்தை பார்க்கிலும் மண்ணுலக மகிமையை தேடுதல் ................................................ .................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு:

தேவனுடைய இராஜ்ஜியத்தின் முரண்பாட்டை பற்றி தொடர்ந்து 2 கொரிந்தியர் 6:8-10ஐ ஆய்வு செய்து அவற்றை பட்டியலிடுக.

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

# இராஜ்ஜியத்தின் கலாச்சாரம்

# இராஜ்ஜியத்தின் கொள்கைகள் - பகுதி 3

## நோக்கங்கள்:

இவ்வதிகாரத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால் முடியுமானவை:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்
- ☐ பழைய ஏற்பாட்டின் பிரமாணத்திற்கும், புதிய ஏற்பாட்டின் இராஜ்ஜியத்தின் கொள்கைகளுக்குமான உறவை விபரிக்கவும்,
- ☐ பழைய ஏற்பாட்டின் பிரமாணத்திலிருந்து, புதிய ஏற்பாட்டின் இராஜ்ஜியத்தின் கொள்கைகள் விரிவாக்கம் செய்யப்பட்டதை அடையாளம் காணவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**ஜனங்கள் அதை அறிந்து, அவர் பின்னே போனார்கள். அவர்களை அவர் ஏற்றுக் கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து அவர்களுடனே பேசி, சொஸ்தமடையவேண்டு மென்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார். (லூக்கா 9:11)**

## அறிமுகம்:

இந்த அதிகாரத்தில் பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் மற்றும் புதிய ஏற்பாட்டு கொள்கைகளுக்கிடையிலான தேவனுடைய இராஜ்ஜியத்தின் கலாச்சாரம் பற்றிய ஆய்வு தொடர்கின்றது.

## பழைய மற்றும் புதிய பொக்கிஷங்கள்

தேவனுடைய இராஜ்ஜியத்தின் பழைய மற்றும் புதிய கொள்கைகளை ஒப்பிட்டு இயேசு கிறிஸ்து ஒரு உதாரணத்தை தந்துள்ளார்.

**அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இப்படியிருக்கிறபடியால், பரலோகராஜ்யத்துக்கடுத்தவைகளில் உபதேசிக்கப்பட்டுத் தேறின வேதபாரகன் எவனும் தன் பொக்கிஷத்திலிருந்து புதியவைகளையும் பழையவைகளையும் எடுத்துக் கொடுக்கிற வீட்டெஜமானாகிய மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்றார். (மத்தேயு 13:52)**

பழைய மற்றும் புதிய இராஜ்ஜியத்தின் கொள்கைகள் இரண்டையும் இயேசு கற்றுக் கொடுத்தார். இயேசு அவைகளை 'பழைய மற்றும் புதிய பொக்கிஷங்கள்' என அழைத்தார். தேவன் மோசேக்கு கொடுத்த நியாயப்பிரமாணங்கள் யாவும் யாத்திராகமம், லேவியராகமம், உபாகமம் ஆகியவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது, இவைகள் இராஜ்ஜிய வாழ்வின் புதியவற்றின் அடித்தளமாக அமைந்துள்ளது. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்கள் வெளிப்புறமான சடங்காச்சார கிரியைகளில் விஷேமான அவ-

தானத்தை செலுத்தியது. இயேசுவால் போதிக்கப்பட்ட இராஜ்ஜியத்தின் புதிய கொள்கைகள் உள்ளான மனப்பான்மைகளைக்குறித்து அவதானம் செலுத்தியது.

இயேசுவின் போதனைகள் நியாயப்பிரமாணச் சட்டத்தை நீங்காமல் அதை பூர்த்தி செய்வதாக அமைந்தது.

> **நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்.**
>
> **வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறும-ளவும், அதில் ஒரு சிறுஎழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 5:17-18)**
>
> **அவர்களை நோக்கி: மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லிக் கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். (லூக்கா 24:44)**

இயேசு பழைய ஏற்பாட்டின் இராஜ்ஜியத்தின் கொள்கைகளையே விரிவாக்கம் செய்தார். அவர் பழைய கொள்கைகளை அகற்றவில்லை. வெளியரங்கமான சமய சடங்குகளை அவர்களிடமிருந்து அகற்றிவிட முடியாததின் பலனாக இராஜ்ஜியத்தின் உள்ளான சத்தியத்தின் போக்கு தவறவிடப்பட்டது.

இயேசுவின் போதனை பழைய ஏற்பாட்டுக்கு இணக்கமுடையதாக இருந்தது, ஆனால் அதற்கு சமயத்தலைவர்கள் இணங்கவில்லை. சதுசேயரும், வேதபாரகரும், தங்களுடைய சொந்த வியாக்கியாணங்களையும் பாரம்பரியங்களையும் தேவனுடைய நியாயப்பிரமாணத்துடன் சேர்த்துக் கொண்டனர். அவர்கள் 'பிராமணத்தை எழுதியிருக்கின்றபடியும்', அதாவது பிரமாணத்தின் சகல விபரங்களையும், அவர்களால் உருவாக்கப்பட்ட பாரம்பரியத்தின்படியும் புரிந்து கொள்ளுதலின்படியும் அவதானித்து செயற்படுத்தினர். பிரமாணத்தின் பொதுவான கொள்கைகளுக்கு அல்ல, இயேசு கிறிஸ்து 'ஆவியின் பிரமாணத்துக்கே' தனது அவதானத்தை செலுத்தினார்.

## பழையது புதியதை கொண்டிருக்க முடியாது

இயேசு கிறிஸ்து கற்றுக் கொடுத்த இந்த இராஜ்ஜியத்தின் கொள்கைகளுக்குள் பழைய மத அமைப்புகள் உள்ளடக்கப்படவில்லை. இதை இயேசு இரண்டு உவமைகளின் மூலம் விபரித்தார். அவர் பழைய புதிய ஆடைகளைக் குறித்து பேசினார்:

> **ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடே இணைக்கமாட்டான். இணைத்-தால், அதினோடே இணைத்ததுண்டு வஸ்திரத்தை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதி-கமாகும். (மத்தேயு 9:16)**
>
> **ஒருவனும் கோடித்துண்டைப் பழைய வஸ்திரத்தோடு இணைக்கமாட்டான், இணைத்-தால், அதினோடே இணைத்த புதியதுண்டு பழையதை அதிகமாய்க் கிழிக்கும், பீறலும் அதிகமாகும். (மாற்கு 2:21)**

**அவர்களுக்கு ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவனும் புதிய வஸ்திரத்துண்டைப் பழைய வஸ்திரத்தின்மேல் போட்டு இணைக்கமாட்டான், இணைத்தால் புதியது பழையதைக் கிழிக்கும். புதியவஸ்திரத்துண்டு பழைய வஸ்திரத்துக்கு ஒவ்வாது. (லூக்கா 5:36)**

அவர் பழைய மற்றும் புதிய திராட்சரசத்தைக் குறித்து பேசினார்:

**புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கிறதும் இல்லை. வார்த்து வைத்தால், துருத்திகள் கிழிந்துபோம், இரசமும் சிந்திப்போம், துருத்திகளும் கெட் டுப்போம். புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைப்பார்கள், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும் என்றார். (மத்தேயு 9:17)**

**ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான். வார்த்து வைத்தால், புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திக ளும் கெட்டுப்போம். புதுரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும் என்றார். (மாற்கு 9:22)**

**ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்துருத்திகளில் வார்த்துவைக்கமாட்டான். வார்த்து வைத்தால் புதுரசம் துருத்திகளைக் கிழித்துப்போடும், இரசமும் சிந்திப்போம், துருத்திக-ளும் கெட்டுப்போம்.**

**புது ரசத்தைப் புது துருத்திகளில் வார்த்துவைக்கவேண்டும், அப்பொழுது இரண்டும் பத்திரப்பட்டிருக்கும்.**

**அன்றியும் ஒருவனும் பழைய ரசத்தைக் குடித்தவுடனே புது ரசத்தை விரும்பமாட்டான், பழைய ரசமே நல்லதென்று சொல்லுவான் என்றார். (லூக்கா 5:37-39)**

பழைய மத அமைப்புகள் 'புதிய திராட்சை ரசமான' இராஜ்ஜியத்தின் கொள்கைகளை உள்ளடக்க வில்லை. புதிய திராட்சைரசம் புதிய பாத்திரங்களிலேயே ஊற்றப்படும். இதனாலேயே இராஜ்ஜி யத்திற்குள் பிரவேசிக்க ஆவிக்குரிய புதிய பிறப்பு அவசியமாகிறது. 'பழையது நல்லது' என அனுபவம் கொண்ட அவர்கள் சொல்வதால், இந்த பழையசமய கட்டமைப்பை மாற்றியமைக்க நேரம் கொடுப்பது அவசியம்.

இயேசு பழைய மத அமைப்பை அழிக்கவில்லை. அதை அவர் பாதுகாக்க அனுமதியளிக்கின்ற அதே வேளையில், ஆண்களும் பெண்களும் கிறிஸ்து இயேசுவின் புதிய பிறப்பை அதாவது 'புதிய திராட்ச ரசத்தை' ஆவிக்குரிய தங்களது பாத்திரங்களில் ஊற்றிக் கொள்ள வேண்டும். அவர் பழையதை, புதி-தாக மாற்ற நேரம் கொடுத்தார்.

மதங்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற சமுதாயங்களில், இந்த இராஜ்ஜியத்தின் நற்செய்தியை அறி-முகஞ்செய்வது மிக முக்கியமான காரியமாக இருக்கின்றது. 'புதிய திராட்சரத்தை' புதிய பாத்திரங்க-ளில் ஊற்றுவதற்கு அவதானம் செலுத்தி, பாரம்பரிய மத அமைப்புகளை அகற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். பழையதை அகற்றிவிட்டு ஆண்களும் பெண்களும் 'புதிய திராட்சரசத்தை' கண்டு பிடிக்க வேண்டும்.

## அடையாளப்படுத்தும் மாதிரி

'பழைய புதிய பொக்கிஷங்களை' சுவிசேஷங்களுக்கூடாக பின்வரும் முறைகளில் உங்களால் அடையாளப்படுத்த முடியும்.

1. 'சொல்லப்பட்டிருக்கிறதே', 'எழுதப்பட்டபடி' அல்லது 'நீங்கள் வாசிக்கவில்லையா?' என்று உவ-மானப்படுத்தி இயேசு இதை அறிமுகப்படுத்தி கற்பிக்கின்றார்.

2. பழைய ஏற்பாட்டில் பிரமாணம் கூறப்பட்டுள்ளது.

3. 'ஆனாலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது' என்று இயேசு சேர்த்துக் கொண்டார்.

4. புதிய ஏற்பாட்டின் இராஜ்ஜியத்தின் கொள்கைகள் யாவும் பழைய ஏற்பாட்டின் பிரமாணத்தின் விரிவாக்கமாக கூறப்படுகின்றது.

## இராஜ்ஜியத்தின் பொக்கிஷங்கள்

பின்வரும் அட்டவணை 'பழையதும் புதியதுமான பொக்கிஷங்களின்' சுருக்கமாக இருக்கின்றது. இராஜ்ஜியத்தைப்பற்றி இயேசுவால் இது வெளிப்படுத்தப்பட்டவையாகும். இராஜ்ஜியத்தின் கொள்கை களைக் குறித்த ஒவ்வொரு ஆய்வு குறிப்புகளை கவனியுங்கள்.

| | **பழைய பொக்கிஷம்**<br>**'சொல்லப்பட்டுள்ளபடி'** | **புதிய பொக்கிஷம்**<br>**'நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்'** |
|---|---|---|
| மத்தேயு<br>5:21-26 | கொலை செய்யாதிருப்பாயாக | காரணம் இல்லாமல் கோபம் கொள்வது இதற்கு சமமானது. |
| மத்தேயு<br>5:23-24<br>6:1-8<br>23:14,23-27<br>மாற்கு<br>7:6-8<br>11:25-26<br>லூக்கா<br>18:10-14 | ஆராதனையில் வெளியரங்கமான கிரியையில் தங்கியிருப்பது | ஆராதனையில் உள்நோக்கிய மனப்பான்மையை தங்கியிருப்பது |
| மத்தேயு<br>5:27-32 | விபச்சாரம் செய்யாதிருப்பாயாக | எண்ணமும் அதே கிரியையை கொண்டது |
| மத்தேயு<br>5:33-37<br>23:16-22 | உன்மேலும் சத்தியம் பண்ணவேண்டாம். | எதன்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம். |

| | | |
|---|---|---|
| மத்தேயு 5:38-42 | தீமைக்கு தீமை செய் | தீமைக்கு நன்மை செய் |
| மத்தேயு 5:43-47 லூக்கா 6:27-35 | அயலாளரை நேசி | சத்துருவை சிநேகி |
| மத்தேயு 15:3-9 மாற்கு 7:7-13 | பரிசுத்தம் மனிதனுடைய பாரம்பரியத்தை காத்துக் கொள்வதால் வருகிறது | பரிசுத்தம் தேவனுடைய கற்பனைகளை காத்துக் கொள்வதால் வருகிறது |
| மத்தேயு 12:3-14 மாற்கு 2:23-28 3:1-6 லூக்கா 6:1-11 யோவான் 5:1-47 | ஓய்வுநாளை மனிதன் உருவாக்கினான், சட்டத்தின்படி யாவற்றையும் அவன் கைகொள்ள வேண்டும். | ஓய்வுநாள் மனிதனுக்காக உருவாக்கப்பட்டது |
| மத்தேயு 15:10-20 மாற்கு 7:14-23 | வெளிப்புற பரிசுத்தத்தை வலியுறுத்துகின்றது | உள்புற பரிசுத்தத்தை வலியுறுத்துகின்றது. |
| மத்தேயு 5: 31-32 19:1-9 மாற்கு 10:2-12 | எந்தவொரு காரணத்தினாலும் விவாகரத்து செய்யலாம். | விவாகரத்து தேவனுடைய திட்டத்தில் இருக்கவில்லை, ஆனால் விவாகரத்திற்கு வரையறுக்கப்பட்ட காரணம் இருக்கின்றது. |

நீங்கள் கற்றுக் கொண்ட ஆய்வு பட்டியலில் 'பழைய மற்றும் புதிய பொக்கிஷங்கள்' யாவும் அடக்கப் படவில்லை. ஆனால் இது நீங்கள் கற்றுக் கொள்வதற்காகவும், ஆய்வை தொடர்வதற்காகவும், சொந்த மாதிரியை உருவாக்கிக் கொள்வதற்காகவும் கவனம் செலுத்துகின்றது.

இந்த மாதிரிகளை சுவிசேஷங்களை (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) வாசித்து கவனிக்கவும். இந்த அத்தியாயத்திலுள்ள 'மேலதிக படிப்பினைக்கு' என்ற பகுதியிலுள்ள இராஜ்ஜியத்தின் பழைய மற்றும் புதிய பொக்கிஷங்களைப்பற்றிய பட்டியலை பயன்படுத்தவும்.

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

.................................................................................................................................................................

.................................................................................................................................................................

2. பழையதை விபரிக்கும் பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாண அறிக்கைக்கு முன்பதாகவுள்ள கோடிட்ட இடத்தில் 'பழையது' என எழுதவும். புதியதை விபரிக்கும் புதிய ஏற்பாட்டு இராஜ்ஜியத்தின் கொள்கை அறிக்கைக்கு முன்பதாகவுள்ள கோடிட்ட இடத்தில் 'புதியது' என எழுதவும்.

அ. ................. உள்நோக்கிய மனப்பான்மைக்கு அதிகமான அவதானம் செலுத்துகிறது.

ஆ. ................. வெளிநோக்கிய கிரியைகளுக்கு அதிகமான அவதானம் செலுத்துகிறது.

இ. ................. அதிகமாக குறிப்பிடத்தக்கது.

ஈ. ................. அதிகமாக உள்ளடக்கியது.

உ. ................. நியாயப்பிரமாணத்தின் எழுத்து.

ஊ. ................. ஆவியின் பிரமாணம்.

எ. ................. கொலை செய்யாதிருப்பாயாக.

ஏ. ................. காரணமில்லாமல் கோபம் கொள்ளாதே.

ஐ. ................. எதன்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம்.

ஒ. ................. உன்மேலும் சத்தியம் பண்ணவேண்டாம்.

ஓ. ................. தீமைக்கு நன்மை செய்.

ஔ. ................. தீமைக்கு தீமை செய்.

க. ................. அயலாளரை நேசி.

கா. ................. சத்துருவை சிநேகி.

கி. ................. ஆராதனை உள்நோக்கிய மனப்பான்மையை பொறுத்தது.

கீ. ................. ஆராதனை வெளிநோக்கிய கிரியையை பொறுத்தது.

கு. ................. ஓய்வுநாள் மனிதனுக்காக உருவாக்கப்பட்டது.

கூ. ................. ஓய்வுநாளை மனிதன் உருவாக்கினான்.

கெ. ................. பரிசுத்தம் மனிதனுடைய பாரம்பரியத்தை காத்துக் கொள்கின்றது.

கே. ................. பரிசுத்தம் தேவனுடைய கற்பனைகளை காத்துக் கொள்கின்றது.

கை. ................. வெளிப்புற பரிசுத்தத்தை வலியுறுத்துகின்றது.

கொ. ................. உள்புற பரிசுத்தத்தை வலியுறுத்துகின்றது.

கோ. ................. விவாகரத்திற்கு வரையறுக்கப்பட்ட காரணம் இருக்கின்றது.

கௌ. ................. எந்தவொரு காரணத்தினாலும் விவாகரத்து செய்யலாம்.

3. சரியான விடைக்கு வட்டமிட்டு பின்வரும் வசனத்தை பூர்த்தி செய்யவும்:

இயேசு உலகத்திற்கு ...................................................................................................... வந்தார்

அ. பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை அழிக்க

ஆ. பழைய ஏற்பாட்டு பிரமாணத்தை நிறைவேற்ற

4. இராஜ்ஜியத்தின் கொள்கைகளில் பழைய ஏற்பாட்டுக்கும் புதிய ஏற்பாட்டுக்கும் இடையிலான உறவு என்ன?

..........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. யோவான் புத்தகத்தில் இராஜ்ஜியத்தைக் குறித்து அநேகமான நேரடியான வசனங்கள் இல்லா-திருக்கின்றபோதும், இருக்கின்ற சில வசனங்கள் மிகவும் முக்கியமானவை.

   யோவான் 1:45-49: நாத்தான்வேல் இயேசுவை இராஜாவாக அறிந்து கொண்டான் மட்டுமின்றி பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாகவும் இது இருக்கின்றது.

   யோவான் மூன்றாம் அதிகாரம்: தேவனுடைய இராஜ்ஜியத்தைக் எவ்வாறு சுதந்தரித்துக் கொள்ளலாம் என்பதை விளக்கும் இவ்வதிகாரங்கள் மிகவும் முக்கியமானதாகும்.

   யோவான் 18:36 இது இராஜ்ஜியத்தைக் குறித்ததான மிக முக்கியமான வசனமாகும். தேவனுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியது அல்ல என்ற கொள்கையை நிறுவுகின்றது.

2. 'பழைய மற்றும் புதிய பொக்கிஷங்களைக்' குறித்து மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புத்தகங்களில் கற்கவும். பின்வரும் அட்டவணையில் உங்கள் கண்டு பிடிப்புகளை பதிவு செய்யவும்.

| **பழைய பொக்கிஷம்**<br>**'சொல்லப்பட்டுள்ளபடி'** | **புதிய பொக்கிஷம்**<br>**'நான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்'** |
|---|---|

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

**அதிகாரம் பத்து**

# இராஜ்ஜியத்தின் உவமைகள்

## நோக்கங்கள்:

இவ்வதிகாரத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ உவமை என்னும் வார்த்தையை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ இராஜ்ஜியத்தின் கொள்கைகளை போதிப்பதற்கு இயேசு ஏன் உவமைகளை உபயோகப் படுத்தினார் என்பதை விபரிக்கவும்,
- ☐ இயேசுவினுடைய உவமையின் முக்கிய கருத்தை இனங்காணவும்,
- ☐ இராஜ்ஜிய கொள்கைகளை படிப்பதற்கு இயேசுவினுடைய உவமைகளை கற்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. (மத்தேயு 13:11)**

## அறிமுகம்

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வாழ்க்கையில் அடிப்படை கொள்கை ஆளுகின்றது என முன்னைய அதிகாரத்தில் நீங்கள் கற்றீர்கள். இயேசுவின் பூலோக ஊழியத்தில், இராஜ்ஜியத்தின் மற்றைய ஆவிக்குரிய உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு 'உவமை' என்னும் நுட்பமான போதனை முறையை உபயோகித்தார்.

இந்த அதிகாரத்தில் உவமை என்றால் என்ன என்பதையும், இயேசு இராஜ்ஜியத்தின் கொள்கைகளை போதிப்பதற்கு அவைகளை ஏன் பயன்படுத்தினார் என்பதையும் நீங்கள் கற்பீர்கள். இராஜ்ஜியத்தின் கொள்கைகளை படிப்பதற்கு தெரிவு செய்யப்பட்ட உவமைகளையும் நீங்கள் கற்பீர்கள்.

## உவமை என்றால் என்ன?

உவமை என்பது ஆவிக்குரிய உண்மைகளை வெளிக்காட்டுவதற்கு இயற்கையான உலகத்திலிருந்து எடுக்கப்பட்ட உதாரணத்தின் கதை ஆகும். 'உவமை' என்னுடைய வார்த்தையின் உண்மையான அர்த்தமானது 'பின்னணியிலுள்ளதை தொடர்புபடுத்தி வெளிக்காட்டுவதாகும்,' உவமையில், ஆவிக்குரிய உண்மைகளை ஒப்பீடு செய்வதோடு, இயற்கையான உதாரணங்களை அதற்கு உபயோகித்தார். உவமை என்பது பரலோக அர்த்தத்தோடுள்ள பூலோக கதைகளாகும். இயற்கை என்பது உங்கள் புலன்களால் நீங்கள் அறியக்கூடியவைகளாகும். நீங்கள் பார்த்து, கேட்டு, அதை தொட முடியும். அதே போல் ஆவிக்குரியவைகளையும் ஆவிக்குரிய புலன்கலால் மட்டுமே அறியக்கூடியவைகளாக இருக்கும்.

## உவமை என்பதின் பொருள்

இயேசுவினுடைய உவமையின் முக்கிய பொருள் தேவனுடைய இராஜ்ஜியம் ஆகும். இந்த சில உவமைகளை சொல்லுவதற்கு முன்னர் இயேசு இதை முக்கிய பொருளாக சுட்டிக்காட்டினார்:

> **பின்னும் அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யத்தை எதற்கு ஒப்பிடுவோம்? அல்லது எந்த உவமையினாலே அதைத் திருஷ்டாந்தப்படுத்துவோம்? (மாற்கு 4:30)**

> **அவர் அவர்களை நோக்கி: தேவனுடைய ராஜ்யம் எதற்கொப்பாயிருக்கிறது? அதை எதற்கு ஒப்பிடுவேன்? (லூக்கா 13:18)**

> **மேலும் அவர்: தேவனுடைய ராஜ்யத்தை நான் எதற்கு ஒப்பிடுவேன்? (லூக்கா 13:20)**

உவமைகளானது நேரடியான வார்த்தைகளினால் அறிமுகம் செய்யப்படாவிடினும், அதன் பொருளானது இன்னும் தேவனுடைய இராஜ்ஜியமாகவே இருக்கின்றது. இயேசுவால் கூறப்பட்ட அனைத்து உவமைகளும் இராஜ்ஜியத்தோடு ஏதேனும் வழிகளில் தொடர்புடையதாகவே இருக்கும்.

## உவமைகள் ஏன்?

தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு இயேசு ஏன் இந்த நுட்பமான உவமை போதனை முறைகளை தெரிவு செய்தார்? சீஷர்களுடைய இதே கேள்வியை கேட்டனர்:

> **அப்பொழுது, சீஷர்கள் அவரிடத்தில் வந்து: ஏன் அவர்களோடே உவமைகளாகப் பேசுகிறீர் என்று கேட்டார்கள். (மத்தேயு 13:10)**

இயேசு பதிலளித்தார்:

> **அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. (மத்தேயு 13:11, லூக்கா 8:10ஐயும் பார்க்கவும்)**

இராஜ்ஜியத்தின் ஆவிக்குரியவைகளின் உண்மைகளின் அறிவு சீஷர்களுக்கு ஆவிக்குரிய மனநிலையால் இருந்தபடியால் கொடுக்கப்பட்டன. ஆவிக்குரிய மனநிலைகளை அற்றவர்கள் உவமைகளை கேட்டு அதை விளங்கிக்கொள்ளவில்லை, ஏனென்றால் ஆவிக்குரிய உண்மைகள் ஆவிக்குரிய மனநிலையோடு உள்ளவர்களால் தான் விளங்கிக்கொள்ளமுடியும்:

> **ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1 கொரிந்தியர் 2:14)**

ஆவிக்குரிய மனநிலையில் உள்ளவர்கள் உவமைகளில் வெளிப்படுத்தப்பட்ட இராஜ்ஜியத்தின் கொள்கைகளை விளங்கிக்கொண்டனர். தீய மற்றும் பாவ சிந்தை உள்ளவர்களால் அவைகளை விளங்கிக்கொள்ள முடியாது. அவிசுவாசிகளிடமிருந்து இந்த மாபெரும் ஆவிக்குரிய கொள்கைகளை மறைப்பதற்கு இயேசு உவமைகளை உபயோகித்தார்:

> **அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார். (மாற்கு 4:12)**

('ஆவிக்குரிய சிந்தையை'யுள்ள மனிதன் என்பவன் இக்கையேட்டின் நான்காம் அதிகாரத்தில் விபரிக்கப்பட்டுள்ளப்படி ஆவியில் மறுடிபயும் பிறந்தவர் ஆவார்)

## இராஜ்ஜியத்தின் உவமைகள்

இயேசுவினால் சொல்லப்பட்ட அனைத்து உவமைகளும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பல்வேறுப்பட்ட சத்தியங்களை வெளிப்படுத்துகின்றது. ஒவ்வொன்றினாலும் போதிக்கப்பட்ட பொருள், வசனங்கள், ஆவிக்குரிய உண்மைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. உங்களுடைய வேதாகமத்தில் ஒவ்வொரு வசனங்களையும் பார்த்து, உவமைகளை வாசியுங்கள்.

### இராஜ்ஜியத்தின் தன்மைகளை வெளிப்படுத்தும் உவமைகள்:

இயேசுவினால் கூறப்பட்ட தேவனுடைய இராஜ்ஜியத்தின் தன்மைகளை வெளிப்படுத்தும் உவமைகள் கீழ்வருமாறு.

**பழைய வஸ்திரம்:** மத்தேயு 9:16; மாற்கு 2:21; லூக்கா 5:36
**பழந்துருத்தி:** மத்தேயு 9:17; மாற்கு 2:22; லூக்கா 5:37

இயேசுவால் அளிக்கப்பட்ட இராஜ்ஜியமானது புதியதானதும் ஒப்பற்றதானதுமென இவ்விரு உவமைகளும் போதிக்கின்றது. இது பழைய மாதிரிகளின் மற்றும் சமய கலாச்சாரங்களில் எல்லைக்குட்பட்டதல்ல. பழைய மாதிரிகளின் எண்ணங்கள் மற்றும் வாழ்க்கை நடத்தைகளை தொடர்புபடுத்தி தேவனுடைய இராஜ்ஜியத்தை அறிய முயலுதல் முடியுமாக காரியமல்ல.

**நல்ல மேய்ப்பன்:** யோவான் 10:1-16

இயேசு ராஜா மேய்ப்பருக்கு ஒப்பிடப்பட்டுள்ளார். அது அவருடைய மந்தைகளை சமய எல்லைகளுக்கு அப்பால் மேய்த்து, அவருடைய இராஜ்ஜியத்தில் சுதந்திரவாளியாகுவதற்கு கொண்டு வரும். அவருடைய மந்தைகள் அவருடைய சத்தத்தை அறிந்து அவருடைய இராஜ்ஜியத்தின் தன்மைகளுக்கு செவி கொடுக்கும்.

**சிதறிப்போன ஆடு:** மத்தேயு 18:12-14; லூக்கா 15:4-7
**காணாமற்போன காசு:** லூக்கா 15:8-10
**காணாமற்போன மகன்:** லூக்கா 15:11-32

இந்த உவமைகளானது இராஜ்ஜியத்திற்காக காணாமற்போன ஆட்டை ஒரு தந்தை பார்க்கின்றார் எனவும், அவருடைய சீஷர்கள் காணாமற்போனவற்றை எவ்வாறு பார்க்கவேண்டும் எனவும், மனந்திரும்பு-தல் ராஜ்ஜியத்தின் குடிமகனாக மாறுவதற்கான திறவுகோல் எனவும் காட்டுகின்றது.

**கலியாண விருந்து:** மத்தேயு 22:1-14
**பெரிய விருந்து:** லூக்கா 14:16-24

இந்த உவமைகள் மூலம், இயேசு தற்போதுள்ள பரம்பரையை இராஜ்ஜியத்தில் சமூகமளிக்கும்படி அழைக்கின்றார். உண்மையான அழைப்பானது இஸ்ரவேல் ராஜ்ஜியத்தின் விசேட குழு மக்களிடையே அனுப்பப்பட்டது. தெரிவுசெய்யப்பட்டவர்களிடத்திலிருந்து பிரதியுத்தரவு வரவில்லை, ஆகவே மேலுமொரு அழைப்பானது புறஜாதி இராஜ்ஜியத்தினிடையே விரிவாக்கப்பட்டது.

**கட்டிடம் கட்டின இரண்டு பேர்:** மத்தேயு 7:24-27

இந்த உவமையில் இயேசு தன்னில் இராஜ்ஜியமானது கட்டப்பட்டுள்ளது என போதித்தார். அவர் ஒரு நபர் தமது வாழ்க்கையை தன்மீது கட்டப்படும் போது தன்னை ஓர் கற்பாறைக்கு ஒப்பிட்டார். பாது காப்பான அஸ்திபாரத்தில் கட்டப்படும் இவ்வாறான ஓர் வீடானது புயற்காற்றிலும் நிற்கும். இயேசு மனிதர்களையும் மனுஷிகளையும் அவர்களுடைய வாழ்க்கையை தேவனுடைய இராஜ்ஜியத்தில் நித்தியமாக கட்டப்படுவதற்கு ஓர் வாய்ப்பை கொடுத்தார்.

**இரண்டு வாசல்வழிகள்:** மத்தேயு 7:13-14; லூக்கா 13:24-28

ஒரு வாசல் மாத்திரமே இராஜ்ஜியத்திற்கு வழிநடத்தும். அந்த வாசல் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே.

## இயேசுவின் புறந்தள்ளுதலை வெளிப்படுத்தும் உவமைகள்:

**கொலைக்காரர்களாகிய தோட்டக்காரர்கள்:** மத்தேயு 21:33-44; மாற்கு 12:1-11; லூக்கா 20:9-18

இஸ்ரவேல் ஜாதியானது தன்னை மேசியாவும் ராஜாவாகவுமாகவும் ஏற்காமல் புறந்தள்ளும் என்பதை வெளிப்படுத்துவதற்கு இயேசு உவமைகளை உபயோகித்தார். இந்த காரியமானது கொலைக்காரர்களா-கிய தோட்டகாரர்களின் உவமைகளின் மூலம் காட்டப்பட்டுள்ளது. ராஜ்ஜியத்தின் சுதந்திரவாளியாவ-தற்கு தேவன் தீர்க்கதரிசிகளை பூமிக்கு அனுப்பினார், ஆனால் இஸ்ரவேலர்கள் தீர்க்கதரிசிகளை கொலைசெய்தனர். பின் தேவன் தனது சொந்த மகனை அனுப்பினார். அவர் கூட புறந்தள்ளப்பட்டு கொலைசெய்யப்பட்டார்.

**பலனளிக்காத அத்தி மரம்:** லூக்கா 13:6-9

இயேசு பலனளிக்காத அத்தி மரம் குறித்தான உவமையை கூறினார். அத்திமரமானது இஸ்ரவேல் இராஜ்ஜியத்தின் இயற்கையான அடையாளமாகும். உலகத்திற்கு இராஜ்ஜியத்தை வெளிப்படுத்தும் பொருட்டு தேவன் இஸ்ரவேல் ஜாதியை உயர்த்தினார். நேரத்திற்கு நேரம் மீண்டும் தேவன் இஸ்ரவேல் ‘மரத்திலிருந்து’ புறஜாதியினருக்கு உண்மையான தேவனைப்பற்றிய அவர்களுடைய அறிவை பகிரும் ‘கனி’யை பெற முயற்சித்தார், ஆனால் இஸ்ரவேல் பலனளிக்காத கனிகொடாதவர்களாயினர்...

**கலியாணம்:** மத்தேயு 22:2-14

இயேசு தன்னுடைய புறந்தள்ளுதலை வெளிப்படுத்துவதற்கு கலியாணம் என்னும் உவமையை உபயோகித்தார். கலியாணத்திற்கு அழைப்பதற்கு சேவையாட்கள் அனுப்பப்பட்டார்கள் ஆனால் மக்கள் சேவையாட்களை கொன்று அழைப்பை நிராகரித்தார்கள். இராஜ்ஜியமானது எவ்விதத்தில் புறந்தள்ளப் படும் என்பதை இது வெளிப்படுத்துகின்றது.

## இராஜ்ஜயத்தின் தள்ளிப்போகுதலை வெளிப்படுத்தும் உவமைகள்:

**தாலந்து:** மத்தேயு 25:14-30; லூக்கா 19:11-27
**தூரபிரயாணம்செய்த மனிதன்:** மாற்கு 13:34-37
**வேலைக்காரர்:** மத்தேயு 24:43-51; லூக்கா 12:39-46
**காத்திருக்கிற மனுஷன்:** லூக்கா 12:36-38

எதிர்காலத்தில் இறுதியாக உருவாகி நிறுவப்படப்போகும் தேவனுடைய இராஜ்ஜியத்தை வெளிப்படுத்துவதற்கு இயேசு அநேக உவமைகளை கூறினார். இஸ்ரவேல் இயேசுவை இராஜாவாக புறந்தள்ளிய படியால் இராஜ்ஜியமானது தற்காலத்தில் வரப்படமாட்டாது. இந்த உவமைகளானது இராஜ்ஜியமானது இறுதியாக நிறுவப்படும் வரை இயேசு இல்லாமல் இருப்பார் என்பதை வெளிப்படுத்துகின்றது. அவைகள் அவரை பின்பற்றுவோரை அவர்களுக்கு கொடுக்கப்பட்டதான உத்தரவாதத்தை விசுவாசத்தோடு நிறைவேற்றவும், அவர்களுடைய தாலந்தை உபயோகப்படுத்தவும், தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவாக்குதலுக்கான இயலுமையையும் மேற்கொள்ள செய்கின்றது.

**அத்தி மரம்:** மத்தேயு 24:32-34; மாற்கு 13:28-30; லூக்கா 21:29-32

தேவனுடைய இராஜ்ஜியத்தின் இறுதியான நிறுவப்படுதலுக்கான குறிப்பிட்ட நேரத்தை வெளிப்படுத்துவற்காக அத்தி மரத்தைக்குறித்தான உவமையை இயேசு கூறினார். அவர் கூறினார் ஒருவர் அத்தி மரமானது தளிர்க்கின்றதை காணும் போது வசந்தகாலம் சமீபமாயிருக்கின்றது என்பதை அறிய முடியும். முன்னர் குறிப்பிட்டதை போல, அத்திமரமானது இஸ்ரவேல் ஜாதியை குறிக்கும் ஓர் இயற்கையான உதாரணமாகும். இஸ்ரவேலானது அதன் சொந்த நிலத்தில் மீள் நிறுவப்பட்டு மீண்டும் ஜாதியாக துளிர்க்கின்றபோது, இராஜாவுக்கான திரும்புதலின் நேரம் அருகிலானது என்பதை இயேசு வெளிப்படுத்துகின்றார். (இந்த சம்பவம் ஏற்கனவே நடைபெற்று விட்டது. இஸ்ரவேலானது அதனது சொந்த தேசத்தில் ஜாதியாக மீளமைக்கப்பட்டுவிட்டது!)

## இராஜ்ஜியத்தினுடைய வளர்ச்சியை வெளிப்படுத்தும் உவமைகள்:

தேவனுடைய இராஜ்ஜியமானது உலகில் எவ்விதமாக விரிவாக்கப்படும் என்பதை வெளிப்படுத்தும் பல உவமைகளை இயேசு கூறினார்.

**தாலந்துகள்:** மத்தேயு 25:14-30; லூக்கா 19:11-27

தேவன் விசுவாசிகளுக்கு கொடுத்த இயலுமைகளினாலும், ஆவிக்குரிய தாலந்துகளின் அறிவினாலும்

இராஜ்ஜியமானது பெருகும் என இந்த உவமை வெளிப்படுத்துகின்றது.

**விதைத்தல்:** மத்தேயு 13:3-8; மாற்கு 4:3-8; லூக்கா 8:5-8

தேவனுடைய வார்த்தையாகிய விதையை விதைப்பதின் மூலம் இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் பெருகும். இந்த விதைத்தலில் கேட்கும் குறிக்கோளின் அடிப்படையில் பல பிரதியுத்தரவுகள் காணப்படும். கனிகள் விதைத்தலின் அடிப்படையில் இல்லை, ஆனால் விதையின் வாழ்க்கையிலும், அதின் மணலின் தன்மையிலும் காணப்படும். (மனிதனின் மனம்).

**களைகளும், கோதுமைகளும்:** மத்தேயு 13:24

தேவனுடைய இராஜ்ஜியத்தின் நல்ல விதைகளுக்குள் “களை” என விபரிக்கப்பட்டுள்ள மக்களை விதைப்பதின் மூலம் இராஜ்ஜியத்தின் பரவுதலை தடுக்க சாத்தான் முயற்சி செய்வான். சாத்தான் விதைத்த களைகள் நல்ல கோதுமைக்கு ஒத்திருக்கும். அறுவடை நேரத்தில் கோதுமையானது அதின் உற்பத்தி செய்யப்பட்ட அளவில் அறியப்படும், எவ்வாறாயினும், களைகள் நன்மைதரும்படியாக ஒன்றையும் உற்பத்தி செய்திராது.

**வலை:** மத்தேயு 13:47-50

இராஜ்ஜியமானது கடலில் வீசப்பட்ட மிகப்பெரிய வலைக்கு ஒப்பாயிருக்கின்றது. எல்லா வகையான மீன்களும் பிடிபடும், ஆனால் கரைக்கு அனைத்து மீன்களும் கொண்டுவந்த பிற்பாடு நல்ல மீன்கள் தீய மீன்களிலிருந்து வேறுபடுத்தப்படும். இராஜ்ஜியமானது அனைத்து ஜாதிகளிலுமிருந்தும் மனுஷ, மனுஷிகளை இழுத்துக்கொள்ளும். இராஜ்ஜியத்தின் இறுதி நிறுவுதலின்போது, யாரை உள்ளடக்க-வேண்டும் என்பதை நியாயத்தீர்ப்பு தீர்மானித்துக்கொள்ளும்.

**கடுகு விதை:** மத்தேயு 13:31-32; மாற்கு 4:31-32; லூக்கா 13:19

தேவனுடைய இராஜ்ஜியமானது கடுகு விதை போல வளரும். விதை மிகச்சிறியதாகும், அத்தோடு அதன் வளர்ச்சியின் ஆரம்பத்தில் அறிகுறிகள் இராது, ஆனால் வளர்ந்தபின் மிகப்பெரிய அளவுடைய-தாக மாறும்.

**புளித்தமா:** மத்தேயு 13:33; லூக்கா 13:21

மூன்றுபடி மாவிலே அடக்கப்பட்ட புளித்தமாவைபோல, தேவனுடைய இராஜ்ஜியமானது உலகத்தின் அனைத்துமிடமும் தேவனுடைய இராஜ்ஜியம் பரவும். தேவனுடைய இராஜ்ஜயமானது வெளிப்படையா-னது அல்ல அது உள்ளானது.

## இராஜ்ஜியத்தின் நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தும் உவமைகள்:

**பத்துக் கன்னிகைகள்:** மத்தேயு 25:1-12
**செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும்:** மத்தேயு 13:44

இராஜ்ஜியத்தின் எதிர்கால நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்தும் பல உவமைகளை இயேசு கூறினார். நியாயத்தீர்ப்பின் போது, இயேசு கிறிஸ்துவாகிய உண்மையான மேய்ப்பனுக்கான ஆடுகள் ஏற்றுக் கொள்ளப்படும். மற்ற அனைவரும் இராஜ்ஜியத்திற்கு உள்ளே வர மறுக்கப்படும்.

## இராஜ்ஜியத்தின் பெறுமதியை வெளிப்படுத்தும் உவமைகள்:

தேவனுடைய இராஜ்ஜியத்தின் மாபெரும் பெறுமதியை காட்டுவதற்கு பல உவமைகளை இயேசு உபயோகித்தார்.

**விலையுயர்ந்த முத்து:** மத்தேயு 13:45-46
**புதைத்திருக்கிற பொக்கிஷம்:** மத்தேயு 13:44

இந்த உவமைகள் தேவனுடைய இராஜ்ஜயமானது எதற்கும் ஒப்பிடமுடியாதளவிற்கு மிகப்பெறுமதியை உடையது என காண்பிக்கின்றது. மனிதனுடைய எந்த சொந்தத்தைவிடவும் அது மிகவும் பெறுமதியானது. நீங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு எதை கொடுத்தாலும், அது ராஜ்ஜியத்திற்கான மிகப் பெரிதான பலியாக இருக்கும்.

**வீட்டெஜமான்:** மத்தேயு 13:52

இந்த உவமையில் இயேசு கிறிஸ்து தன்னை ஒரு வீட்டுக்கு அவசியமானவற்றை கொண்டுவரும் ஒரு வீட்டு உரிமையாளருடன் ஒப்பிட்டு பேசுகின்றார். அம்மனிதன் சில காரியங்களுக்கு பொறுப்பாளனாவான். வீட்டுரிமையாளன் பழைய மற்றும் புதியதானியத்தை, அல்லது பழைய மற்றும் புதிய திராட்சைரசத்தை கொண்டு வருவான். ஆனாலும் அவன் கொண்டு வருபவை வீட்டின் தேவைகளை முற்றாக சந்திக்கின்றதாக இருக்கும். அவ்விதமாகவே இயேசு கொண்டுவருகின்ற தேவராஜ்ஜியமும் முன்னர் உள்ள ராஜ்ஜியத்திற்கு ஒப்பாகவிருக்கும். இன்னும் ஒருவகையில் கூறுவதாயின் இது முற்றிலுமாக புதியது. ஆனாலும் பழையதும் புதியதும் தேவராஜ்ஜியத்தின் குடிகளின் தேவைகளை சந்திப்பதற்கு பெறுமதி வாய்ந்தவையாகும்.

## இராஜ்ஜியத்தின் வாழ்க்கையை வெளிப்படுத்தும் உவமைகள்:

இராஜ்ஜியத்தினுடைய வாழ்க்கை கொள்கைளை வெளிப்படுத்தும் பல உவமைகளை இயேசு கூறினார்.

**இரண்டு குமாரர்:** மத்தேயு 21:28-32

இராஜ்ஜியத்தின் குடும்பத்தில் கீழ்படிவே குமார நிலையின் பரீட்சை என இயேசு போதித்தார்.

**நல்ல சமாரியன்:** லூக்கா 10:30-37

அனைவருக்குமான அன்பின் இராஜ்ஜிய கொள்கை இந்த உவமையின் போதிக்கப்பட்டுள்ளது. எமது அயலவர் யாராவது ஓர் தேவைக்குட்பட்டு, நாம் அத்தேவையை அறிந்து, அவருடைய தேவையை சந்திக்க செய்ய வேண்டும்.

**இரண்டு கடன்காரர்கள்:** லூக்கா 7:41-13

இராஜ்ஜியத்தினுடைய அன்பை அனுபவித்த ஒருவரால் அன்பை எவ்வாறு காட்ட முடியும் என இந்த உவமை போதிக்கின்றது.

**பரிசேயனும், ஆயக்காரனும்:** லூக்கா 18:10-14

பரிசேயன் தனது சொந்த நீதியின் அடிப்படையின் நிமித்தம் தேவனோடு வேண்டுதல் செய்தான். ஆயக்காரன் தேவனுக்கு முன்மாக நிற்பதற்கு தனக்கு எந்த தகுதியும் இல்லை என அறிந்துகொண்டான். இந்த உவமையில் இயேசு தேவனிடத்தில் சேரும் போது மக்கள் எவ்விதமாக வேண்டுதல் செய்து, துதித்து, நன்றி செலுத்தி, விண்ணப்பம் செய்து, இராஜ்ஜியத்திற்கு இடைநடுவராக இருக்கவேண்டுமென போதித்தார். இது ஜெபத்தில் தாழ்மையும், சுய நீதியான பாவத்தின் எச்சரிக்கையையும் போதிக்கின்றது.

**உறுதியான விதவை:** லூக்கா 18:1-8
**உறுதியான நண்பன்:** லூக்கா 11:5-10

இந்த இரு உவமைகளும் ஜெபத்தின் உறுதியான முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகின்றது.

**விசுவாசமுள்ள எஜமான்:** மத்தேயு 25:14-30

இந்த உவமை தேவன் விசுவாசிகளுக்கு கொடுத்த ராஜ்ஜியத்தின் பொக்கிஷங்களை அறிவாகவும், நீதியாகவும் மேற்பார்வை செய்யும் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகின்றது.

**கலியாண விருந்தின் பந்தி:** லூக்கா 14:7-11

இந்த உவமை தாழ்மையாகவும் தேவனுடைய ராஜ்ஜியத்திலிருந்து வரும் முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றது.

**திராட்சச்செடியும், கொடியும்:** யோவான் 15:1-6

இந்த உவமை இயேசு கிறிஸ்துவிற்கு சபையோடு உள்ள தொடர்பை விளக்குகின்றது.

**திராட்சத்தோட்டமும் வேலையாட்களும்:** மத்தேயு 20:1-16

பூலோக மட்டத்தின் அடிப்படையில் நித்திய பலன் கிடைப்பதில்லை என இந்த உவமை போதிக்கின்றது.

**ஊழியக்காரரின் நிலை:** லூக்கா 17:7-10

இந்த உவமை இராஜாவால் கட்டளையிடப்பட்ட வேலைகளை செய்வதும் உபசரிக்கும் நமது பொறுப்பை குறித்தும் போதிக்கின்றது.

**யுத்தஞ்செய்யப்போகிற ராஜா:** லூக்கா 14:31-33
**கோபுரத்தை கட்டும் ஒருவன்:** லூக்கா 14:28-30

இந்த உவமைகள் இராஜ்ஜியத்திற்கான உண்மையான அர்ப்பணிப்பை விளங்கிக்கொள்ளும்படியான முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகின்றது.

**கலியாண வஸ்திரம்:** மத்தேயு 22:10-14

இந்த உவமை இராஜ்ஜியத்தில் நிலைத்திருப்பதற்கு நீதியான ஆடையை அணிந்திருப்பதன் முக்கியத்துவத்தை வெளிக்காட்டுகின்றது. சுய நீதியினால் அல்ல, இயேசு கிறிஸ்துவிற்கூடான நீதியிற்கூடாக இது அடையப்படும்.

**ஐசுவரியவானுடைய தியானம்:** லூக்கா 12:16-21

இந்த உவமை உலகத்தின் நிலையற்ற ஐசுவரித்தைப்பற்றிய கதையாகும். நித்திய தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு முன்னலுள்ள வாழ்க்கையின் நிலையிது.

**தீர்ப்பளித்தல்:** மத்தேயு 7:1-5: லூக்கா 6:41-42
மற்றவர்களை தீர்ப்பிட முன்னர் எம்மை நாமே நியாயந்தீர்க்க வேண்டும் என இந்த உவமை எமக்கு கற்று தருகின்றது.

**அறுவடை:** மத்தேயு 9:37-38; லூக்கா 10:2
இராஜ்ஜியத்தினுடைய விரிவாக்கத்திற்கான அவசியத்தை அவருடைய சீஷர்களுக்கு சுட்டிக்காட்டுவதற்கு இயேசு பயன்படுத்திய கதையே அறுத்து சேர்க்கப்பட வேண்டியதான அறுவடையின் கதை ஆகும். இது ”மீன்பிடிப்பவன்” ”மனிதர்களை பிடிக்கின்றவனாகுவதை” குறித்த உவமையை விபரிப்பதாக இருக்கின்றது.

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. உவமை என்றால் என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

3. தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய உண்மைகளை போதிப்பதற்கு இயேசு ஏன் உவமைகளை உபயோகித்தார்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

4. இயேசுவின் உவமைகளின் மையக்கருத்து என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

வெளிப்படுத்தல் புத்தகம் அதன் பெயரிற்கேற்றாற்போல் வெளிப்படுத்துகின்றது. இது ஏற்கனவே தெரியா-தவற்றை வெளிப்படுத்துகின்றது. எதிர்காலத்தில் நடைபெறப்போகும் காரியங்களை அப்போஸ்தலனாகிய யோவானுக்கு தேவன் வெளிப்படுத்தினார். இயற்கையான அறிவின் மூலமாக இந்த காரியங்களை யோவான் அறிந்து கொள்ளவில்லை. தேவன் இந்த காரியங்களை வெளிப்படுத்தும்போது யோவான் அவற்றை "வெளிப்படுத்தல்" என்னும் புத்தகத்தில் எழுதினார்.

நாம் அறிந்துள்ளபடி இவ்வெளிப்படுத்தல் உலகத்தின் முடிவில் நடைபெறப்போகின்ற காரியங்களை வெளிப்படுத்துகின்றது. உவமைகளைப்போன்றே வெளிப்படுத்தல்களையும் எமது சிந்தையால் விளங்கிக் கொள்வது கடினமாகும். அவைகள் ஆவிக்குரிய சிந்தையோடு விளங்கிக் கொள்ளப்பட வேண்டிய வையாகும்.

இவ்வெளிப்படுத்தல் தேவனுடைய இராஜ்ஜியத்தின் எதிர்காலத்தை குறித்து அதிகமானவற்றை வெளி-ப்படுத்துகின்றது.

1. இந்த புஸ்தகத்தில் தேவனுடைய இராஜ்ஜியத்தை குறித்தான பகுதிகளை படிக்கவும்: வெளிப்படுத்தல் 1:9, 11:15, 12:10
2. கீழ்வரும் பகுதிகள் சாத்தானையும், பூலோக ராஜ்ஜியங்களையும் குறிக்கின்றது: வெளிப்படுத்தல் 16:10, 17:17
3. சாத்தானும் அவனுடைய இராஜ்ஜியத்தின் குடிகளினதும் இறுதி நிலையை வெளிப்ப டுத்தல் 20:10-15 வெளிப்படுத்துகின்றது.
4. தேவனுடைய இராஜ்ஜியத்தின் குடிமக்களின் இறுதி நிலையை வெளிப்படுத்தல் 21-22ம் அதிகாரம் வெளிப்படுத்துகின்றது.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் சம்பந்தமாக இந்த பகுதிகளிலிருந்து நீங்கள் கற்றவற்றை சுருக்கமாக தருக:

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

**அதிகாரம் பதினொன்று**

# இராஜ்ஜியத்தின் பிரதிநிதிகள் (தூதர்கள்)

## நோக்கங்கள்:

இவ்வதிகாரத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்,
- ☐ "இராஜ்ஜியபிரதிநிதி" என்ற வார்த்தையை விபரிக்கவும்,
- ☐ "சாட்சி" என்ற வார்த்தையை விபரிக்கவும்,
- ☐ உலகம் முழுவதிலும் இராஜ்ஜியத்தின் நற்செய்தியை விரிவாக்கம் செய்வதின் முக்கியத்தை விளக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள்.**

**வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள். ( மத்தேயு 10:7-8)**

## அறிமுகம்

இப்பாடத்தில் தேவனுடைய இராஜ்ஜியம்பற்றி பல விடயங்களை நீங்கள் கற்றுக் கொண்டுள்ளீர்கள். தேவனின் மற்றும் சாத்தானின் ஆவிக்குரிய அரசாட்சிகள் இருப்பதைப்பற்றியும் கற்றுள்ளீர்கள். கடந்தகால, நிகழ்கால, எதிர்கால தேவ இராஜ்ஜியம் பற்றியும் பரிசீலித்துள்ளோம். நீங்கள் இராஜாவாகிய இயேசுவின் வாழ்க்கை மற்றும் போதனைகளையும் கற்றீர்கள். தேவ இராஜ்ஜியத்திற்குள் பிரவேசிப்பதற்கான திறவு கோல்களையும், எமக்கு பிரவேசிக்க தடையாக இருக்கின்ற எச்சரிக்கைகளையும் கற்றீர்கள். இராஜ்ஜியத்தின் உவமைகளையும், இராஜ்ஜியத்தின் வாழ்க்கைக்கான முக்கிய கொள்கைகள் பற்றியும் கற்றுள்ளீர்கள்.

இந்த இறுதி அத்தியாயத்தில் நீங்கள் ஒரு சிறப்பான பணியை பெறுவீர்கள். இப்பணியை வாழ்நாள் முழுவதும் நிறைவேற்ற வேண்டும். இப்பணியை செய்ய நீங்கள் தேவ இராஜ்ஜியத்தின் ஸ்தாபதியாக நியமிக்கப் பட்டுள்ளீர்கள்.

## இயேசுவின் ஊழியம்

தேவனுடைய இராஜ்ஜியத்தை நிறுவும் ஒரு சிறப்பு பணிக்காகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார்.

**யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:**

**காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற்கு 1:14-15)**

**அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத்தேயு 4:17)**

தேவனுடைய இராஜ்ஜியத்திற்கான, இயேசு கிறிஸ்துவின் அர்ப்பணிப்பு அவரது ஊழியம் முழுவதிலும் தெளிவாக இருக்கின்றது.

**அவரோ அவர்களை நோக்கி: நான் மற்ற ஊர்களிலும் தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கிக்கவேண்டும், இதற்காகவே அனுப்பப்பட்டேன் என்றார். (லூக்கா 4:43)**

அவர் மரித்து உயிர்த்தெழுந்ததின் பிறகு சில காலம் பூமியில் வாழ்ந்து, அநேகருக்கு தரிசனமானார். ஆனாலும் அவரது செய்தி மாறவில்லை. அவரது கவனம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் மீதிருந்தது.

**அவர் பாடுபாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார். (அப்போஸ்தலர் 1:3)**

தேவ இராஜ்ஜியத்தின் செய்தியை அறிவிப்பதுடனேயே இயேசு ஊழியத்தை ஆரம்பித்தார். (மத்தேயு 4:17) அவர் மண்ணுலக ஊழியத்தை முடிக்கின்றபோதும் இராஜ்ஜியத்தின காரியங்களையே பேசினார். (அப்போஸ்தலர் 1:3) ஊழியத்தை ஆரம்பித்து அதை முடிக்கும் தருவாயிலும் அவரது கவனம் தேவ இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்வதிலேயே இருந்தது.

## பெரிதான கட்டளை

இயேசு மரணமடையும் முன்னதாக தனது இராஜ்ஜியத்தை தொடர்ந்தும் ஸ்தாபிப்பதற்காக தனது சீடர்களை அவர் ஆயத்தம் செய்திருந்தார். இராஜ்ஜியத்தின் செய்தியை எவ்வாறு வழங்க வேண்டும் என்பதை முதல் சிடர்கள் அவதானித்திருந்தனர்.

**பின்பு, அவர் பட்டணங்கள்தோறும் கிராமங்கள்தோறும் பிரயாணம்பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்துவந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். (லூக்கா 8:1)**

அடுத்ததாக இயேசு அவர்களை பங்கு கொள்ள செய்து பயிற்சியளித்தார். அவர் இஸ்ரவேலின் திசைகளுக்கு அனுப்பினார்..

**தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பினார். (லூக்கா 9:2)**

இறுதியாக உலக நாடுகள் முழுவதிலும் இராஜ்ஜியத்தை விரிவாக்கும் உத்தரவாதத்தை அவர்களிடம் ஒப்படைத்தார்.

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:18-20)**

**பின்பு, அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15)**

## இராஜ்ஜியத்தின் ஸ்தானாபதிகள்

இயேசு பரலோகத்திற்கு செல்லுமுன்னர் தன்னை பின்பற்றியோருக்கு கூறியதாவது:

**ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். (லூக்கா 22:29)**

தேவ இராஜ்ஜியம் இயேசுவுக்கு கையளிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டதின் மூலம் அவர் அதை தமது சீஷர்களாகிய எமக்கு நித்திய பேரரசின் ஒரு பகுதியாக இருக்கும் சிலாக்கியத்தை கொடுத்துள்ளார். ஆனால் தேவன் சலுகைக்காக தேர்ந்தெடுக்காமல் ஒரு நோக்கத்துடன் தேர்ந்தெடுத்துள்ளார். உலகமெங்கிலும் தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவாக்கும் செய்யும் உத்தரவாதத்தை இயேசு தமது சீஷர்களிடத்தில் விட்டுச்சென்றுள்ளார். அவர்கள் இராஜ்ஜியத்தின் பிரதிநிதிகளாக (ஸ்தானாபதிகளாக) இருக்கின்றார்கள்.

ஒரு தூதருக்கு வணிக பிரதிநிதித்துவம் வகித்து மற்றொறு இராஜ்ஜியத்திற்கு பிரதிநிதியொருவரை அனுப்பி வைக்கும் உத்தரவாதமும் உண்டு. அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் பேராரசின் அங்கிகரிக்கப்பட்ட முகவராக அவர் செயல்படுவார். பவுல் கூறுகிறார்:

**நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து.... (2 கொரிந்தியர் 5:20)**

நாம் இவ்வுலக இராஜ்ஜியத்திற்கு, தேவனுடைய இராஜ்ஜியத்தை பிரநிதித்துவப்படுத்தி அவரது வேலை-யைச் செய்ய இராஜாவால் அனுப்பப்பட்டவர்கள்.

இராஜ்ஜியத்தின் தூதர்களின் வேலை வாழ்நாள் முழுவதற்குமான உத்தரவாதமாகும். ஒரு முறை நாம் இந்த உத்தரவாதத்தை ஏற்றுக் கொண்டால், எம்மால் திரும்பிப்பார்க்க முடியாது.

**அதற்கு இயேசு: கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார். (லூக்கா 9:62)**

## நாமே சாட்சிகள்

ஸ்தானாபதிகளாகிய நாமே தேவனுடைய இராஜ்ஜியத்தின் சாட்சிகளாக இருக்க வேண்டும். சாட்சியமளிக்கின்ற ஒருவா் முதற்கண் தான் கொண்டுள்ள ஆதாரத்தை வைத்தே சாட்சியமளிக்க வேண்டும். அவா் மாத்திரமே தனிப்பட்ட முறையில் கண்டு, அவதானித்து, அனுபவித்து ஆதாரத்தை உறுதியுடன் சமா்ப்பிக்க கூடியவராக இருப்பாா். இயேசு அவரது சீடா்களுக்கு கூறினாா்:

> **நீங்களும் ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள். (யோவான் 15:27)**

இராஜ்ஜியத்தின் தூதா்களால் பூமி முழவதிலும் சாட்சியிடப்பட்டு இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

சாட்சியிடும் செய்தியாதெனில்.....

> **எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது,**
>
> **அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது.**
>
> **நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். (லூக்கா 24:46-48)**

சீடா்கள் சென்று அவரைக்குறித்து சாட்சியிட்டனா், தேவனும் அவா்கள் மூலம் சாட்சியிடப்பட்டாா்.

> **அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். (எபிரெயர் 2:4)**

நாம் இராஜ்ஜியத்தின் ஸ்தானாபதிகள், அதன் செய்தியை தேவனின் உறுதிப்படுத்தலோடும் அவரது வல்லமையோடும், சாட்சியாக அறிவிக்க வேண்டும்,

## முக்கியமான உத்தரவாதம்

தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்யும் இவ்வுத்தரவாதம் ஏன் முக்கியமானது?

ஏனென்றால் இயேசு சொன்னாா்...

**ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். (மத்தேயு 24:14)**

உலகம் முழவதிலும் இராஜ்ஜியத்தின் சுவிஷேசம் பிரசங்கித்து முடியும் வரையிலும் இறுதியான தேவனுடைய இராஜ்ஜியம் நிறுவப்படமாட்டாது. இது சாதாரண நற்செய்தியல்ல.... இது தேவ இராஜ்ஜியத்தின் நற்செய்தி. நற்செய்திபற்றி பவுல் கூறுகின்றவற்றின் சாராம்சத்தை இவ்வசனங்கள் தருகின்றன:

**அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள்.**

**நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள். மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.**

**நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,**

**அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து, (1 கொரிந்தியர் 15:1-4)**

இயேசு கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி எமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படியே மூன்றாம் நாளில் மறுபடியும் உயிர்த்தெழுந்தார் என்பதே அடிப்படை நற்செய்தி.

நற்செய்தியை அறிவிக்கின்றபோது, இராஜ்ஜியத்தின் செய்தியும் சேர்த்து அறிவிக்கப்பட வேண்டும். எவ்வாறு இராஜ்ஜியத்திற்குள் பிரவேசித்து ராஜ்ஜியத்தின் பிரஜைகளாக ஜீவிக்க வேண்டும் என்பதும் கற்றுக் கொடுக்கப்படல் வேண்டும்.

## இராஜ்ஜியத்தை பகிர்தல்

இராஜ்ஜியத்தின் செய்தி எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற விஷேட வழிமுறைகள் இயேசுவால் வழங்கப்பட்டுள்ளது. பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் என்ற அழைப்பின் செய்தியும் இராஜ்ஜியத்தின் செய்தியில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**யோவான் காவலில் வைக்கப்பட்ட பின்பு, இயேசு கலிலேயாவிலே வந்து, தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:**

**காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று. மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள் என்றார். (மாற்கு 1:14-15)**

**அதுமுதல் இயேசு: மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத்தேயு 4:17)**

பிரசங்கத்தின் மூலமும், கற்பித்தலின் மூலமும் இராஜ்ஜியத்தின் நற்செய்தி பரவியது:

> **பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து.... (மத்தேயு 9:35)**

இயேசு தன்னை பின்பற்றியோருக்கு கூறினார்....

> **போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். (மத்தேயு 10:7)**

இராஜ்ஜியத்தின் செய்தி வார்த்தைகளை மாத்திரம் கொண்டதல்ல. தேவனுடைய இராஜ்ஜியத்தின் செய்தி வார்த்தைகளால் வழங்கப்படும்போது, தேவனுடைய வல்லமை அங்கே ஆளுகை செய்யும். இயேசு இதை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

> **பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார். (மத்தேயு 9:35)**

> **ஜனங்கள் அதை அறிந்து, அவர் பின்னே போனார்கள். அவர்களை அவர் ஏற்றுக்கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து அவர்களுடனே பேசி, சொஸ்தமடையவேண்டு மென்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார். (லூக்கா 9:11)**

இயேசு தமது சீடர்களிடத்தில், ஒவ்வொரு நகரத்திற்கும் சென்று இராஜ்ஜியத்தின் செய்தியை உபதேசிப்பது மாத்திரமல்ல...

> **அவ்விடத்திலுள்ள பிணியாளிகளைச் சொஸ்தமாக்கி: தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குச் சமீபமாய் வந்திருக்கிறது என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். (லூக்கா 10:9)**

> **தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்த மாக்கவும் அவர்களை அனுப்பினார். (லூக்கா 9:2)**

வல்லமையின் ஆளுகை..... அற்புதங்கள் மற்றும் குணமாகுதல்... என்பன தேவனுடைய இராஜ்ஜியத்தின் கிரியைகளாக இருக்கின்றது. பவுல் கூறினார்:

> **தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது. (1கொரிந்தியர் 4:20)**

## உத்தரவாதத்தின் (கட்டளையின்) நிறைவேற்றம்:

ஆரம்ப சபையின் காலத்தில் இராஜ்ஜியத்தின் பெரிதான ஸ்தானாபதியாக இருந்த அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதாவது:

**உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**

**என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:4-5)**

முதலாவது சபையானது தேவ இராஜ்ஜியத்தை வியாபிப்பதற்காக கற்பிப்பதையும், பிரசங்கிப்பதையும் மாத்திரம் செய்யவில்லை. அது இறையியல் கல்விமான்களாலேயோ, கட்சிகளினாலேயோ நிகழ்ச்சித் திட்டங்களினால் அல்லது பெரிய கட்டிடங்களினாலேயோ விரிவாக்கம் செய்யப்படவில்லை. உத்தரவாத மிக்க இராஜ்ஜியத்தின் செய்தியை இராஜாவின் வல்லமையுடன் இணைத்து செயல்படுத்தியமையினாலேயே நிறைவேறியது.

ஆதி திருச்சபையின் மைய நோக்கம் இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்வதிலேயே இருந்தது. உபத்திரவங்கள் இருப்பினும் விசுவாசிகள் இராஜ்ஜியத்தின் தூதர்களாக தங்கள் உத்தரவாதத்தை நிறைவேற்றினர்.

**அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள்.**

**சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 8:1,4)**

அவர்களுடைய பின்தொடர் திட்டங்கள் யாவும் சபைகளை நிறுவுவதாகவே இருந்தது, அதற்கான வழிகாட்டல் தேவனுடைய இராஜ்ஜியமாக இருந்தது.

**அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கின பின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து, சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். (அப்போஸ்தலர் 14: 21-22)**

திருச்சபையைச் சார்ந்தவர்களின் செய்தியும் தேவனுடைய இராஜ்ஜியமாகவே இருந்தது.

**தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளை குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்போஸ்தலர் 8:12)**

திருச்சபையின் தலைவர்களது கவனமும் தேவனுடைய இராஜ்ஜியமாகவே இருந்தது.

**பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக்குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக்கொண்டு வந்தான். (அப்போஸ்தலர் 19:8)**

பவுலினது ஊழியத்தில் அவனது கவனமும் தேவனுடைய இராஜ்ஜியமாகவே இருந்தது. தனது ஊழியத்தின் முடிவில் பவுல் தன்னுடைய விசுவாசிகளுக்கு கூறினார்:

> **இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்க மாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன். (அப்போஸ்தலர் 20:25)**

இறுதியாக அவன் ரோமாபுரியில் சிறைபிடிக்கப்பட்டு இருந்தபோதும் அவனது கவனம் இராஜ்ஜியத்தை விஸ்தரிப்பதிலேயே இருந்ததாக வேதாகமம் கூறுகின்றது:

> **மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான். (அப்போஸ்தலர் 28:31)**

## இராஜ்ஜியம் கட்டப்படல்

பல சந்தர்ப்பங்களில் நவீன தேவாலயங்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டுவதன் முக்கியத்தை இழந்துவிட்டது. நாம் பெரிய ஆலயங்களையும், அழகான கட்டிடங்களையும், பெரிய ஸ்தாபனங்களையும் கட்டுகின்றோம். அநாதை இல்லங்கள், பள்ளிகள், வைத்தியசாலைகளை கட்ட வலியுறுத்துகின்றோம்.

சபை ஊழியத்தில் இவைகள் நற்காரியங்கள்தான், ஆனால் இது ஒரு பகுதியாக இருக்க வேண்டுமேயொழிய மைய கவனத்தை ஈர்க்க கூடாது. நிதி திரட்டுவதும் கட்டுமான பணிகளைச் செய்வதும் எமது உத்தரவாத மல்ல. இவ்விதமான காரியங்கள் தனிப்பட்ட இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்யுமேயொழிய தேவனுடைய இராஜ்ஜியத்தை உலகளாவிய ரீதியில் விஸ்தரிக்காது.

பவுல் எச்சரிக்கும்படியாக கூறியதாவது:

> **மற்றவர்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குரியவைகளைத் தேடாமல், தங்களுக் குரியவைகளையே தேடுகிறார்கள். (பிலிப்பியர் 2:21)**

எந்தவொரு ஊழியத்தின் திட்டமும் பின்வரும் கேள்வியானால் நியாந்தீர்க்கப்படல் வேண்டும். தேவனு டைய இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்ய இத்திட்டம் எவ்வகையில் உதவும்? நாம் திருமணம், குடும்பம், தீர்க்கதரிசனம் போன்ற அநேக விடயங்களைக் குறித்து கற்றுக் கொடுக்கின்றோம். இன்றைய உலகத்திற்கு தேவையான நல்ல பாடங்கள்தான் இவைகள். எமது ஆலய மேடைகளில் பேச்சாளர்களாக திகழ நாம் பயிற்சி பெற்றவர்களதான். ஆனால் ஒவ்வொரு செய்தியும் பின்வரும் கேள்வியினால் பரீசீலிக்கப்பட வேண்டும். தேவனுடைய இராஜ்ஜியத்தின் கொள்கையோடு இச்செய்தி எவ்வாறு தொடர்புபட்டிருக்கின்றது?

இக்கேள்விகளை உங்களிடமே கேட்டுப் பாருங்கள்.....

- தேவனுடைய இராஜ்ஜியத்தின் செய்தியை நான் கேட்டு எவ்வளவு காலமாகின்றது?
- தேவனுடைய இராஜ்ஜியத்தை விரிவாக்கம் செய்ய எனது சபை எவ்வாறு உத்தரவாதத்தை

நிறைவேற்றுகின்றது?

- தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஸ்தானாபதி என்ற வகையில் தனிப்பட்ட முறையில் எனது பங்கை நான் எவ்வாறு நிறைவேற்றுகின்றேன்?

தேவனுடைய இராஜ்ஜியத்தைக் குறித்து நாம் கவனம் செலுத்தும்படியாக இயேசு ஜெபத்தை கற்றுத் தந்தார். நாம் ஜெபிக்க வேண்டிய விதமாவது:

> **உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. (மத்தேயு 6:10)**

எமது வாழ்வில் தேவ இராஜ்ஜியத்திற்கு முன்னுரிமை கொடுத்து அதை தேட வேண்டும்.

> **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும். (மத்தேயு 6:33)**

> **தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும். (லூக்கா 12:31)**

உலகநாடுகளில் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கும் கருவியாக இருக்கும்படியாகவே தேவன் சபையை எழுப்பினார். அநேக சபைகள் இவ்வழைப்பின் தரிசனத்தை இழந்துவிட்டன. அவர்கள் இதற்கு பதிலாக அங்கத்தவர்களையும் பணத்தையும் சேர்ப்பதில் ஈடுபட்டு, தங்களுடைய இராஜ்ஜியத்தை கட்டுகின்றார்கள்.

போதகர்கள், சபைகள், நிறுவனங்களிடையே போட்டி ஏற்படுகின்றமையால், கிறிஸ்துவின் சரீரத்தின் ஐக்கியம் உடைந்துவிட்டது. தேவனுடைய இராஜ்ஜியம் என்ற தரிசனத்தை சகல உள்ளுர் சபைகளும் இழந்துவிட்டன. தேவனுடைய இராஜ்ஜியத்தை கட்டுவதற்கு உதவி செய்வதை தவிர்த்துவிட்டு, நாம் பெரிய கட்டிடங்கள், நீண்ட அங்கத்துவ பட்டியல், அதிகரித்த பொருளாதாரவளம் என்பவற்றை நோக்கிப்பார்த்து சொந்த இராஜ்ஜியங்களை கட்டிக் கொண்டிருக்கின்றோம்.

தேவனுடைய இராஜ்ஜியம்பற்றி போதிப்பது மாத்திரம் சபையின் வேலையாக இராமல் இராஜ்ஜியத்திற் குரியவர்களாக அதற்கு மாதிரிகளாக ஜீவிப்பதும் அவசியம். நாம் அந்த சவாலை சந்திப்போமா?

சபையானது அதன் உறுப்பினரின் பட்டியலை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பெரிதான கட்டிட நிர்மாணிப்பு பணிகளையும், உறுப்பினர்களை அதற்காக உற்சாகப்படுத்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சபைபிரிவுகளற்ற, கலாச்சார மற்றும் தேசிய எல்லைகளைக் கடந்து, சபையானது முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும் தேட வேண்டும். சபை முதலாவதாக தேவனுடைய இராஜ்ஜியத்தை தேடும்போது மற்றவைகள் எல்லாம் கூட்டிக் கொடுக்கப்படும்.

## பழைய ஏற்பாட்டு உதாரணம்

“நீங்கள் பழுகிப்பெருகி பூமியை நிரப்புங்கள்” என்பதே தேவன் மனிதனுக்கு கொடுத்த முதலாவது கட்டளை. (ஆதி 1:28) அது மக்களுக்கு வலியுறுத்தப்பட்டிருந்தது. தேவசாயலாக படைக்கப்பட்ட

மனிதர்களால் பூமி நிரம்பி, தேவனுடன் தனிப்பட்ட உறவை பேண வேண்டும் என்பது இலக்காக இருந்தது. ஆனால் ஆதியாகமம் 11:1-9ல் அந்த முக்கியத்துவம் மனிதரால் மாற்றப்பட்டுவிட்டதை நாம் காண்போம். உங்களது வேதாகமத்தில் இதை வாசியுங்கள்.

பூமியில் ஜனங்கள் பெருகியதும், சிநேயார் தேசத்தில் பெரிய ஒரு நகரத்தையும் கோபுரத்தையும் கட்டுவது அவர்களுக்கு முக்கியமானதாக காணப்பட்டது. மக்களைவிட அவர்களது திட்டங்கள் அவர்களது மையமாக மாறிவிட்டது. நோக்கங்கள் அவர்களது சுயநலத்தை கொண்டிருந்தது. ஒரு நகரத்தையும், வானத்தை அளாவும் சிகரமுள்ள ஒரு கோபுரத்தையும் கட்டி, தமக்குப் பேர் உண்டாக்க விரும்பினர்.

மக்களின் வேலையை பார்ப்பதற்காக பாபேல் கோபுரத்தண்டைக்கு தேவன் வந்தார். ஆனால் அப்பணி அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை, அதனால் அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை பார்க்க வந்தார். இதுவே எமது அதிகமான சபைகளில் நடைபெறுகின்ற காரியமாக இருக்கின்றது. நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தை விஸ்தரிப்பதற்கு பதிலாக பெரிதான கோபுரங்களையும் அங்கத்துவங்களையும் நிறுவனத்திற்காக கட்டிக் கொண்டிருக்கின்றோம். பெரிய கட்டிடங்களையும் கட்டுகின்றோம். நாம் என்ன செய்கின்றோம் என்பதை பார்க்க தேவன் வந்தால் அவர் என்ன சொல்வார்?

சிநேயார் தேசத்து மக்கள் "எங்களுக்காக ஒரு நகரத்தை கட்டுவோம்" என்றார்கள். மனிதரால் ஒரு நகரம் கட்டப்படுவதற்கும் தேவனால் உருவாக்கப்படுவதற்கும் வித்தியாசமுண்டு. இந்த மக்கள் சுய முயற்சியால், சுயநலமான ஆசையுடன் கட்டினர்.

தேவன் கிரியைச் செய்து அவர்களின் பாஷையை குழப்பிவிட்டார்:

> **நாம் இறங்கிப்போய், ஒருவர் பேசுகிறதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார்.**
>
> **அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப் பண்ணினார். அப்பொழுது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள்.**
>
> **பூமியெங்கும் வழங்கின பாஷையைக் கர்த்தர் அவ்விடத்தில் தாறுமாறாக்கினபடியால், அதின்பேர் பாபேல் என்னப்பட்டது. கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின் மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார். (ஆதியாகமம் 11:7-9)**

ஒவ்வொருவரும் வெவ்வேறு பாஷைகளை பேசினபடியால் அவர்களது திட்டம் நிறுத்தப்பட்டது.

இன்று தேவாலயங்களுக்குள் முரண்பாடான பல குரல்களை நாம் கேட்கின்றோம். தொடர்பாடல்கள் குழப்பத்திலிருக்கின்றது, நாம் எமது கோபுரங்களைக் குறித்து ஆராய வேண்டும். எமது வேலைத்-திட்டங்களில் தேவன் இல்லாதிருக்கலாம். பாபேல் கோபுரத்தைப்போன்று இராஜ்ஜியமானது கட்டப் படாமல் கீழே இடிந்து விழுந்திருக்கலாம். சிலர் தமது சொந்த திட்டங்களுக்கமைய வேலையை முடிக்க நினைப்பதால் வேலையை தமது விக்கிரகமாக்கிக் கொள்கின்றனர்.

## புதிய ஏற்பாட்டு உதாரணம்

இயேசு கிறிஸ்து உலகமுழுவதிலும் சீஷர்களை பெருக்கும்படியாக ஆரம்ப சபைக்கு உத்தரவாதத்தை

கொடுத்தார், எருசலேமில் தேவாலயத்தை கட்டும்படி சொல்லவில்லை. ஆனாலும் அவர்கள் மிக விரைவாக நிர்வாக அமைப்புகளை உருவாக்குவதை கண்டு கொள்கின்றோம். (அப்போஸ்தலர் 6) அவர்கள் உலகமெங்கும் இயேசுவின் கட்டளையை நிறைவேற்ற செல்லாமல் எருசலேமிலேயே வெகுஜனத்தை உருவாக்கினர். இதனால் தேவன் விசுவாசிகளுக்குள் உபத்திரவத்தை அனுமதித்தார்.

> **அவனைக் கொலைசெய்கிறதற்குச் சவுலும் சம்மதித்திருந்தான். அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர்தவிர, மற்ற யாவரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப்போனார்கள். (அப்போஸ்தலர். 8:1)**

இதனால் அவர்கள் இராஜ்ஜியத்தின் தூதர்களாக தமது உத்தரவாதத்தை செய்ய முற்பட்டனர்.

> **சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 8:4)**

“பெரிய தேவாலயங்கள்” சென்றுவிட்டபோதும், தேவனுடைய மக்கள் வாழ்கின்றனர். பெரிதான கட்டிடங்களை கட்டுவதின் மூலம் தேவனுடைய இராஜ்ஜியம் உலகத்தில் ஸ்தாபிக்கப்படாது. அவைகள் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மாத்திரமே!. இராஜ்ஜியத்தின் செய்தியை தாங்கி சாட்சியாக இருக்கின்ற ஸ்தானாபதிகளுக்கூடாகவும், சீஷத்துவத்திற்கூடாகவுமே அது பரவும்.

முந்தைய அதிகாரமான “இராஜ்ஜியத்தின் உவமைகள்” மூலம் இராஜ்ஜியம் உலகமெங்கும் பரவு-வது விபரிக்கப்பட்டது. லூக்கா 19 மற்றும் மத்தேயு 25 ஆகிய அதிகாரங்களிலுள்ள தாலந்தின் உவமை ஆவிக்குரிய வரங்களையும் திறமைகளையும் இராஜ்ஜியத்திற்கென ஞானத்துடன் பாவிப்பதால் பரவுவதை வெளிப்படுத்துகிறது.

புளித்தமாவின் உவமையானது (மத்தேயு 13:33) இராஜ்ஜியம் சிறிதளவில் ஆரம்பித்து, படிப்படியாக பரவுவதை வெளிப்படுத்துகின்றது. கடலுக்குள் வலையை வீசுதல் பற்றிய உவமை தேவன் பல தேசத்தாரிடத்திலுமிருந்து ஆண்களையும் பெண்களையும் பிடிப்பதை வெளிப்படுத்துகின்றது.

நற்செய்தி என்ற விதையினால் ஆண்கள் மற்றும் பெண்களின் மனதில் இராஜ்ஜியம் பரவுகின்றது. பௌதீக உலகத்தில் விதை வளருவதைப்போன்றே இராஜ்ஜியத்தின் நந்செய்தி என்னும் விதை வளரும் என்பதை விதை விதைப்புபற்றிய உவமையினால் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது. (மாற்கு 4:26-27)

## உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக

தேவனுடைய இராஜ்ஜியம் நிரந்திரமாக உருவாக்கப்பட்டு, சாத்தானுடைய இராஜ்ஜியம் இறுதியாக தோல்வியுறும் மிகப்பெரிதான ஒரு நாள் வருகின்றது:

> **அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். (வெளிப்படுத்தல் 12:10)**

**அதன்பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். (1 கொரிந்தியர் 15:24)**

**ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான். அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின. (வெளிப்படுத்தல் 11:15)**

**அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார். அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். (லூக்கா 1:33)**

அந்த மிகப்பெரிதான நாள் வரைக்கும் உங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதி:

**கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென். (2 தீமோத்தேயு 4:18)**

உங்களுக்கான எமது இறுதி விண்ணப்பம்:

**தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று.... (1 தெசலோனிக்கேயர் 2:12)**

## சுய பரீட்சை

1. திறவுகோல் வசனத்தை மனனமாக எழுதவும்.

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

2. “இராஜ்ஜியபிரதிநிதி” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

3. “சாட்சி” என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

4. பவுல் தனது பிரசங்கத்தில் வசனத்தோடு மட்டுமல்லாது கூறியது என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

5. இராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை பரப்புதல் ஏன் முக்கியமான பொறுப்பாகும்?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

6. இயேசுவினுடைய ஊழியத்தின் மையக்கருத்து என்ன?

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் புத்தகம் தொடக்கம் யூதா புத்தகத்தை வரைக்கும் விசுவாசிக-ளின் இராஜ்ஜியத்திற்கான இந்த அர்ப்பணிப்பின் முதல் முயற்சியை பதிவு செய்துள்ளது. கீழ்வரும் பகுதிகளை படித்து, இது எவ்வாறு அடையப்பெற்றது என்பதை பார்க்க:

அப்போஸ்தலர் : 1:3,6,9-11 8:12 14:22 19:8 20:25 28:23,31

ரோமர் 14:17

1 கொரிந்தியர் 4:20 6:9-10 15:24,50

கலாத்தியர் 5:19-21

எபேசியர் 5:5

கொலோசெயர் 1:13 4:11

1 தெசலோனிக்கேயர் 2:12

2 தெசலோனிக்கேயர் 1:5

1 தீமோத்தேயு 6:15 17:14 19:16

2 தீமோத்தேயு 4:1,18

எபிரெயர் 1:8 11:33 12:28

யாக்கோபு 2:5

2 பேதுரு 1:11

# சுய பரீட்சைக்கான விடைகள்

**அதிகாரம் ஒன்று:**

1. ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது முடிவு வரும். மத்தேயு 24:14

2. பௌதீகத்திலும் அல்லது ஆன்மீகத்திலும் பிரிவுகள் உண்டு. 1 கொரிந்தியர் 15:44-19

3. சாத்தானின் இராஜ்ஜியம் மற்றும் தேவனுடைய இராஜ்ஜியம்.

4. சாத்தானின் இராஜ்ஜியத்தை சாத்தான் ஆளுகின்றான். திருத்துவ தேவனின் (பிதா, குமாரன், பரிசுத்தாவியானவர்) இராஜ்ஜியத்தை தேவன் ஆளுகை செய்கின்றார்.

5. சாத்தானின் இராஜ்ஜியத்தின் குடியிருப்பில் சாத்தானும், அசுத்த ஆவிகளும், பாவத்தில் ஜீவித்த அனைத்து மனிதர்களும், தேவனுக்கெதிராக புரட்சிசெய்தவர்களும் இருப்பார்கள்.

6. தேவனுடைய இராஜ்ஜியத்தில் வசிப்போர் பிதாவாகிய தேவன், இயேசு கிறிஸ்து, பரிசுத்தாவியானவர், தூதர்கள் போன்றோருடன் வசிப்பதோடு, தேவனுக்கு கீழ்ப்படிந்து நீதிமான்களாகவும் இருப்பார்கள்.

7. இரண்டுக்கும் இடையே வித்தியாசமில்லை.

8. இராஜ்ஜியத்தின் மக்கள் அதன் இராஜாவின் விதிகளுக்குட்பட்டவர்கள்.

**அதிகாரம் இரண்டு:**

1. அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார், அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது என்றான். லூக்கா 1:33

2. ஒரு இராஜாவே தேசத்தின், பழங்குடியினரின் அல்லது ஜாதியினரின் இறையாண்மை மிக்க ஆட்சியாளர். இறையாண்மை என்பதன் அர்த்தமானது சர்வவல்லமையும், அதிகாரமும், வெளியாரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கின்றவர் என்பதாகும்.

3. இயேசு.

4. மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்.

**அதிகாரம் மூன்று:**

1. அப்பொழுது, ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து: வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக

ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். மத்தேயு 25:34

2. மூன்றாம் அதிகாரத்தின் தேவராஜ்ஜியத்தின் கடந்தகால வரலாற்றை உங்கள் கருத்துடன் ஒப்பிடுக.

3. மூன்றாம் அதிகாரத்தின் தேவராஜ்ஜியத்தின் நிகழ்கால வரலாற்றை உங்கள் கருத்துடன் ஒப்பிடுக.

4. மூன்றாம் அதிகாரத்தின் தேவராஜ்ஜியத்தின் எதிர்காலத்தை உங்கள் கருத்துடன் ஒப்பிடுக.

5. மூன்றாம் அதிகாரத்தின் தேவராஜ்ஜியத்தின் அடிப்படை சத்தியத்தை மீளாய்வு செய்யவும்.

**அத்தியாயம் நான்கு:**

1. பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார். மத்தேயு 16:19

2. திருச்சபை

3. தீய சக்திகளை கட்டும்படிக்கு ஆவிக்குரிய வல்லமைகளுண்டு, நல்ல வல்லமைகளை கட்டவிழ்க்கவும், சுவிசேஷம் பரவும்படிக்கு ராஜ்ஜியத்தின் கதவுகளை திறக்கவும்.

4. பாவத்திலிருந்து மனந்திரும்பி மறுபிறப்பை அனுபவிக்கவும்.

5. ஆவிக்குரிய பிறப்பை அனுபவிக்கவும், மறுபடியும் பிறக்கவும்.

6. விசுவாசத்தினால் மறுபிறப்படைந்ததும் தேவ ராஜ்ஜியத்திற்கென்று ஆவிக்குரிய முதிர்ச்சியை நோக்கி செல்ல வேண்டும்.

7. கட்டுதல் என்பது விலங்கிடல் அல்லது கட்டிவைத்தல் எனப்படும். அது ஓர் அறைக்கதவை அல்லது அறையை மூடுதல் அல்லது பூட்டிவைத்தல் போன்றதாகவிருக்கும்.

8. கட்டவிழ்த்தல் என்பது விடுவித்தல் அல்லது வெளியேற்றுதல் எனப்படும். அது ஓர் அறைக்கதவை திறப்பதற்கு ஒப்பானது.

**அத்தியாயம் ஐந்து:**

1. பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. மத்தேயு 7:21.

2. 1 கொரிந்தியர் 6:9-10, கலாத்தியர் 5:19-21.

3. அ. பொய், ஆ. உண்மை இ. உண்மை ஈ. உண்மை, உ. உண்மை ஊ. பொய், எ. உண்மை.

4. 1 யோவான் 1:8-9.

5.

| | | | |
|---|---|---|---|
| அ. | 2 | | |
| ஆ. | 5 | க. | 23 |
| இ. | 9 | கா. | 18 |
| ஈ. | 11 | கி. | 19 |
| உ. | 6 | கீ. | 20 |
| ஊ. | 10 | கு. | 16 |
| எ. | 12 | கூ. | 21 |
| ஏ. | 7 | கெ. | 22 |
| ஐ. | 3 | கே. | 17 |
| ஒ. | 14 | கை. | 3 |
| ஓ. | 8 | கொ. | 4 |
| ஔ. | 15 | கோ. | 1 |

**அத்தியாயம் ஆறு:**

1. இந்த மாதிரியின்படி சகல வேலைகளும் எனக்குத் தெரியப்படுத்த, இவையெல்லாம் கர்த்தருடைய கரத்தினால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது என்றான். 1 நாளாகமம் 28:19.

2. அசல் அல்லது மாதிரி ஏதோ ஒரு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட முறை அல்லது சாயலாகும். அது ஏதாவது ஒன்றுக்கான ஒரு வடிவமைப்பாக அல்லது பிரதிபண்ணப்பட்டதாக இருக்கும்.

3. ஒரு கொள்கை அல்லது நடத்தையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சத்தியம், முறை அல்லது ஆட்சியாகவிருக்கும். பொதுவான உண்மை மற்ற உண்மைகளுக்கு ஆதாரமாக அமையும்.

4. வேதாகம முறையானது, வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய நோக்கங்களை பிரதிபலிக்கும் உதாரணமாகும்.

5. வேதாகம கோட்பாடு பெரும்பாலும் ஆவிக்குரிய சத்தியத்தை கற்றுத்தரும். இக்கொள்கைகள் ஆதாரக் கொள்கைகளை இணைத்தக் கொள்வதாக அமையும்.

6. இந்த வேதாகம கொள்கைகளும் மாதிரிகளும் தேவனுடைய இராஜ்ஜியத்தின் வாழ்வை ஆளுகை செய்யும்.

**அத்தியாயம் ஏழு:**

1. என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன். (லூக்கா 22:29)

2. நீதி

3. முதலாவது தேவனை நேசி: இரண்டாவதாக உன்னை நேசிப்பது போன்று அயலானையும் நேசி.

4. - நீங்கள் இராஜ்ஜியத்தை பராமரிக்க அவர்களுடன் வாழுதல் வேண்டும்.
   - இயேசு அவர்களும் முக்கியமானவர் என்றார்.
   - இராஜ்ஜியத்தின் கனிகள் சோதித்தறியப்படும்.
   - எதிர்கால இராஜ்ஜியத்திற்கு அதன் கொள்கைகளை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

5.

| | |
|---|---|
| அ. 2 | ஈ. 3 |
| ஆ. 1 | உ. 5 |
| இ. 4 | ஊ. 6 |

**அதிகாரம் எட்டு:**

1. என் பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? யாக்கோபு 2:5

2. இவ்வதிகாரத்தில் கொடுக்கப்பட்ட கொள்கைகளை மீட்டவும்:

| | | |
|---|---|---|
| அ. பணக்காரன் | ஊ. வெளிப்புரம் | ஓ. பெரிதான |
| ஆ. சந்தோஷம் | எ. சமாதானம் | ஔ. முதலாவது |
| இ. வெற்றியாளர் | ஏ. வெகுமதி | க. பெரிய |
| ஈ. நிரப்புதல் | ஐ. தலைவர்கள் | கா. அன்பின் பெருமதி |
| உ. இரக்கம் | ஒ. உயர்த்துதல் | கி. பிள்ளைகள் |
| கீ. வாழ்க்கை | கை. பார் | |
| கு. இரட்சிப்பு | கொ. ஓய்வு | |
| கூ. அன்பான | கோ. உலகத்தின் | |
| கெ. பெற்றது | கௌ. வெளிப்படுத்தியது | |
| கே. முடியும் | | |

**அதிகாரம் ஒன்பது:**

1. ஜனங்கள் அதை அறிந்து, அவர் பின்னே போனார்கள்; அவர்களை அவர் ஏற்றுக் கொண்டு, தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்து அவர்களுடனே பேசி, சொஸ்தமடையவேண்டு மென்றிருந்தவர்களைச் சொஸ்தப்படுத்தினார். லூக்கா 9:11

2. அ. புதிய
ஆ. பழைய
இ. பழைய
ஈ. புதிய
உ. பழைய
ஊ. புதிய
எ. பழைய
ஏ. புதிய
ஐ. புதிய
ஒ. பழைய
ஓ. புதிய
ஔ. பழைய
க. பழைய
கா. புதிய
கா. புதிய
கி. பழைய
கீ. புதிய
கு. பழைய
கூ. பழைய
கெ. புதிய
கே. பழைய
கை. புதிய
கொ. பழைய
கோ. புதிய
கௌ. புதிய
க். பழைய

3. பதில் ஆ

4. புதிய ஏற்பாட்டின் கொள்கைகள் யாவும் பழைய ஏற்பாட்டின் அத்திவாரத்தின் அடிப்படையில் விரிவாக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் பத்து:

1. அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: பரலோகராஜ்யத்தின் ரகசியங்களை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது, அவர்களுக்கோ அருளப்படவில்லை. மத்தேயு 13:11

2. ஆவிக்குரிய சத்தியத்தை விளக்கும்படியாக பௌதீக உலகத்தின் உவமைகள் உதாரணங்களாக பாவிக்கப்படுகின்றன. உவமைகள் என்பதன் உண்மையான கருத்து "அருகிலிருப்பவற்றோடு ஒப்பிடுதல்" என்பதாகும். இயேசு கிறிஸ்து உவமைகளை பாவித்தபோது ஆவிக்குரிய சத்தியத்தை ஒப்பிட்டு பாவித்தார். அவை பரலோகத்தை அர்த்தப்படுத்தும் உலக கதைகளாக இருந்தன.

3. பரலோகத்தின் சத்தியங்களை இயேசு கிறிஸ்து உவமைகளாக பாவித்து கற்றுக் கொடுத்தபடியால் ஆவிக்குரிய சிந்தையோடு அதன் கொள்கைகளை கற்றுக் கொள்ள வேண்டும். அவைகளை பாவ சிந்தையோடு விளங்கிக் கொள்ள முடியாது. இயேசு இந்த உவமைகளை, ஆவிக்குரிய கொள்கைகளை மறுதலிக்கும் அவிசுவாசிகளிடத்தில் பாவித்தார்.

4. தேவனுடைய ராஜ்ஜியம்.

**அதிகாரம் பதினொன்று:**

1. போகையில், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கியுங்கள். வியாதியுள்ளவர்களைச் சொஸ்தமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தோரை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள்; இலவசமாய்ப் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்.
   மத்தேயு 10:7-8

2. ஒரு தூதருக்கு வணிக பிரதிநிதித்துவம் வகித்து மற்றொரு ராஜ்ஜியத்திற்கு பிரதிநிதியொருவரை அனுப்பி வைக்கும் உத்தரவாதமும் உண்டு. அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் பேரரசின் அங்கிகரிக்கப்பட்ட முகவராக அவர் செயல்படுவார்.

3. சாட்சியமளிக்கின்ற ஒருவர் முதற்கண் தான் கொண்டுள்ள ஆதாரத்தை வைத்தே சாட்சிய மளிக்க வேண்டும். அவர் மாத்திரமே தனிப்பட்ட முறையில் கண்டு, அவதானித்து, அனுபவித்து ஆதாரத்தை உறுதியுடன் சமர்ப்பிக்க கூடியவராக இருப்பார்.

4. தேவனுடைய வல்லமை அங்கே ஆளுகை செய்யும்.

5. தேவனுடைய இராஜ்ஜியத்தின் நற்செய்தி உலகத்தின் கடைசிபரியந்தமும் போதிக்கப்படாமல் தேவனுடைய இராஜ்ஜியம் நிறுவப்படமாட்டாது.

6. தேவராஜ்ஜியத்தின் செய்தியை பரப்ப வேண்டும்.